
https://tamileelamarchive.com/

# எரிமலை

டிசம்பர் 2005



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# எரிமலை 25

கலை, பண்பாட்டு, அரசியல், சமூக சஞ்சிகை

## எரிமலை வெள்ளி மலர் - 2006

புலம்பெயர் மண்ணில் வெளிவந்துகொண்டிருக்கும் எரிமலை சஞ்சிகை தனது இருபத்தைந்தாவது வருடத்தைக் கடக்க இருக்கின்றது.

எரிமலை சஞ்சிகையின் சமூக, இலக்கிய, அரசியல், மானுடப் பணியை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்துகொண்டிருக்கும் மூத்த, இளைய படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. மொழிபெயர்ப்புக்களும், கட்டுரைகளும், கவிதைகளும், குறுநாவல்களும் வரவேற்கப்படுகின்றன.

### இலக்கியப் போட்டி

- எரிமலை சஞ்சிகை நிர்வாகத்தினர் சமகாலத்திலேயே கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல்களுக்கான போட்டிகளையும் நடாத்தத் தீர்மானித்திருக்கின்றனர்.
- சர்வதேசஅளவில் படைப்பாளிகளை கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றனர்.
- மேலும் ஓவியம், கார்ட்டூன், குறும்படப்பிரதி, நவீன நாடகப்பிரதி, பாடல்கள், புகைப்படங்கள் ஆகியனவும் போட்டிக்காக உலகஅளவில் வரவேற்கப்படுகின்றன.

எரிமலை சஞ்சிகையின் வெள்ளிவிழா மலரில்
வெற்றிபெறும் படைப்புக்கள் பிரசுரமாக உள்ளன

- படைப்புக்களை அனுப்பி வைப்பதன் மூலம் சர்வதேச அளவிலுள்ள தமிழ்ப் படைப்பாளிகளை இனம் காணுதல்.
- சமூக, மானுட விடுதலைக்கான எழுச்சி, பற்றுநிலையை ஓங்கச் செய்தல்.
- திக்கும் சிதறுண்டு கிடக்கின்ற படைப்பாளுமைகளை கூட்டுழைப்புக்காக அழைத்தல் . எனப் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு இச்செயற்பாட்டை நிர்வாகம் முன்னெடுக்கின்றது.

மின்னஞ்சல் மூலம் அனுப்புவோர் : e.mail: info@erimalai.info

தபால் மூலம் அனுப்புவோர்: ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrenees,
75020 Paris, FRANCE.

படைப்புக்களை அனுப்புவோர் மூலப்பிரதிகளை வைத்துக்கொண்டு ஒளிநகலை மட்டும் அனுப்பி வைப்பது விரும்பத்தக்கது.

போட்டிகளுக்கான பரிசில்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# உள்ளே...


எரிமலை




தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய மாவீரர்நாள் உரை




புதிய சனாதிபதியும் சமாதானத்தின் தலைவிதியும்




நேர்காணல்: நிலாந்தன்






தமிழீழத்தில் பிளாஸ்டிக் பைகள் - புரையோடுமுன் புண்ணுக்கு மருந்து போடலின் அவசியம்

## கட்டுரைகள்


| | |
|---|---|
| எல்லாளன் | 14 |
| நிலாந்தன் | 21 |
| தி.தவபாலன் | 28,36 |
| மு.பொன்னம்பலம் | 32 |
| க.வாசுதேவன் | 42 |
| அன்பரசு | 45 |
| தா.விவேகானந்தன் | 46 |


## நேர்காணல்


| | |
|---|---|
| நிலாந்தன் | 16 |


## சிறுகதை


| | |
|---|---|
| மாமுனை - மனோ | 26 |
| அன்பரசு | 50 |


## கவிதைகள்


| | |
|---|---|
| தமிழ்வாணன் | 10,13 |
| தேவபரா | 11,13 |
| கோசல்யா | 12 |
| சோதியா | 25 |


## உண்மைப்பதிவு


| | |
|---|---|
| மணலாறு விஜயன் | 40 |


## தொகுப்பு


| | |
|---|---|
| பதிவுகள் | 58 |




https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/





தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக் கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப் படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற் றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதி யதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

சிங்கள தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப் போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்கள தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்கள தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்து போகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.

தென்னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவே அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர்

மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

2005 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாள் உரையிலிருந்து...




https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# தலைவாசல்

எரிமலை




கலை

பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு

டிசம்பர்

2005

திருவள்ளுவர் ஆண்டு 2036

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

பிரான்ஸ்

## பிரபாகரன் நினைத்தது நடக்கும்

சென்ற நவம்பர் மாதத்தில் கிட்டத்தட்ட பத்து நாள் இடைவெளியில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 17ம் நாளில் சிறீலங்கா தனது ஜனாதிபதியைத் தெரிவுசெய்தது. 27ம் நாளில் மாலை 5.32 தமிழீழ நேரப்படி தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் தனது வருடாந்த மாவீரர்நாள் உரையை நிகழ்த்தினார். இரு நிகழ்ச்சிகளுமே பிரபாகரன் தீர்மானித்தபடி நடந்தன. சிறீலங்காவின் அரசியல், பொருளாதார இராணுவக்கட்டமைப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக தேசியத் தலைவர் அவர்கள் இடம்பெறுகிறார். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதியாக ராஜபக்ச தெரிவுசெய்யப்பட்டதாக சிலர் நினைக்ககூடும், உண்மையில் இப்பதவியை அவருக்கு வழங்கியவர். எமது தலைவர் அவர்களே.

சிறீலங்காவின் பொருளாதாரத்தின் மீது பிரபாகரன் செலுத்தும் ஆதிக்கத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நவம்பர் 25ம் நாள் ராஜபக்ச வரலாற்றை மழுங்கடிக்கும் நோக்கில் ஒற்றை ஆட்சிக் கொள்கையை முன்வைத்து கொள்கைப்பிரகடனம் செய்தார். இதை அடுத்து கொழும்பின் பங்குச்சந்தை வீழ்ச்சிகண்டது ஒரு நாட்டின் அரசியல் ஆரோக்கியத்தை அளவீடு செய்யும் முக்கிய கருவியாகப் பங்குச்சந்தை இடம்பெறுவதை வாசகர்கள் அறிவார்கள். நவம்பர் 27ம்நாள் பிரபாகரனின் மாவீரர் நாள் உரைக்குப்பின் நவம்பர் 28 தொடக்கம் பங்குச்சந்தை தனது பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது. ராஜபக்சவின் ஒற்றையாட்சி பிரகடனம் நடைமுறைச் சாத்தியமற்றது ஏற்கனவே இத்தீவில் ஒரு தனியரசு நிலவுகிறது, இதைக் கருத்தில் கொள்ளாமல் எந்தவொரு அரசியல் தீர்வையும் நடைமுறைப் படுத்த இயலாது.

தேசியத்தலைவர் தனது மாவீரர்நாள் உரையில் உடனடியாகப் போர் தொடரும் வாய்ப்பு இல்லை என்ற செய்தியை வெளிப்படுத்தியுள்ளார். இதுதான் பங்குச்சந்தைக்கு கிடைத்த ஊக்க மாத்திரை அதே சமயத்தில் தலைவர் அவர்கள் ஒரு காத்திரமான எச்சரிக்கைகளையும் சிங்கள தலைமைக்கு விடுத்துள்ளார். "வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை புதிய அரசாங்கம் முன் வைக்க வேண்டும். இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து கடும் போக்குத்தனத்தை கடைப்பிடிக்க புதிய அரசாங்கம் முற்படுமானால் எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச்சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்." இந்த முக்கிய செய்தி கொழும்புத் தலைமைக்கு சிந்தித்து செயற்படுவதற்கு ஒரு கால அவகாசத்தை கொடுத்துள்ளது. அதே சமயத்தில் அவர்களுடைய வழமையான இழுத்தடிப்பு உபாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த சவாலை ஏற்கத் திராணியற்ற புதிய ஜனாபதி பழைய தந்திரோபாயத்தை மீண்டும் கைக்கொண்டுள்ளார். தலைவர் வழங்கிய கால அவகாசத்தின் முக்கியத்துவத்தை உணராதவர் போல் நடித்துக் கொண்டு "பேச்சுவார்த்தைக்கு" வரும்படி அழைப்பு விடுகிறார். இது அர்த்தமற்ற அழைப்பு மாத்திரமல்ல கள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத போக்குமாக இடம்பெறுகிறது. உண்மையில் இப்போதுள்ள பிரச்சினை வெறும் பேச்சுவார்த்தை பற்றியதல்ல அது "குறுகியகால இடைவெளிக்குள் புதிய அரசாங்கம் ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவேண்டும்" என்பதாகவுள்ளது. தமிழர்களுடைய அகராதியின்படி பேச்சுவார்த்தை என்பது ஏமாற்றும் நோக்குக் கொண்ட இழுத்தடிப்பு உபாயமாகும். சிங்களத் தலைவர்கள் ஒரு போதும் திருந்த மாட்டார்கள் என்பதுதான் நாம் கண்ட உண்மை.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



## தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் – 2005 அன்று ஆற்றிய உரை

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று வணக்கத்துக்குரிய நாள்.

சுயநல இன்பங்களைத் துறந்து பொதுநல இலட்சியத்திற்காகப் போராடி வாழ்ந்து, அந்தச் சத்திய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிய உத்தமர்களை நாம் நினைவு கூரும் புனித நாள்.

இன்றைய நன்னாளில், அந்த மகத்தான மனிதப் பிறவிகளின் நினைவாக நாம் ஏற்றும் தீபங்களில், அந்த அக்கினி நாக்குகளின் அபூர்வ நடனத்தில், எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் அணையாத சுடராக ஒளிவிட்டு எரிவதை நாம் எமது நெஞ்சில் நினைவு கொள்வோமாக.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

சத்தியம் மீது கட்டப்பட்ட இலட்சியத்திற்காக மடிபவர்கள் என்றுமே சாவதில்லை. அவர்கள் ஒவ்வொருவருமே தனிமனித சரித்திரங்களாக என்றும் வாழ்வார்கள்.

மாவீரர்களே, உங்களது ஒப்பற்ற தியாக வரலாறுகளின் ஒன்றிணைப்பாகவே எமது தேசத்தின் வீர விடுதலைக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது மாவீரன், எனது பிரியமான தோழன் சத்தியநாதன் எனது மடியில் உயிர்நீத்து இன்றுடன் இருபத்துமூன்று ஆண்டுகளாகக் காலநதி ஓடிவிட்டது. இந்தக் கால நீட்சியிற் கட்டவிழ்ந்த போராட்ட வரலாற்றில் பதினேழாயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்று (17,903) மாவீரர் தேச விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பெருந்தொகைப் போராளிகளைவிடப் பலமடங்கு தொகையில் பொதுமக்களும் எதிரியாற் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தத்தில் எமது தேசத்தின் விடுதலைக்காக நாம் கொடுத்த உயிர்ப்பலி மிகப் பெரியது. அளப்பரியது.

தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தமிழ் மக்கள் புரிந்துள்ள மாபெரும் தியாகத்தை, அதன் ஆன்மீக மகத்துவத்தை, அதன் வரலாற்று முக்கியத்துவத்தைச் சிங்கள தேசம் மட்டுமன்றிச் சர்வதேசச் சமூகமும் உணர்ந்து கொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகிறது.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரின் உணர்வுகளை, அவர்களது வாழ்நிலை அவலங்களை, அவர்களது தேசிய அபிலாசைகளைச் சிங்களப் பெரும்பான்மை இனம் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள எத்தனிக்கவுமில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலும் அறிவுத் திறனும் ஆன்ம பக்குவமும் அவர்களிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

சிங்கள தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப் போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்கள தேசம் விடுபடப் போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத்தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலை பற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்கள தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்து போகவில்லை.



மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.

தென்னிலங்கை அரசியற் களத்தில் அதன் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இப்படியான புறநிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்களத் தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிட்டுமென அன்றும் சரி, இன்றும் சரி, நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டுமே தவிர, சிங்கள அரசியல்வாதிகளின் காருணியத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நாம் என்றுமே கருதியதில்லை. இதுவே, அன்றும் இன்றும் எமது விடுதலை இயக்கத்தின் உறுதியான இலட்சியமாக இருந்து வருகிறது.

சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து, எமது உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டும் என உறுதிபூண்டிருந்தபோதும் தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாகச் சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பிரதேச வல்லரசான இந்தியாவின் தலையீடு ஒரு கால கட்டத்திலும், சர்வதேச நாடுகளின் அழுத்தம் இன்னொரு கட்டத்திலுமாகச் சமாதான முயற்சிகளில் எம்மை ஈடுபடச் செய்தன. அத்தோடு பேச்சுக்களில் நாம் பங்குபற்றியதற்கு வேறு காரணங்களும் இருக்கவே செய்தன.

தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது அமைப்புக்குச் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் பேச்சுவார்த்தை ஒரு சாதனமாக அமைந்தது. அதுமட்டுமன்றி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை உலகமயப்படுத்தி, சர்வதேசச் சமூகத்தின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்கும் இது அவசியமாக இருந்தது. அடுத்ததாக நாம் ஆயுத வன்முறையிற் காதல்கொண்ட போர் வெறியர் அல்லர் என்பதையும் சமாதான மென்முறையில் நாம் பற்றுறுதி

**தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தமிழ்மக்கள் புரிந்துள்ள மாபெரும் தியாகத்தை, அதன் ஆன்மீக மகத்துவத்தை, அதன் வரலாற்று முக்கியத்துவத்தைச் சிங்களத் தேசம் மட்டுமன்றிச் சர்வதேசச் சமூகமும் உணர்ந்து கொள்ளாதது எமக்கு ஏமாற்றத்தையும் வேதனையையும் தருகிறது.**



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

கொண்டவர்கள் என்பதையும் உலகுக்கு உணர்த்திக் காட்டவேண்டிய தேவையும் எழுந்தது. இறுதியாக, எல்லாவற்றிலும் முக்கியமாகத் தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியற் கோரிக்கைகளை ஏற்று ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைச் சிங்கள இனவாத ஆட்சியாளர் முன்வைக்கப் போவதில்லை என்ற உண்மையைச் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவதும் எமது நோக்கமாக இருந்தது. இப்படியான குறிக்கோள்களுடனேயே நாம் பேச்சுக்களிற் பங்கு கொண்டோம்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும் எமது தேச விடுதலைப் போராட்டத்தில், வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில், நாம் போருக்கு ஓய்வு கொடுத்துச் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றினோம். எதிரியானவன் கபட நோக்கும் வஞ்சக நெஞ்சும் கொண்டவன் என்பது எமக்குத் தெரியும். அத்தோடு சமரசப் பேச்சுக்களால் பயன் எதுவும் கிட்டப் போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும்.

சமாதானப் பேச்சு என்பது எமது விடுதலைப் போராட்டப் பாதையில் வைக்கப்பட்ட பொறி என்பதையும் நாம் நன்கு அறிவோம். இத்தனையையும் தெரிந்தும் நாம் நேர்மையுடனும் நேரிய நோக்குடனும் சமாதானப் பாதையில் பயணித்தோம். ஆயினும் நாம் மிகவும் விழிப்புடனும் விவேகத்துடனும் செயற்பட்டோம். சமாதானப் பயணத்தின் போதும் சமரசப் பேச்சுக்களின் போதும் சிக்கலான பல சவால்களையும் நெருக்குவாரங்களையும் நாம் எதிர்நோக்க நேரிட்டது. எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பங்கம் ஏற்படும் வகையிற் பொறிகள் வைக்கப்பட்டன. சதிவலைகள் பின்னப்பட்டன. ஆனால் நாம் நிலைமையைப் புரிந்து சாதுரியமாகக் காய்களை நகர்த்தியதால் பொறிகளுக்குள் மாட்டிக் கொள்ளவுமில்லை சதிவலைப் பின்னல்களுக்குட் சிக்கிவிடவுமில்லை. சிங்கள ஆட்சியாளரும் அவர்களுக்கு முண்டு கொடுத்து நின்ற வல்லரசுகளும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் எமது மக்களின் நலனுக்கும் விரோதமாகச் செயற்பட எத்தனித்த போதெல்லாம் எமது இயக்கம் அம்முயற்சிகளை வன்மையாக எதிர்த்து நின்றது. இந்தியத் தலையீடு நிகழ்ந்த காலத்தில், எமது மக்களின் நலனுக்கும் எமது தேசச் சுதந்திரப் போராட்டத்திற்கும் அச்சுறுத்தல் எழுந்தபோது இந்திய வல்லரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் எதிர்த்துப் போராடவும் நாம் துணிந்தோம் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

எமது விடுதலை இயக்கம், திம்புவில் தொடங்கிப் பல்வேறு கட்டங்களில், பல்வேறு சமாதான முயற்சிகளிற் பங்குபற்றியபோதும் இம்முறையே எமது போராட்ட வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு நீண்ட கால இடைவெளியை - கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால இடைவெளியைச் சமாதானத்திற்கு நாம் அர்ப்பணித்தோம். இந்த நீண்ட கால விசாலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் அயராது மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே அர்த்தமற்றுப்போயின.

இம்முறை நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்கள் சாராம்சத்தில் வித்தியாசமானவை, முக்கியத்துவமானவை. மூன்றாம் தரப்பு உலக நாடொன்றின் அனுசரணையில், சர்வதேசச் சமூகத்தின் கண்காணிப்பில் இந்தப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. முதலில் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுடனும் பின்னர் சந்திரிகாவின் ஆட்சிபீடத்துடனும் நிகழ்ந்த பேச்சுக்களின்போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள், உடன்பாடுகள் எவையுமே செயல்வடிவம் பெறவில்லை. நாம் பொறுமையின் எல்லையைக் கடந்து சகிப்புத்தன்மையின் சிகரம்வரை சென்றோம். எத்தனையோ விடயங்களில் விட்டுக் கொடுத்து, சகல வாய்ப்புக்களையும் நாம் வழங்கியபோதும் சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடங்கள் எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து விட்டன.

2001ஆம் ஆண்டு, டிசம்பர் 24 ஆம் நாளன்று, நாமாகவே தன்னிச்சையாகப் போரை நிறுத்திச் சமாதானக் கதவுகளைத் திறந்து விட்டோம். வன்னி மாநிலத்தை மீட்டெடுத்து, ஆனையிறவுப் படைத்தளத்தை துவம்சம் செய்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாக நிலைநிறுத்தி, பலத்தின் அத்திவாரத்தில் நின்றவாறே சிங்களத் தேசத்திற்கு நாம் நேசக் கரம் நீட்டினோம். நோர்வே அரசு நடுநிலை வகிக்க ரணில் விக்கிரமசிங்காவின் அரசுடன் உலகத் தலைநகர்களில் நிகழ்ந்த பேச்சுக்கள் பற்றி நான் இங்கு விபரித்துக்கூறத் தேவையில்லை.

எமது மக்கள் எதிர்கொண்ட அவலமான வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளையுங்கூட ரணிலின் ஆட்சிபீடத்தால் தீர்த்துவைக்க முடியவில்லை. ரணிலின் அரசாங்கமானது பேச்சுக்களை இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தியதோடு, உலக வல்லரசு நாடுகளுடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்து எமது விடுதலை இயக்கத்திடமிருந்து ஆயுதங்களைக் களைந்துவிடும் ஒரு சூழ்ச்சிகரச் சதிவலையைப் பின்னுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தியது. இந்தச் சதித்திட்டத்தின் ஒரு முக்கிய ஏற்பாடாகவே 2003ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் டோக்கியோ மாநாடு அரங்கேறவிருந்தது. இதனை அறிந்து கொண்ட நாம் டோக்கியோ மாநாட்டைப் பகிஸ்கரித்ததுடன் பேச்சுக்களிலிருந்தும் விலகிக் கொண்டோம்.

சமாதான முயற்சியில் எதையுமே சாதிக்காது ரணிலின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதனையடுத்து, சமாதானத்திற்கு விரோதமான இனவாத சக்திகளுடன் கூட்டுச்சேர்ந்து புதிய அரசை அமைத்தார் சந்திரிகா. நாம் ஏற்கெனவே முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம்பற்றிப் பேசுவதற்கு எமது இயக்கம் இணக்கம் தெரிவித்தபோதும் சந்திரிகா அதற்கு இணங்காது காலத்தை இழுத்தடித்தார்.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, அரசியல் வெறுமைக்குட் காலம் ஓடியது. இந்த அரசியற் சூனியத்திற்குள், இந்த நிச்சயமற்ற வெறுமைக்குள் எம்மைச் சிக்கவைத்து, எமது விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பி மழுங்கடிப்பதே சிங்கள ஆட்சியாளரின் வஞ்சக நோக்கம் என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். இனித் தொடர்ந்தும் சமாதான மாயைக்குள் செயலற்று இருப்பது அபத்தம் என எண்ணிய நாம் எமது தேச விடுதலைப் போராட்டத்தைக் கால தாமதமின்றி முன்னெடுக்கத் தீர்மானித்தோம். அதற்கான செய்திட்டத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந்த வேளையிலேயே, அதாவது சென்ற ஆண்டுக் கடைசியில், இயற்கையின் அந்தக் கோரத்தாண்டவம் நிகழ்ந்தது.

திடீரென எவருமே எதிர்பாராத் தருணத்தில் இந்தப் பேரவலம் நிகழ்ந்தது. எமது தாயகப் பூமியின் கிழக்குக் கரையோரக் கிராமங்கள், குடியிருப்புகள் மீது சுனாமிப் பேரலைகள் தாக்கி என்றுமில்லாத

**சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன எல்லாம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அர்த்தமற்ற சொற்பதங்களாக, யதார்த்த மெய்ந்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன. சமாதானச் சூழலில் நிகழ்த்தப்படும் மறைமுக யுத்தம், போர்நிறுத்த விதிகளுக்கு முரணாகத் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, சமரசப் பேச்சுக்களைப் பயன்படுத்திப் பின்னப்படும் சர்வதேசச் சதிவலைப் பின்னல் - இப்படியாக அமைதி முயற்சி திரிவுபடுத்தப்பட்டுத் தவறான முறையிற் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எமது மக்களுக்கு எல்லாவற்றிலுமே நம்பிக்கை இழந்துவிட்டது.**



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

பேரழிவுகளை ஏற்படுத்தின. இயற்கையின் இரக்கமற்ற இந்த ஊழிக் கூத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் இருபதினாயிரம் பேர் கொன்றொழிக்கப்பட்டனர். மூன்று லட்சம் பேர்வரை வீடுகள், சொத்துக்களை இழந்து அகதிகளாக அல்லற்பட்டனர். ஏற்கனவே யுத்தத்தினாற் சிதைந்து போயிருந்த தமிழர் தேசம்மீது இன்னொரு பேரழிவு ஏற்பட்டதால், சுமக்க முடியாத துன்பப் பளுவைச் சுமக்க எமது மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உடனடியாகவே இப்பேரவலத்திற்கு முகங்கொடுக்க எமது விடுதலை இயக்கம் முடிவெடுத்தது. எமது இயக்கத்தின் படைத்துறைப் பிரிவுகளும் மற்றும் நிர்வாக, சமூக சேவைக் கட்டமைப்புகளும் களத்தில் இறங்கிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான, நிவாரணப் பணியில் ஈடுபட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தம் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டதால், பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கெனப் பெரும் தொகையில் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உலக நாடுகள் முன்வந்தன. அதேசமயம், எமது விடுதலை இயக்கத்துடன் கூட்டுச்சேர்ந்து, ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குச் சந்திரிகா அம்மையார் விருப்பம் தெரிவித்தார். பேரவலத்திற்கு ஆளாகி நிற்கும் தமிழ் பேசும் மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை அன்று எமக்கு எழுந்தது. இதனால் சந்திரிகா அரசாங்கத்துடன் பேசி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் பெற்றுக்கொடுக்க முடிவெடுத்தோம். நோர்வேயின் அனுசரணையுடன் இரு தரப்புச் சமாதானச் செயலகங்கள் மட்டத்திற் பேச்சுக்கள் நிகழ்ந்தன. முடிவின்றி, நீண்ட காலத்திற்கு இப்பேச்சுக்கள் இழுபட்டுச் செல்வதை நாம் விரும்பவில்லை. ஆகையால் நாம் மென்போக்கைக் கடைப்பிடித்து, சில முக்கிய விடயங்களில் நெகிழ்ந்து கொடுத்து, ஒரு நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதற்கு இணங்கினோம். இதற்கான உடன்பாடும் கைச்சாத்தாகியது.

சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து உருவாக்கிய இந்த நிவாரணக் கட்டமைப்புக்கு அனைத்துலக நாடுகளும் தமது நல்லாதரவை வழங்கின. முரண்பட்டு நின்ற இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படும் நல்லெண்ணச் சூழ்நிலை பிறந்துள்ளதாக நம்பிக்கை தெரிவித்தன. ஆயினும் இந்த நல்லெண்ணச் சூழ்நிலை உருவாகுவதையோ, தமிழருக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதையோ சிங்கள - பௌத்த இனவாதச் சக்திகளாற் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி நிவாரணக் கட்டமைப்புக்குக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்து அரசிலிருந்து விலக்கிக்கொண்டது. ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிர இனவாதக் கட்சிகள் இந்த நிவாரண உடன்பாடு சிறீலங்கா அரசியலமைப்புக்கு விரோதமானதென உயர்நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்தன. சிங்கள இனவாதச் சக்திகளுக்குச் சார்பான முறையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சுனாமிக் கட்டமைப்பை முழுமையாக முடக்கிச் செயலிழக்கச் செய்தது.

சுனாமிக் கட்டமைப்புக்குச் சாவுமணி அடிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த இறுதி நம்பிக்கையையும் சிங்களப் பௌத்தப் பேரினவாதம் சாகடித்துவிட்டது. சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி சந்திரிகாவினாற் கூட, சிங்கள இனவாதச் சக்திகளை மீறித் தமிழ்மக்களுக்கு ஒரு நிவாரணத் திட்டத்தைத்தானும் நிறைவு செய்ய முடியவில்லை. நிலைமை இப்படி இருக்கும்பொழுது பேரினவாதச் சகதியில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள அதிகார வர்க்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். சுனாமி நிர்வாகக் கட்டமைப்பானது எந்தவிதமான அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கு உருப்படியான நிர்வாக வலுவும் இருக்கவில்லை. மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒரு தற்காலிக ஒழுங்கமைப்புக்கே தென்னிலங்கையில் இத்தகைய எதிர்ப்பு என்றால் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரமுடைய ஆட்சியமைப்பைச் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசிப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பது வெறும் பகற் கனவு. கடந்த நான்கு ஆண்டுகாலச் சமாதான முயற்சியின் பயனாக நாம் பட்டுணர்ந்துகொண்ட மெய்யுண்மை இது. இந்தச் சமாதான நாடகத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்துவந்த உலக நாடுகளுக்கும் இந்த உண்மை தெளிவாகியிருக்கும் என்றே நாம் நம்புகிறோம்.

எனது அன்பான மக்களே,

சிங்கள ஆட்சியாளரின் நயவஞ்சக அரசியலுக்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக இன்னொரு பாரதூரமான விடயத்தையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சமாதானத்தின் திரைக்குப் பின்னால், மறைமுகமாக, எமது இயக்கத்திற்கு எதிராக நிகழ்த்தப்படும் ஓர் இரகசிய யுத்தம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். எமது விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, எமது போராட்டத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார நிழல் யுத்தம் ஏவிவிடப்பட்டது.

எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய போராளிகள், ஆதரவாளர்கள் எமக்கு ஆதரவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என்ற வகையில் பெருந்தொகையானோர் மிகவும் கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது எமக்கு நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத் துறையின் வழிநடத்தலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதும் இதன் பின்புலத்திற் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூப கரங்கள் செயற்படுவதையும் நாம் அறிவோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், அரச படையினரின் பாதுகாப்புக் கவசத்துடன் ஒட்டுப் படைகளான தமிழ் ஆயுதக் குழுக்களை கருவிகளாகக் கொண்டு இந்த மறைமுக யுத்தம் நடத்தப்படுகிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக நின்று அரசியற் பணிகளில் ஈடுபட்ட எமது போராளிகள் கொலை செய்யப்படுவதையும், எமது அரசியற் செயலகங்கள் தாக்கியழிக்கப்படுவதையும் நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். ஆனால், சிங்கள அரசு எமது ஆட்சேபனைகளைப் பொருட்படுத்தவில்லை. இதனால் இறுதியில் எமது அரசியற் போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மீள அழைக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

போருக்கு ஓய்வு கொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஒரு வித்தியாசமான மென் தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கிறது. போர்நிறுத்த விதிகளுக்கு அமையத் தமிழ்க் கூலிப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது

**சுயநிர்ணய உரிமைகோரி, தம்மைத் தாமே ஆட்சிபுரியும் அரசியற் சுதந்திரங்கோரி, தமிழீழ மக்கள் எழுப்பும் உரிமைக் குரலானது உலக மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ளது. ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக அணிதிரண்டு நிற்கும் தமிழினத்தின் உரிமைக் குரலைச் சர்வதேசச் சமூகம் இனியும் அசட்டை செய்யமுடியாது. தமது அரசியல் தகைமையைத் தாமாகவே நிர்ணயித்துக்கொள்ள எமது மக்கள் விரும்புகிறார்கள். காலங்காலமாக அரசஒடுக்குமுறைக்கு ஆளாகிய ஒரு தேசிய மக்கள் சமுதாயம் என்ற ரீதியில், தமது அரசியல் அபிலாசைகளைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது மக்களின் அறை கூவலாகும்.**



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

**எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பதுதான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்துவிட்டது.**

அரசாங்கத்தின் கடப்பாடு. இந்த முக்கிய கடப்பாட்டை நிறைவு செய்யத் தவறிய சிங்கள அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவிகளாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க் குற்றமாகும். ஒரு கையால் அரவணைப்பது போல நடித்து மறுகையாற் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலிது.

சமாதான முயற்சியிலும் சமரசத் தீர்விலும் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு உண்மையான ஆர்வமும் அக்கறையும் இருக்கவில்லை என்பதையே இச்செயற்பாடு எடுத்துக்காட்டுகிறது. இராணுவ அணுகுமுறையை இவர்கள் இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. சமாதானச் சூழலிலும் ஒரு புதிய வடிவிற் போரை உருமாற்றம் செய்து இராணுவப் பயங்கரவாதத்தைத் தொடர்கிறது சிங்கள அரசு. இந்த நிழல் யுத்தத்தின் நிஜ வடிவத்தையும் அதன் அசிங்கமான முகத்தையும் அந்தரங்க நோக்கத்தையும் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன எல்லாம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அர்த்தமற்ற சொற்பதங்களாக, யதார்த்த மெய்ந்நிலைக்குப் பொருந்தாத வார்த்தைப் பிரயோகங்களாக மாறிவிட்டன. சமாதானச் சூழலில் நிகழ்த்தப்படும் மறைமுக யுத்தம், போர்நிறுத்த விதிகளுக்கு முரணாகத் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, சமரசப் பேச்சுக்களைப் பயன்படுத்திப் பின்னப்படும் சர்வதேசச் சதிவலைப் பின்னல் - இப்படியாக அமைதி முயற்சி திரிவுபடுத்தப்பட்டுத் தவறான முறையிற் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எமது மக்களுக்கு எல்லாவற்றிலுமே நம்பிக்கை இழந்துவிட்டது.

நிலையான அமைதியையும் நிம்மதியான வாழ்வையும் பெற்றுத்தராத சமாதானத்தில், வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை அகற்ற முடியாத போர்நிறுத்தத்தில், தீராது தொடரும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடித்தராத பேச்சுக்களில், எமது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

நிலையற்ற வாழ்வையும், நிச்சயமற்ற எதிர்காலத்தையும் இனியும் எமது மக்கள் பொறுத்துக்கொள்ளத் தயாராகவில்லை. பொறுத்துப் பொறுத்து பொறுமையிழந்த தமிழ் மக்களின் பொங்குணர்வாகவே அவர்களது அரசியல் அபிலாசைகளின் ஆவேச வெளிப்பாடாகவே தமிழீழத் தாயகமெங்கும் வெகுசனப் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. சமீப காலமாக, தமிழ் மாவட்டங்கள் தோறும் மாறி, மாறி அரங்கேறிவரும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுகளிற் சமுத்திரமாக மக்கள் திரண்டெழுந்து உரிமை முழக்கம் செய்து வருகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைகோரி, தம்மைத் தாமே ஆட்சிபுரியும் அரசியற் சுதந்திரங்கோரி, தமிழீழ மக்கள் எழுப்பும் உரிமைக் குரலானது உலக மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ளது. ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக அணிதிரண்டு நிற்கும் தமிழினத்தின் உரிமைக் குரலைச் சர்வதேசச் சமூகம் இனியும் அசட்டை செய்ய முடியாது. தமது அரசியல் தகைமையைத் தாமாகவே நிர்ணயித்துக் கொள்ள எமது மக்கள் விரும்புகிறார்கள். காலங்காலமாக அரச ஒடுக்குமுறைக்கு ஆளாகிய ஒரு தேசிய மக்கள் சமுதாயம் என்ற ரீதியில், தமது அரசியல் அபிலாசைகளைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது மக்களின் அறைகூவலாகும்.

எமது சுயநிர்ணயப் போராட்டப் பயணத்தில் நாம் இன்று ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்புமுனையை அடைந்துள்ளோம். தென்னிலங்கை அரசியல் அதிகார வர்க்கம் தமிழரின் சுயநிர்ணய உரிமையை என்றுமே அங்கீகரிக்கப் போவதில்லை. சிங்களப் பௌத்தப் பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்திலும், அந்தச் சட்டத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆட்சியமைப்பிலும் தமிழினத்தின் சுயநிர்ணயத்திற்கு என்றுமே இடமிருக்கப் போவதில்லை. நாமாகவே போராடி, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதை எமது மக்கள் இன்று உணர்ந்து விட்டார்கள். சுயநிர்ணயம் என்பதே சுயமாக, சுதந்திரமாக, மற்றவர்களின் தலையீடின்றி, எமது அரசியல் வாழ்வை நாமாகத் தீர்மானிப்பது தான். அந்தக் காலமும் சூழலும் இப்போது கனிந்துவிட்டது.

தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, அவர்களை அரவணைத்து வாழச் சிங்களத் தேசம் மறுத்து வருகிறது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு, கடந்த 57 ஆண்டுகளாக இந்த அரசியற் புறக்கணிப்புத் தொடர்கிறது. வேண்டப்படாத இனத்தவராக, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறந்தள்ளி வைக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து சலித்துப்போன தமிழர், சிங்கள ஆட்சியமைப்பையும் அதன் அதிகாரபீடத்தையும் ஒதுக்கிப் புறக்கணிக்கத் தீர்மானித்து விட்டனர். சிறீலங்காவின் அரச அதிபர் தேர்தலில், பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாக்களிக்காதமை இந்தப் புறக்கணிப்பின் காத்திரமான வெளிப்பாடாகும்.

சிங்களத்தின் அரச அதிபரைத் தீர்மானிக்கும் வாக்குப் பலம் இருந்தபோதும் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த எமது மக்கள் விரும்பவில்லை. வேட்பாளர்கள் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்பாகவோ அவர்களது கட்சிகள், கொள்கைகள் மீதான தீர்ப்பாகவோ இதனைக் கருதுவது தவறு. ஒட்டுமொத்தமாகச் சிங்கள ஆட்சியமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆழமான விரக்தியினதும் நம்பிக்கையீனத்தினதும் வெளிப்பாடாகவே இத்தேர்தற் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது. தமிழரின் அரசியற் போராட்ட வரலாற்றில் இதுவொரு பாரதூரமான திருப்பத்தை சுட்டிக்காட்டுகிறது. சிங்கள அரசியல் ஆட்சிமுறையில் நம்பிக்கையிழந்த தமிழீழ மக்கள், தனிவழி சென்று தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் துணிந்து விட்டனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

சிங்களத் தேசமானது ஒரு புதிய தேசத் தலைவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தத் தலைவனின் கீழ் ஒரு புதிய ஆட்சிபீடம் பதவி ஏறியுள்ளது. இந்த ஆட்சியமைப்பானது பிரத்தியேகமாகச் சிங்களப் பெரும்பான்மை மக்களால், அவர்களது வாக்குப் பலத்தால் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியமைப்பிற் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பங்களிப்பு இருக்கவில்லை. இது முற்று முழுதாகவே ஒரு சிங்களப் பௌத்த ஆட்சிபீடமாகும். இதனால் மகிந்த ராஜபக்சா இலங்கை வாழ் மக்கள் சமூகங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

படுத்தவில்லை. அவர் சிங்கள - பௌத்த மக்களின் நலனைப் பேணும் அரச அதிபராகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அரச அதிபர் மகிந்தாவின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் நாம் நன்கறிவோம். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவரது அரசியல் தரிசனத்திற்கும் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் மத்தியிலான இசைவற்ற இடைவெளிகளையும் இணங்காத முரண்பாடுகளையும் நாம் அறிவோம். இவைபற்றி நான் இங்கு ஒப்பீட்டு மதிப்பாய்வு செய்ய விரும்பவில்லை.

சமீபத்திய அரச அதிபர் தேர்தலும் அதனை எமது மக்கள் புறக்கணித்ததால் ஏற்பட்ட ஆட்சிமாற்றமும் தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில், அரசியல் ரீதியாக, ஆழமான ஒரு பிளவை ஏற்படுத்தியுள்ளன. தென்னிலங்கையில், சிங்கள - பௌத்தம் மேலாண்மை பெற்றுள்ள அதே சமயம், தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியம் நிலைப்பட்டு, பலப்பட்டு, எழுச்சிபெற்று வருகிறது. சிங்களத்தில் மகிந்த ராஜபக்சாவின் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. தமிழீழத்திலும் தமிழ்த் தேசிய எழுச்சியின் திண்ணிய வடிவமாக எமது விடுதலை இயக்கத்தின் ஆட்சியமைப்பு விரிவடைந்து, வலுவடைந்து இயங்கி வருகிறது.

சிங்கள இராணுவ ஆதிக்கத்திலிருந்து எமது தாயக நிலத்தின் பெரும் பகுதியை நாம் மீட்டெடுத்து, அங்கு தன்னாட்சி அதிகாரமுள்ள ஆட்சியமைப்பை நிறுவி, அதனை நேர்த்தியாக நிர்வகித்து வருகிறோம் என்பது இன்று உலகறிந்த உண்மை. பெருந்தொகை மக்கள் வாழும் நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அதனைக் கட்டிக்காக்க பலம்பொருந்திய படைத் துறையையும் சட்டம் ஒழுங்கைப் பேணக் காவல்துறையையும் நீதித்துறையையும் அத்தோடு ஒரு நிழல் அரசாங்கத்திற்குரிய அடித்தளக் கட்டுமானங்களையும் கொண்டதாக பிரமாண்டமான நிர்வாக அமைப்பை நாம் இயக்கி வருகிறோம்.

பெரும் தொகையான எமது மக்கள் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த போதும், உணர்வாலும் இலட்சியத்தாலும் அவர்கள் எமது விடுதலை இலட்சியத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்தக் கள யதார்த்தத்தை, அரசியல் மெய்ம்மையைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், எமது விடுதலை இயக்கத்தை ஒரு 'பயங்கரவாதக் குழு' என உலகத்திற்குச் சிறுமைப்படுத்திச் சித்திரித்துக்காட்ட முனைந்து வருகிறார்கள். இந்தப் பொய்யான பரப்புரைகளை நம்பி, உலக நாடுகள் சில எமது இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருப்பது எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

சமாதான முயற்சியின் பாதுகாவலர் என உரிமை கோரி, இலங்கையின் இனப்பிரச்சினையில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய உலக வல்லாதிக்க நாடுகள், ஒரு தரப்பினரான எமது விடுதலை இயக்கத்தைப் 'பயங்கரவாதிகள்' என ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டு, மறு தரப்பினரான சிறீலங்கா அரசின் நலன்களுக்குச் சார்பாக நிலைப்பாடு எடுத்தன. இது பேச்சுக்களிற் பங்கு கொண்டோரது சமநிலை உறவை வெகுவாகப் பாதித்தது. அத்தோடு எமது அரசியல் தகைமையை நாமே தீர்மானிக்கும் சுதந்திரத்தையும் பாதித்தது. இந்நாடுகளின் ஒருதலைப்பட்சமான நிலைப்பாடும் குறுக்கீடும் சமாதானப் பேச்சுக்கள் முறிந்துபோவதற்கும் ஒரு காரணமாக அமைந்தன. பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழிதழுவி நிகழும் நியாயமான அரசியற் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிவுபடுத்தப்படுகின்றன. இந்தவகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடிமறைக்கப்படுகிறது. ஆயினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைதான் எமது விடுதலை இயக்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிறது.

நோர்வே நாட்டின் அனுசரணையுடனும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் கடந்த நான்கு ஆண்டுக் காலம்வரை இழுபட்ட சமாதான முயற்சியின்போது சிங்கள அரச தரப்பினால் ஏற்பட்ட சிக்கல்கள், போடப்பட்ட முட்டுக்கட்டைகள், இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்கள் எல்லாவற்றையுமே உலகம் நன்கறியும். எத்தனையோ இம்சைகள், ஆத்திரமூட்டல்கள் மத்தியிலும் நாம் பொறுமையை இழந்து, சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை என்பதையும் சர்வதேசச் சமூகம் அறியும். நான்கு ஆண்டுக்கால அமைதிப் பயணத்திற் சமாதானத்தின் மீதான எமது பற்றுறுதியை நாம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துக் காட்டிவிட்டோம்.

எனது அன்பான மக்களே,

எமது போராட்ட இலட்சியத்தை அடையும் அணுகுமுறை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய காலத்தை நாம் நெருங்கி விட்டோம். இந்த வரலாற்றுத் திருப்புமுனையான கட்டத்தில், எமக்கு ஒரு புதிய சவாலாக, சிங்கள தேசத்தில் ஒரு புதிய அரச அதிபரின் தலைமையில், ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. இந்தப் புதிய அரசு எமக்கு நேசக் கரம் நீட்டுகிறது. எமது விடுதலை இயக்கத்துடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவிக்கிறது. போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி பேணப் போவதாகச் சொல்கிறது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்து வருகிறது. ஜனாதிபதி மகிந்தாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளையோ அதன் மூலக் கோட்பாடுகளையோ அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரிது. எனினும் அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும், தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்து கொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்சாவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சிறிது காலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்.

பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில், ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.

எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், எமது மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த மகத்தான தியாகங்களையும் நினைவுகூரும் இப்புனித நாளில், எத்தகைய இடர்களையும் எத்தகைய துன்பங்களையும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்போமென உறுதிபூணுவோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/





# நிமிர்வு தந்தவனின் அகவை நிறைவில் உவகையுடன்...!

தமிழ்வாணன்

பிரபாகரன்..!
தமிழ் வானின் கதிரானவன்!
தமிழ் வாழ்வின் உயிரானவன்!
மூச்சினில் சுமக்கிறான்
தமிழின விடுதலை
விரைவினில் ஆக்குவான்
விடியலின் அறுவடை

விடுதலைத் தீயானவன்
தமிழரின் தாயானவன்
குழந்தை வடிவமே
அவன் சிரிப்பு!
விழிகள்..
பகையெரிக்கும் அனல் நெருப்பு

அடிமை விலங்குகள்
உடைத்தவன்
புதுமைக் காலங்கள்
படைத்தவன்
சமூக அழுக்குகள்
போக்கியவன்
பகுத்தறிவின் பாதை
உருவாக்கியவன்
சாதிச் சாக்கடை
கொழுத்தியவன்
சரிநிகர் நீதிச் சாதனை
நிகழ்த்தியவன்
செஞ்சோலையில்
சேய்களைத் தாங்குகின்றான்
அறிவுச்சோலையில்
தாயாகி தாலாட்டுகின்றான்

பகைவர் படைகளை
ஓட்டியவன்
தமிழர் படையின் பலமது
நாட்டிய்வன்
வலிமையே வாழ்வென்று
காட்டியவன்
உலகத்தமிழரை ஓரணி
கூட்டியவன்
போராற்றல் மட்டுமா
கைவரப்பெற்றான்
நுண்மதித் திறனில்
பேராற்றல் பெற்றான்
மானிடம் காக்க
மலர்ந்த கதிரவன்
தமிழர் இதயம்
நிறைந்த உயிரவன்

நிமிர்வு தந்தவனின்
அகவை நிறைவில்
உவகையுடன்
தமிழ் அள்ளி வாழ்த்துவோம்...!



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# பார்வியக்கம் தலைவருக்கு பணிவான வாழ்த்துக்கள்



அச்சம் நெருங்க அஞ்சும்
சத்தியத்தின் காவலர்.
துச்சமென பகை துரத்தும்
திட்ப மான மறவீரர்களை
தன்னகத்தே கொண்டு
தீரமுடன் படை நடத்தும்
திடமான தீர்க்கதரிசி.

அடக்குமுறைக்குள் அவதியுற்று
ஆழ்மனதுள் துயரை அடக்கிவைத்து
விடிவே இல்லை என
வெதும்பிய பெண்ணினத்தை
புதுமைப் பெண்ணாக
படை நகர்த்தும் திறனில்
வல்லமை மிக்கவராக
அவனிக்கு அறியவைத்த
தமிழ்ப் பெண்ணின் ஆற்றல்கண்டு
தரணியைத் திகைக்க வைத்த
புரட்சி விஞ்ஞானி .

ஆணும் பெண்ணும் இணைந்தே
அடிமைப் பூட்டை உடைத்திட வேண்டும்
பேதம் பார்க்கும் மடைமையை
பொடிப்பொடியாக்கிடவேண்டும்
நேசமுடன் அணுகும் நல்லவரை
பாசமுடன் வரவேற்கவேண்டும்
மோசம் செய்யும் பகைவர்களை
மோதி மிதித்திடவேண்டும்.

ஆம், இவை எங்கள்
தேசக்கதிரவனின்
தீரநெஞ்சில் பதிந்து
திடமுடன் செயல்வடிவம் பெற்றுவரும்
உண்மைத் தத்துவங்கள்

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும்
கள்ளத்தனங்களை
கணப்பொழுதில் கண்டறியும்
எங்கள் புதிய கதிரவனை
எத்துணை எத்தர்களாலும்
எளிதில் ஏமாற்றமுடியாது.
சத்தியப்போர் நடத்தும்
நித்தியசூரியனை
வஞ்சகவலையில் வீழ்த்த
எண்ணிலா நாடகம் ஆடியவர்கள்
ஆடிப்போயுள்ளதை அகிலமே கண்டிருக்கும்.
இனியும் ஏமாற்றுவலைகளுக்குள்
சிக்கிடவைக்க எண்ணுவோர்
கொஞ்சம் சிந்தனைக்கு வேலைகொடுக்கட்டும்.

எங்கள் அக்கினித்தலைவனை
கிட்டநெருங்கி முட்ட நினைத்தால்
சட்டென்று பொடியாகும்
அத்தனையும் நொடிப்பொழுதில்
அறிந்திடட்டும் அநீதியாளர் கூட்டம் யாவும்.


இத்துணை வல்லமை கொண்ட
உன்னதத் தலைவரைப் பெற்ற
பாக்கியவான்கள் தமிழர்
என்ற பெருமிதத்துடன்
உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.
நீடுநீடு காலம் எம் தலைவர்
நிலைத்து வாழ நெஞ்சம் நிறைந்து
வாழ்த்துகின்றோம்.

■ தேவபரா - லண்டன்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: தமிழன்பன்

# விளைவீர் ! எழுவீர் !!

கோசல்யா

தேசம்
இனம்
மொழி
ஆற்றல் அறிவு
அள்ளிப் போவதை
சும்மாயிருந்து பார்த்திரா !

உணவு உருசி
ஊருறவு
உறக்கம் உதறி
உணர்வாகி
உயிரீந்து உயர்ந்தவர்களே !

உங்களை நினைக்கும்
உணர்வான நாழிகைகள்
எங்களை உயிர்பிக்க
இன்னுமொரு தரம்
மீள்விரே !! மீள்வீர்கள்!

கந்தக வாசம்
காடு கரம்பை
காட்டாறு நெடிகள்
எல்லை இடுக்குள்
இன்னும்! கனதிகள்

ஊர்வன பறப்பன
உயிர்கொல்லிகள்
உறவாய் ஸ்பரித்த
உணர்வாளர்களே

அலையின் ஓசை
உவர்ப்பின் கரிப்பு
பசுமையின் பசுந்து
வான்வெளி கங்குல்
விழுப்புண் ரணங்கள்
அறிந்துணர்ந்த மாவீரரே !

கார்த்திகைப் பிறப்பில்
காந்தள் மலர்வில்
செண்பகம்
நிழல் வாடி வாகையில்
வரவு பார்த்திருக்க
சந்தணப் பேழையில்
சுகந்தம் சுகித்தது போதும் !

நாம் சுகப்படவே
பகைப் புலம் சென்று
களத்தில் நின்று
நிலத்தில் சிந்திய
சிதறிய வீர வித்துக்களே
முளைத்திட விளைவீர்
விளைச்சல் வேண்டும் !

ஆம் வெந்தணல் தாகமாய்
செழுமை நினைப்பில்
அகில ஒளியில்
கவிகள் பொழிவில்
மீட்பின் சுரத்தில்
நிலவின் வீச்சில்
விளைவீர் ! எழுவீர் !!
வாழ்வைப் பகிர விளைவீர்!
விரைவீர்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

## நினைவோடு எழுவோம்!

உயிர் அள்ளித் தந்தோரை
உணர்வள்ளிக் கொண்டாடு
இனம் வாழ எழுந்தோர் மீது
மனம் உருகிப் பண் பாடு

அன்னை விலங்கொடிய,
மண்விடிய ஆகுதியானவரே!
உம் ஈகச்செயல் எண்ணுந்தோறும்
மெய் சிலிர்த்திடுமே - இனி
கரிகாலன் காலமதில்
விடுதலை பிறந்திடுமே
துயர் போகும்
தேசம் மீளும்
ஒளிதீபம் ஏந்துவோம்
எழுந்து வாருங்கள்

பேச்செல்லாம் பேச்செல்லாம்
விடுதலை என்றாச்சு அவர்
மூச்செல்லாம் வீச்செல்லாம்
தமிழீழம் என்றாச்சு
துயர்கழுவ துவக்கெடுத்தீர்
கதிர்பரவ தீயெரித்தீர்

நினைவோடு எழுகின்றோம்
மலர்தூவி தொழுகின்றோம்
விடிவுக்கு விலைகள் ஆனோரே
அந்தோ விடியல் புலரக் கண்டோம்
மானம் மீட்ட மறவர்களே

நாளெல்லாம் பொழுதெல்லாம்
விழித்தீரே களத்தில்
தரையெல்லாம் கடலெல்லாம்
பாய்ந்தீரே பலத்தில்
இனம்வாழ நீரெழுந்தீர்
வலிமையே வாழ்வென்றீர்

தனிநாடு மலர்ந்தாகும்
மனசெல்லாம் மகிழ்ந்தாடும்
வரலாறு வரைந்து போனீரே
எங்கும் உங்கள் பாடல் ஒலிக்கும்
தேசம் காத்த வீரர்களே
எங்கும் உங்கள் பாடல் ஒலிக்கும்.

● தமிழ்வாணன் - நோர்வே

## காற்றே நீ மாவீரர் உயிர் மூச்சு



எல்லை கடந்து உலகெங்கும் வீசும்
இளங்காற்றே! எம் தேசத்தில் மட்டும்
உன் பெயர் காற்று அல்ல,
எம்மாவீரர் உயிர்மூச்சு.

எம்மினம் நிதம்படும் துயர் போக்க
தம் சுகம் யாவும் துறந்தவர்கள்.
தாய்மண் மீட்பொன்றே நினைந்து
போர்க்களம் சென்றவர்கள்.
பகை வெல்ல தமை முடித்த
எம் மாவீரர்கள் இவர்கள்
ஊதிய உயிர்மூச்சு
உன்னுள் நிறைந்திருக்கிறது.
அதனால் தான் நீ காற்று அல்ல.
எம் தேசப்புதல்வர் உயிர்மூச்சு.

வாழ்ந்து முடியும் வயதில்
விண் சென்றவர்களல்ல இவர்கள்.
வாழவேண்டிய பருவத்தில் - தம்
வசந்தகாலக் கனவுகள் உதறி
எம்மினம் வாழத் தமைக் கொடுத்தவர்கள்.
எதிரிப் படையுடன் இறுதிவரை போராட
உறுதி எடுத்து தமை முடித்த - இந்த
உத்தமர்கள் உயிர்கள்
உனக்குள் கலந்திருப்பதால்
நீ காற்று அல்ல.
எம் நேசக்குழந்தைகள் உயிர்மூச்சு.

அன்னைமண் மீட்பதே தங்கள்
உறுதி இலட்சியமெனக் கொண்டு - தம்
அன்னை, தந்தை, அன்பு உறவுகளின்
பாசப்பிணைப்புள் திளைத்துக் களிக்கும்
பாக்கியம் துறந்து வந்து - ஆதிக்கப்
பகை வேரெரிக்க பாசறை சேர்ந்தவர்கள்.
களம் சென்று பகை வென்று
காவியமான உன்னத உயிர்கள்
உனக்குள் கரைந்திருப்பதால் தான்
நீ காற்று அல்ல.
எம் பாசஉறவுகளின் உயிர்மூச்சு.

கவலைகள் ஏதுமே அறியாது
கைவீசிக் களித்து நடந்து - இனிய
கனவுகள் சுமக்கும் இளம்வயதில்
தாயகவிடுதலை நெஞ்சில் சுமந்து,
தோள்களில் ஆயுதம் தாங்கி,
கல்லும் முள்ளும் கடுகி நடந்தனர்.
தேசம் விடிய பகை முகாம் தகர்த்திட
தாமே வெடியாகி தகர்ந்து கனன்றனர்.
முடிவு தெரிந்தே போர்முனை சென்ற
இம்மாவீரர்கள் ஆன்மாக்கள்
உன்னுள் தான் என்பதால்
நீ காற்று அல்ல.
எம் தீரப்புதல்வர்கள் உயிர்மூச்சு.

எம்மின இளஞ்சந்ததி - தம்
இளம் பருவக் கனவுகளுடன்
சுதந்திரக்காற்றைச் சுகமாக சுவாசித்து
திடமுடன் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக
தம் உயிர் உருக்கினர்
புவி வாழ்வு சுருக்கினர்.
இந்த விடுதலை வேங்கைகள்
உருக்கிய உயிர்
உன்னுள் உறைந்திருப்பதால்
நீ காற்று அல்ல.
எம் தேசச்சூரியர்களின் உயிர்மூச்சு.

தமிழ் மக்கள் சோகங்கள் யாவும்
தவிடுபொடியாக வேண்டு
மென்பதற்காக
சிலுவையில் தமை அறைந்த
புனித யேசுக்கள் இவர்கள்.
தேச விடியலுக்காக - தங்கள்
உயிரினை விலையாய்க்
கொடுத்த - இந்த
உன்னத வீரர்களால் தான்
எம் தேசம் வாழ்கிறது.
அகிலமெங்கும் தமிழினம்
தலை நிமிர்ந்து வாழ்கிறது.
அதனால்,
எங்கள் தாயக மண்ணில் மட்டுமல்ல,
தமிழர் வாழும் தேசமெங்கும்
வீசும் காற்றே நீ காற்று அல்ல.
எம் மாவீரர்கள் உயிர்மூச்சே.
எம் தற்கொடையாளர்கள்
உயிர் தாங்கும் காற்றே!
இதனால் நீ மகிமை அடைகின்றாய்
மகத்துவம் பெறுகின்றாய்.

● தேவபரா - லண்டன்


https://tamileelamarchive.com/

# புதிய சனாதிபதியும் சமாதானத்தின் தலைவிதியும்

● எல்லாளன்



நடந்துமுடிந்துள்ள சிறீலங்காவுக்கான சனாதிபதித் தேர்தல் சிங்கள - தமிழ் இன முரண்பாட்டைப் பொறுத்த வகையில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழர் அபிலாசைகள் வேறு - சிங்களவர் நலன்கள்வேறு என்பதை தேர்தல் முடிவுகள் நிரூபித்துவிட்டன. சிங்களவரின் சிந்தனை வேறு- தமிழரின் எண்ணப்பாடுகள் வேறு என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவில் இரு அரசுகள் என்ற இராணுவ யதார்த்தம் ஒருபுறம் இருந்துவர மறுபுறத்தில் அரசியல் ரீதியிலும் இருவேறு துருவங்களாக தமிழரும் - சிங்களவரும் பிரிந்துபோய் உள்ளனர் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் புதிய சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ச தனது இனவாத நிலைப்பாட்டை - தமிழருக்கு எதிரான கொள்கையை வெளிப்படையாகவே முன்வைத்து சிங்களவரின் அமோக ஆதரவைப் பெற்று அதிகாரத்திற்கு வந்துள்ளார்.

> " மகிந்த ராஜபக்ச புதிய சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதத்தை, ஒற்றை ஆட்சிமுறையை அமுல்ப்படுத்த ஆணைகேட்ட ஒரு சிங்களத் தலைவரை சிங்களவர் சனாதிபதியாக்கி விட்டுள்ளனர். தமிழருக்கு எந்த ஒரு உரிமையும் வழங்கக்கூடாது என்ற கொள்கையில் விடாப்பிடியாக உள்ள ஜே.வி.பியும், ஹெல உறுமயவும், பிக்குகள் முன்னணியும் மகிந்த ராஜபக்சவிற்கு பக்கபலமாக உள்ளனர் "

தமிழரின் அரசியல் அபிலாசைகள் கருத்தில் எடுக்கப்படாது நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் நிராகரிக்க முடிவெடுத்தனர். தேர்தலை நிராகரித்து - வாக்கெடுப்பைப் புறக்கணித்து தமிழ்மக்களும் உறுதியான அரசியல்த் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

சிங்களத்தில் அமோகமான வாக்களிப்பு. தமிழர் தேசத்தில் முழுமையான தேர்தல் நிராகரிப்பு. அரசியல் ரீதியில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள அம்சங்கள் இவை.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலும், இப்போது (2005) நடந்து முடிந்துள்ள சனாதிபதித் தேர்தலும் ஒரேவிதமான அரசியல் செய்திகளையே வெளிப்படுத்தியுள்ளன.

2004 தேர்தலில் சிங்கள இனவாதக்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

கூட்டணியே வெற்றிபெற்றது. மூன்றுவருட சமாதான காலத்திற்குப் பின்னர், இப்போதும், அதே இனவாதக் கூட்டணியே அதிகாரத்தைப் பற்றியுள்ளது.

2004இல் தமிழ்மக்கள் ஒருங்கு திரண்டு வாக்களித்து தம் அரசியல் அபிலாசைகளை நிலைநாட்டியிருந்தனர். இம்முறை வாக்களிப்பை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து அதே அரசியல் செய்தியையே உலகிற்கு காட்டியுள்ளனர்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி - ஹெல உறுமய அரசியல் கூட்டணி மகாவம்சக் கருத்துக்களை வலியுறுத்தி - சிங்கள, பௌத்தர்களுக்குத்தான் இலங்கைத்தீவு சொந்தம் என்று இனவெறிப் பிரச்சாரம் செய்தனர். ஒற்றை ஆட்சிதான் அதாவது சிங்களவர் ஆட்சிதான் இலங்கைக்குத் தேவை என்று பரப்புரை செய்தனர். தமிழர் தாயகத்தை - தமிழர் தேசியத்தை - தமிழர் தன்னாட்சியை முற்றுமுழுதாக நிராகரித்தனர்.

தமிழரின் அரசியல் தனித்துவத்தை மறுதலித்த இந்த இனவாத நிலைப்பாட்டை சிங்கள மக்களும் ஆதரித்து வாக்களித்தனர்.

இந்த நிலையில், சமாதானப் பேச்சுவார்தைகளுக்கும் - அரசியல்த்தீர்வு முயற்சிகளுக்கும் இனியும் இடமுண்டா! என்ற கேள்வியே எழுந்துள்ளது.

அமைதிவழியில் தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசு முன்வர மாட்டாது என்பது தமிழர் தரப்பிற்கு ஏற்கனவே தெரிந்த உண்மைதான்.

எனினும், இந்த அரசியல் யதார்த்தங்களைப்புரிந்துகொள்ள இன்னமும் சர்வதேச சமூகம் முன்வராதது தமிழ்மக்களுக்குக் கவலை அளிப்பதாகவே உள்ளது.

எவர் சனாதிபதியாக வந்தாலும் அவர் சமாதானப் பேச்சிற்கு வரவேண்டும் என்று சர்வதேச சமூகம் அறிவுறுத்தியுள்ளது.

உலக அரசுகளிடமிருந்து உதவி நிதிகளைப் பெறுவதற்காக சர்வதேசத்தின் சமாதானக் கருத்துக்களை புதிய சனாதிபதி உள்வாங்கியே தீரவேண்டும் என்று சர்வதேச சமூகம் நம்புகின்றது.

ஆனால் உதட்டளவில் சமாதானம் பேசி சர்வதேசத்தை ஏமாற்றி - உதவி நிதிகளைப் பெறும் விடயத்தில் சிங்கள அரச தலைவர்களுக்கு நிகர் அவர்களேதான்.

கடந்த மூன்றுவருட சமாதான காலத்தில் சர்வதேச அழுத்தத்திற்குப் பணிந்து - சமாதானச் சூழலை நிலைநிறுத்த - சிங்கள அரசு என்ன செய்தது! எதுவுமே செய்யவில்லை. புலிகள் இயக்கத்தின் இடைவிடாப் பொறுமைதான் இன்றுவரை சமாதானச் சூழலை தக்க வைத்துள்ளது.

அபிவிருத்தி பற்றியகனவுகளுடனும் - சமூக மேம்பாடு என்ற எண்ணங்களுடனும் ஆட்சி நடாத்தும் அரச தலைவர்களைத்தான் வெளிநாட்டு உதவிகளுடன் இணைந்த சர்வதேச அழுத்தங்கள் கட்டுப்படுத்தும்.

சிங்களத் தலைவர்களிடம் அப்படியான உயர்ந்த சிந்தனைகள் இல்லை. பெரும்பாலான சிங்கள மக்களிடமும் அத்தகைய எதிர்பார்ப்புகள் இல்லை.

சிங்கள மேலாதிக்கச் சிந்தனை என்ற இனவெறிக் கோட்பாட்டிற்கு அடுத்ததாகவே அபிவிருத்தி - சமூகமேம்பாடு என்ற விடயங்களை சிங்களவர் கருதுகின்றனர்.

சிங்களத் தலைவர்களினதும் - சிங்கள மக்களினதும் அரசியல் மனநிலை இவ்வாறாக இருக்கும்போது இவர்களுடன் தமிழர் தரப்பு எவ்வாறு சமாதானம் பற்றிப் பேசமுடியும். சமாதானம் பேசும்படி தமிழர்தரப்பை எவ்வாறு சர்வதேச சமூகம் வற்புறுத்த முடியும்!

சமாதானத்தை வலியுறுத்தி 2004இல் ஆட்சி அமைத்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தவிர சமாதான முயற்சியில் வேறெதைச் சாதித்தது. போர்நிறுத்த ஒப்பந்தமும் தமிழர்க்குச் செய்தது என்ன!

"புலிகள் இயக்கத்தை நசுக்க சர்வதேச வலைப் பின்னலைத் தனது அரசாங்கம் உருவாக்கி வந்தது" என்று ரணில் தம்பட்டம் அடித்திருந்தார். சமாதான முயற்சியிலும் சதிஅரசியலை நடாத்தும் மனநிலையுடனேயே அவர் இருந்தார் என்பது அம்பலமாயிற்று.

இம்முறை சனாதிபதித் தேர்தலின்போதும் சமாதானம் பற்றி சாதித்தமைகளைக் கதைத்தார். எல்லா கட்சிகளையும் இணைத்து - எல்லா இன மக்களையும் இணைத்தது என்று சிறுபிள்ளைத்தனமாக சமாதானம் கதைத்தார். தமிழர்கள் அவரை நம்பவில்லை.

சமாதானத்தை வலியுறுத்தி - நேர்மையான அரசியல் நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக எடுத்திருப்பாரேயானால் தமிழரின் வாக்குகள் மூலம் அவரின் வெற்றிவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால், ரணில் அதைச் செய்ய விரும்பவில்லை. தோல்வி ஏற்பட்டாலும் பறவாயில்லை தமிழருக்கு எதுவும் வழங்கிவிடக் கூடாது என்ற இனவாத உணர்வுடனேயே ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

"

**தமிழர் அபிலாசைகள் வேறு - சிங்களவர் நலன்கள்வேறு என்பதை தேர்தல் முடிவுகள் நிரூபித்துவிட்டன. சிங்களவரின் சிந்தனை வேறு- தமிழரின் எண்ணப்பாடுகள் வேறு என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.**

**இலங்கைத்தீவில் இரு அரசுகள் என்ற இராணுவ யதார்த்தம் ஒருபுறம் இருந்துவர மறுபுறத்தில் அரசியல் ரீதியிலும் இருவேறு துருவங்களாக தமிழரும் - சிங்களவரும் பிரிந்துபோய் உள்ளனர் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது**

"

மகிந்த ராஜபக்ச புதிய சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதத்தை, ஒற்றை ஆட்சிமுறையை அமுல்ப்படுத்த ஆணை கேட்ட ஒரு சிங்களத் தலைவரை சிங்களவர் சனாதிபதியாக்கி விட்டுள்ளனர். தமிழருக்கு எந்த ஒரு உரிமையும் வழங்கக்கூடாது என்ற கொள்கையில் விடாப்பிடியாக உள்ள ஜே.வி.பியும், ஹெல உறுமயவும், பிக்குகள் முன்னணியும் மகிந்த ராஜபக்சவிற்கு பக்க பலமாக உள்ளனர்.

அடுத்த ஆறு வருடகாலம் எப்படி நகரப் போகின்றது என்று தமிழர்களுக்கு நன்கு தெரியும். தமிழரின் ஒற்றுமையும் - தமிழரின் பலமும்தான் தமிழ்மக்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடியது.

இனிவரும் நாட்களில் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பு தமிழர்களிடம் இருக்கப்போவதில்லை. தம்மீது திணிக்கப்பட்டிருக்கும் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றி தமது சுதந்திர வாழ்வை உறுதிசெய்யும் வழிமுறைகளை நாடுவதற்கான திடசங்கற்பத்தைக் கொள்வதாகவே இருக்கும்.

நன்றி: விடுதலைப்புலிகள்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



> “படைப்பின் உள்ளடக்கத்தின் வீச்சே பிரதானமானது. வடிவங்கள் எவையும் புனிதமானவையும் அல்ல, நிரந்தரமானவையும் அல்ல”

## நேர்காணல்: நிலாந்தன்

ஓவியராகவும், கவிஞராகவும், அரசியல் பத்தி எழுத்தாளராகவும் விளங்கும் நிலாந்தன் ஒரு பன்முக ஆற்றலாளன். வன்னியில் 2000ம் ஆண்டில் வெளிவந்த 'மண்பட்டினங்கள்', 'ஓ! யாழ்ப்பாணமே', 'வன்னிமான்மியம்' ஆகிய நூல்கள் முற்று முழுதாக புதிய மாற்றங்களைப் பிரக்ஞை பூர்வமாக உணர்ந்தெழுதப்பட்டவை. இது வரை காலமும் நிலவி வரும் இலக்கிய வடிவங்களை சிதைத்து புதிய படைப்பாக்கங்களை தந்தவராக பேசப்படுகிறார். அவருடனான நேர்காணலை எரிமலைச் சஞ்சிகைக்காக புலிகளின் குரல் பிரதம செய்தியாளர் தி.தவபாலன் அவர்கள் பல்வேறு வேலைகளுக்கு மத்தியிலும் ஒலிப்பதிவு செய்து தந்தமையை நன்றியுடன் நினைவுகொள்கிறோம்.

நேர்கண்டவர்: தா.பாலகணேசன்

போராட்டம் முனைப்புப்பெற்றிருந்த காலங்களில் அதாவது 80 களின் காலப் பகுதிகளில் தாங்கள் 'விடுதலைக்காளி' எனும் வீதி நாடகத்தை இயக்கி அதை வீதி வீதியாக கொண்டு சென்று நிகழ்த்தினீர்கள்; அந்த அனுபவத்தை எம்மு டன் பகிர்ந்துகொள்வீர்களா?

அது திம்புப் பேச்சுவார்த்தைக் காலம், இப்போதிருப்பதைப் போலவே ஆனால் இப்போதிருப்பதை விடவும் மிகக் குறுகிய ஒரு யுத்த நிறுத்தம் நிலவியது அப்போது. அந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னால் இருந்த பொய்களை அம்பலப்படுத்தவும் அந்த யுத்த நிறுத்தம் ஒரு தீர்வல்ல என்றும், இதைத் தவிர, வேறு தீர்வு தமிழர்களுக்குக் கிடையாது என் றும் உரத்துச் சொல்லவேண்டியிருந்தது. இதை ஏதாவது கலை வடி வத்துக்கூடாகச் செய்யுமாறு ஆலோசனை தரப்பட்டது. ஒரு பிரச்சாரக் கூட்டத்தை விடவும் துண்டுப்பிரசுரம் அல்லது போஸ்ரரை விடவும் மக் களுக்கு மிகவும் இணக்கமான அல்லது பரிச்சயமான ஒரு வடிவத்துக் கூடாக இதைச் செய்ய முடியுமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த போது, திருமலைவாசி அவர் ஒரு குடும்பஸ்த்தர்; தனக்கு கலையாடிய அனுபவம் உண்டு என்று சொன்னார். அவர் இதைச் சொன்ன போது நாங்கள் புங்குடுதீவுக்கு நீர் விநியோகிக்கும் பௌசரில் பயணம் செய்துகொண்டிருந்தோம்; அந்த பௌசர் வேலணை சாட்டியில் நீர் நிறைத்துக்கொண்டிருந்த அந்த, இடைநேரத்தில் நான் பௌசரில் இருந்தபடியே 'விடுதலைக்காளி'யை எழுதத் தொடங்கினேன். கலை யாடும்போது பிரயோகிக்கப்படும் வசனங்களையும் பாடல்களையும் அவர் எனக்கு உடனுக்குடன் தந்து உதவினார். பௌசரில் நீர் நிரம்பி முடியும்போது விடுதலைக்காளியும் அநேகமாக தயாராகிவிட்டிருந்தது. பிறகு அந்தப்பிரதியை புங்குடுதீவில் வைத்து செப்பனிட்டேன். பின் மிகக் குறுகிய காலத்தில் ஒரு கலைவடிவமாகியது. அதை ஒரு நாடகம் என்று நினைத்து நான் உருவாக்கவில்லை. நான் ஒரு தொழில்சார் நாடகக்காரனோ அல்லது முழு நேர நாடகக்காரனோ அல்ல. திம்புப் பேச்சு வார்த்தைகளின் பொய்களை அம்பலப்படுத்தவேண்டும் என்ற பரப்புரை நோக்கத்தைத் தவிர வேறெதுவும் எனது மனதில் இருக்க வில்லை. ஆனால் பின் நாட்களில் அது தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் முதலாவது தெருக்கூத்தாக கூறப்படலாயிற்று. ஆனால் அன்றைக்கு அதைச் செய்தபோது நான் என்னை ஒரு நாடகக்காரனா கவே நினைத்திருக்கவில்லை என்பதை இங்கு முக்கியமாக அழுத்திச் சொல்ல வேண்டும்.

அதில் பங்குபற்றிய வீதி நாடகக் கலைஞர்கள் எங்கிருக்கிறார்கள் அவர்கள் தற்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

எங்கெல்லாமோ சிதறிப்போய்விட்டார்கள். பிரதான பாத்திரமாக நடித்த வர் எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. மற்றவர்கள் பெரும்பாலும் புலம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். அதில் இரண்டாவது பிரதான பாத்திரமாக நடித்தவர் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த அன்ரனி.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

அவர் இப்பொழுது பிரான்சில் இருந்து எழுதி வருகிறார்.

**வீதி நாடகத்தை விடுதலை விழிப்புணர்வை ஏற் படுத்தவல்ல ஒரு வீரிய வடிவமாக நீங்கள் எவ்வாறு கண்டுகொண்டீர்கள்?**

ஒரு யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்த அந்தச்சூழல் எமது சக்தியை இப்படியான விஷயங்களில் ஒன்றுதிரட்டக்கூடிய ஒரு கால அவகாசத்தை தந்தது எனலாம். யுத்த நிறுத் தத்தின் குறுகிய ஆயுளைக்கருதி அவசர அவசரமாக ஒரு செய்தியை சனங்களுக்குச் சொல்லவேண்டியிருந்தது. அதற்குச் சாதா ரண சனங்களின் நம்பிக்கைகளுக்கூடாக எங் களுக்கு அதிகம் பரீட்சயமானதும் சனங்க ளுக்குக் கடவுளின் செய்தியைச் சொல்லும் ஒரு பிரபலமான வடிவமாகவும் காணப்பட்ட கலையாடுதலை, உருவேறியாடுதல் என்பதை எடுத்து அதன் ஆன்மீக மற்றும் மத உள்ளடக் கத்தை வெளியில் எடுத்துவிட்டு அந்த இடத் தில் அரசியலை வைத்தேன். முன்பு யாழ், பரியோவான் கல்லூரியில் நான் நவீன நாட கங்களில் நடித்த அனுபவம் இப்படி ஒரு பரி சோதனை செய்வதற்கான துணிச்சலை எனக் குக் கொடுத்தது.

**'கடலம்மா' என்ற கவிதையே தங்களை கவிஞராக அறியப்பட வைத்திருக்கின்றது. அந்தக் கவிதை எழுந்த காலப்பின்னணிச் சூழல் பற்றிச் சொல்வீர்களா?**

குமுதினியில் கொல்லப்பட்டவர்களில் மிகவும் ஏழைகளாக இருந்தவர்களுக்கு சவப் பெட்டி களை வாங்கிக் கொடுக்க வேண்டியிருந்தது. அது தவிர, குமுதினியின் இரத்தக் கறையைக் கழுவவேண்டியும் இருந்தது. குமுதினியின் கீழ்த்தளத்தில் இரத்தமும் ஒயிலும் உப்பு நீரும் கலந்து ஒரு வித மரணநெடி வீசும் திரவம் தழும்பிக்கொண்டிருந்தது. அதை அகற்ற ஒருவரும் முன்வரவில்லை. அதை அகற்ற முன்வந்தவர்களுக்கு நிறையக் குடிக் கக்கொடுக்கவேண்டியிருந்தது. மதுபோதையு டன் மட்டுமே அந்த வேலையைச் செய்து முடிக்கலாம் என்றிருந்தது. எனவே இவற்றுக் கான செலவுகளைச் சமாளிக்க புங்குடுதீவில் காசு சேர்க்கப்பட்டது. பொதுமக்களும் வர்த்த கர்களும் விரும்பி முன்வந்து காசு தந்தார்கள். அந்தக் காசில் செலவளிக்கப்பட்டது போக ஒரு சிறுதொகை மிஞ்சியது. அதை வைத்து ஒரு துண்டுப் பிரசுரத்தை அடித்து மற்றவர் களின் உடல்கள் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்படும் நாளில் அவற்றை விநியோகிப் பது என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த துண் டுப் பிரசுரத்துக்காக நான் எழுதியதே 'கட லம்மா'. நிச்சயமாக அதை ஒரு கவிதை என்று கருதி நான் எழுதவில்லை. குமுதினி ஒரு மிதக்கும் சவ அறையாக அல்லது மிதக்கும் பாடையாக பெருங்கடலில் தனித்து நின்ற காட்சியை நேரில் கண்டவர்களில் ஒருவன் என்றவகையில் எனது மனப்பதிவுகளை எழுதி கவிஞர்களான சு.வில்வரத்தினம், மு.பொன்னம் பலம் போன்ற ஆகியோரிடம் காட்டினேன். அவர்கள் தான் சொன்னார்கள் அது ஒரு கவிதை என்று. அவர்களும் இரண்டு கவிதைகளைத் தந்தார்கள். மொத்தத்தில் மூன்று கவிதைகளுடன் அந்த துண்டுப்பிரசுரம் வெளிவந்தது.

**'கடலம்மா' பல சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி அந்தக் கவிதையை அடிப்படையாக வைத்து கடலம்மா எனும் நாடகத்தை இயக்கியிருந்தது. தமிழ்த் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிய தி.தவபாலன் இயக்கிய 'குமுதினியின் கதை' ஆவணப் படத்திலும் இக் கவிதை மிக்க பொருத்தப்பாட்டோடு இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் கவிதை அத்தகைய கலைப் படைப்புகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்குவது குறித்து தாங்கள் கருதுவது என்ன?**


குமுதினி, ஒரு படகு என்பதை விடவும் உயிருள்ள ஒரு பாத்திரமாகி விட்டது. நெடுந்தீவின் தொலைவும் தொன்மையும், தனிமையும் பெருங்கடலில் பதுங்கியிருக்கும் ஆபத்துக்கள் போன்றவற்றின் பின்னணியில் தீவுகளின் குறியீடாகி விட்டாள் குமுதினி. தனது பிள்ளை களைக் கொல்லக்கொடுத்துவிட்டு ஆபத்தான ஒரு கடல் வழியூடாக தினசரி பயந்து பயந்து வந்து போகும் ஒரு முதிய தாயை நினைவுப்படுத்தும் ஒரு குறியீடு குமுதினி. எனவே குமுதினியின் பாடுகளின் மீது எழுதப்பட்ட அந்தக் கவிதை ஏனைய படைப்புக்களுக்கு தூண்டுதலாகவோ அல்லது அடிப்படையாகவோ அமைந்திருக்கக்கூடும்.

**இந்திய இராணுவக் காலப் பகுதியில் தங்களின் மன உணர்வு, சிந்தனைத் தேடல், உழைப்பு, இயக்கம் எவ்வாறு இருந்தது என்பது பற்றி கூறமுடியுமா?**

ஐ.பீ.கே காலம் எனப்படுவது எனது உறங்குகாலங்களில் மிக நீண்டது.

**ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் நாவல்கள் எழுந்திருக்கின்றன அவை பற்றிய பார்வைகளை எம்மு டன் பகிர்ந்துகொள்வீர்களா?**

கற்பனைக்குப் பதிலாக மெய் விபரங்களே படைப்பின் உள்ளடக்கமாக மாறும் ஒரு பெரும் போக்காக மாறிவருகிறது. தமிழில் ஏற்கனவே இத்தகைய ஒரு போக்கை பிரதிபலிக்கும் படைப்புக்கள் ஆங்காங்கே வந்திருந்தாலும் கூட அது ஒரு இயக்கமாக கலை இயக்கமாக முன்னெடுக்கப்படுவது ஈழத்து போர் இலக்கியப் பரப்பில் தான். ஆனால் இதன் அர்த்தம் ஈழத்துப்படைப்புக்கள் எல்லாம் உரமானவை என்பதல்ல. படைப்பு அதன் உள்ளடக்கத்தின் மெய்தன்மை காரணமாகவோ அல்லது அதன் அரசியல் சாய்வின்மை காரணமாகவோ தர மானதாக மாறிவிடுவதில்லை. தவிர, ஈழப் போரின் போரிலக்கியங்களில் வரும் உண்மைகள் ஏதோ ஒரு பகுதியை வெளிக்கொண்டுவரப்படுகிறது. களத்திலும் சரி, புலத்திலும் சரி படைப்புக்கள் அவற்றின் அரசியல் சாய்வு காரணமாக உண்மையின் முழுப்பரப்பையும் வெளிக்கொண்டுவராத ஒரு நிலையே காணப்படுகிறது. ஒன்று இராணுவ இரகசியங்கள்





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



கவிதை மட்டுமல்ல சிறுகதை, நாவல் என்று எம்மிடம் உள்ள எல்லா கலை இலக்கிய வெளிப்பாட்டு முறைகளுமே காலத்தின் தேவைகளை ஒட்டி அடக்கப்பட வேண்டியவைகள்தான். எந்த ஒரு கலை இலக்கிய வடிவமும் நிரந்தரமானதுமல்ல, புனிதமானதுமல்ல. எதைச் சொல்ல வருகிறோம் என்பதே எமது வெளிப்பாட்டு வடிவத்தை தீர்மானிக்கவேண்டும். வடிவங்கள் எமது புதிய உள்ளடக்கத்தின் வீச்சை குறைக்கவோ, சிதைக்கவோ இடமளிக்கமுடியாது

என்பதற்காகவோ அல்லது போரின் அரசியல் சாய்வுகாரணமாகவோ உண்மையின் சொல்லப்படாத பகுதிகளும் வெளிவரக்கூடிய ஒரு காலம் வரும் போதே ஈழத்து போர் இலக்கியம் அதன் சிகரத்தை அடையமுடியும்.

இன்று தமிழ் நாவல்களின் போக்கு எவ்வாறு இருக்கிறது என்பதையும் கோடிட்டுக்காண்பியுங்கள்?

இக்கேள்விக்கு பதில் சொல்வதென்றால் தமிழில் வெளிவந்திருக்கும் எல்லா நாவல்களையும் வாசித்திருந்திருக்க வேண்டும். நாங்கள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்புவரை முற்று கையிடப்பட்ட ஒரு நிலத்தில் இருந்தவர்கள். எனவே எல்லா நூல்களும் எமக்கு கிடைத்திருக்கும் என்பதில்லை. இப்பொழுதும் கனி கொடாத சமாதானத்தால் அலைக்க வைக்கப்படுவோராயிருக்கிறோம். எனவே எல்லா நாவல்களையும் வாசித்த பின்பே இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியும்.

கவிதை குறித்து தங்களுடைய பார்வையைச் சொல்லுங்கள்?

கவிதை மட்டுமல்ல சிறுகதை, நாவல் என்று எம்மிடம் உள்ள எல்லாக் கலை இலக்கிய வெளிப்பாட்டு முறைகளுமே காலத்தின் தேவைகளை ஒட்டி அடக்கப்படவேண்டியவைகள்தான். எந்த ஒரு கலை இலக்கிய வடிவமும் நிரந்தரமானதுமல்ல, புனிதமானதுமல்ல. எதைச் சொல்ல வருகிறோம் என்பதே எமது வெளிப்பாட்டு வடிவத்தை தீர்மானிக்கவேண்டும். வடிவங்கள் எமது புதிய உள்ளடக்கத்தின் வீச்சை குறைக்கவோ, சிதைக்கவோ இடமளிக்கமுடியாது.

கவிதையின் போக்குகள் நிறையவே மாற்றம் அடைந்து கொண்டு செல்கின்றன? இத்தகைய தமிழ் கவிதையின் போக்குகள் குறித்தும் அது தொட்டு நிற்கும் பரப்பு குறித்தும் தங்களுடைய கருத்துக்களை கூறுங்கள்?

கவிதையின் போக்கில் ஆங்காங்கே மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவை எவையும் ஒரு பேருடைப்பை ஏற்படுத்த வல்லவைகளாக இது வரையிலும் அமையவில்லை. சில பரிசோதனைகள் ஆங்காங்கே நிகழ்ந்திருந்தாலும் கூட அவையெல்லாம் ஒரு பேரியக்கமாகவோ அல்லது பேருடைப்பாகவோ இனிமேற்தான் மாற வேண்டி இருக்கிறது. தனது வடிவத்தை தானே தன்னுள் கரைத்துக் கொண்டு தனது அடுத்த கட்டத்தை நோக்கி தனது அடுத்த கூர்ப்பை நோக்கி மேலெழும் கவிதை அல்லது அது வேறெப்படியும் அழைக்கலாம். அது இனிமேற்தான் வர இருக்கிறது.

புலம்பெயர்ந்தோர் கவிதைகள், கவிதைப்போக்குகள் குறித்து தங்களுடைய பார்வையை, கருத்துகளை கூறமுடியுமா?

மன்னிக்கவும், புலம்பெயர்ந்தவர்களின் கவிதைகள் எல்லாவற்றையும் வாசித்துவிட்டுத்தான் இது குறித்து மிக திருத்தமாகச் சொல்லமுடியும். இங்கு பார்க்கக் கிடைத்த கவிதைகளை வைத்துச்சொன்னால் புலம்பெயரிகளின் நாவல்கள் மற்றும் சிறுகதை இலக்கியங்களுடன் ஒப்பிடுகையில் கவிதைகளின் வளர்ச்சி முன்னேறி வருகிறது என்றே சொல்ல வேண்டும். பிறதேசங்களில் பதி வைக்கப்பட்டு வரும் தமிழாளர்களிடமிருந்தே தமிழ்க் கவிதை எதை எதிர்பார்க்கிறதோ அது இனிமேற்தான் வரவேண்டியிருக்கிறது.

நீங்கள் பத்திரிகைகளிலும் இணைந்து பணியாற்றியிருக்கின்றீர்கள் 'திசை' பத்திரிகையிலும் நீங்கள் எழுத்துப்பணி புரிந்திருக்கின்றீர்கள் பத்திரிகைத் துறையும் அதன் காத்திரமான சமூகப் பணிகளும் எவ்வாறு இருக்கும்?

உண்மைக்கு ஆகக்கூடிய பட்சம் சாட்சியாக இருப்பதே எல்லா மீடியாக்களுக்குமான ஒரு பொதுத்தர்மம். எமது பத்திரிகைகளும் ஏனைய எல்லா ஊடகங்களுமே இந்தப் பொது தர்மத்தை எவ்வளவுக்கு எவ்வளவு நெருங்கி வருகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது விடுதலையும் மேன் நிலையை அடையும்.

ஓவியத் துறையில் நீங்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக நீங்கள் விளங்குகின்றீர்கள்? ஓவிய நூலொன்றை நீங்கள் வெளிக்கொணர்ந்தும் இருந்தீர்கள் அது குறித்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்?

அது யுத்த காலத்தில் எழுதபட்டது. அது இன்னும் நூலாக வெளிவரவில்லை. அதை வெளிக்கொண்டுவரும் முயற்சிகள் தொடங்கப்பட்டு இடையில் நின்றுவிட்டன. வெளிச்சம் இதழில் தொடராக அது வெளிவந்தது. 20ம் நூற்றாண்டின் 'நவீன ஓவியத்தின் கதை' என்பது அதன் பெயர்.

ஈழத்தில் ஓவியத்துறை குறித்துப்பேசுங்கள் ?



https://tamileelamarchive.com/

அருகிலுள்ள தமிழ் நாடு மற்றும் சிங்கள ஓவியத் துறைகளோடு ஒப்பிடுகையில் நாங்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். ஒரு சீரியசான ஓவியர் தொழில் ரீதியாக நின்று நிலைக்க கடினமான ஒரு சமூகப் பொருளாதார, கலை, கலாச்சார சூழலே இப்பொழுதும் நிலவுகிறது .

தங்களுடைய பிள்ளையார் ஓவியங்கள் குறித்து பரவலாகப் பேசப்படுகிறது. Surrealism சர்ரியலிஸ பாணியிலான ஓவியம் என்ற கருத்து முன் வைக்கப்படுகின்றது. இந்த ஓவிய வேலை குறித்த கதையை அறியவிரும்புகின்றோம்.


முதலாவதாக, நான் ஒரு தொழில் முறை ஓவியன் அல்ல. ஓவியம் என்னுடைய முழு நேர வேலையும் அல்ல. பிள்ளையாரை ஒரு கற்கையாக கருதியே எனது கையையும் மனதையும் இணையச் செய்யும் ஒரு தொடர்ச்சியான கற்கையாகவே நான் அவரை வரைந்தேன். சுமார் ஆயிரத்துக்குக் குறையாமல் வரைந்திருக்கிறேன். நான் ஏன் பிள்ளையாரை தேர்ந்தெடுத்தேன் என்பதற்கு பின் வரும் காரணங்களைச் சொல்லமுடியும்.

முதலாவது அறிவியல் காரணம் - எமது புராணங்களில் வரும் பிள்ளையார் அறிவின் பிரதிநிதியாக அல்லது புத்திசாலித்தனத்தின் பிரதிநிதியாகவே வருகிறார். அகத்தியரிடம் இருந்து கங்கையை மீட்டது, இராவணனிடமிருந்து சிவலிங்கத்தை மீட்டது, மாம்பழத்தை தன்னுடையதாக்கிக்கொண்டது, போன்ற விஷயங்களிலெல்லாம் அவர் அறிவின் பிரதிநிதியாக நிற்கிறார். அதாவது மூல சக்தியின் ஒரு கடவுளாகத்தான் காட்டப்படுகிறார். நாங்கள் இருக்கும் யுகம் இப்பொழுது நாங்கள் வசிக்கும் யுகம் அறிவின் யுகம். அறிவே சக்தி. அறிவே பலம். அறிவே ஆயுதம். அறிவே எல்லாமும் என்கிற ஒரு கட்டத்தை நாங்கள் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். இந்நிலையில் அறிவின் பிரதிநிதியாக நிற்கும் அந்த வடிவத்தை நான் எடுத்தேன். இது அறிவியல் காரணம். மற்றது அழகியல் காரணங்கள் அவை இரண்டு. முதலாவது எம்மிடமுள்ள மிகவும் காலத்தால் முந்திய சரியலிஸ்டிக் ஓவியம், சர்ரியலிஸ்டிக் வடிவம் பிள்ளையாருடையது. மத்தியகாலத்தில் சற்றுப் பின்னாக தோன்றிய அந்த சர்ரியலிஸ போக்கை ஐரோப்பா தன்னுடையது என்று சொல்லலாம். ஆனால் அதற்கெல்லாம் முன்னுக்கே எங்களிடம் பிள்ளையார் இருந்திருக்கிறார். பிள்ளையார் ஒரு மகத்தான செயற்கை யானை முகத்தை ஒரு மனிதனுக்குக் கொடுத்துவிட்டு யானை முகத்தை ஒரு மனித உடலுக்கு பொருத்திவிட்டு அந்த யானை உடல் அந்த யானை முகம் உடலுக்குப் பொருந்த வேண்டும் என்பதற்காக உடலுக்கு ஒரு பானைத் தொந்தியை வைத்தார்கள். அங்கே அந்த யானை முகத்தை அந்தத் தொந்தி இணைக்கிறது. இது ஒரு மகத்தான கற்பனை.

'காமதேனு' அல்லது 'நரசிம்மம்' போன்றவற்றை விடவும் பிள்ளையார் அதிகம் சர்ரியலிஸ்டிக்காக வெற்றி பெற்ற ஒரு படைப்பாகக் காணப்படுகிறது. இது காரணமாகவும் இதனுள் மிக ஆதியான ஒரு சர்ரியலிஸ படைப்பு என்பதனாலும் நான் அதை எடுத்தேன். அடுத்த காரணம் நான் உருவங்களை செதுக்கிக்கொண்டு போனபோது பிள்ளையாரிடத்து வேறு எந்த ஒரு வடிவத்திலும் பெற்றிராத ஸ்திரத்தை அனுபவித்தேன். நான் பிள்ளையாரின் அணிகலன்களைக் கேட்டேன் தந்தார். ஆடைகளைக் கேட்டேன் தந்தார். கொம்புகளைக் கேட்டேன் தந்தார். கையில் வைத்திருக்கும் மோதிரத்தை கேட்டேன் தந்தார். வாகனத்தைக் கேட்டேன் தந்தார். எல்லாவற்றையும் தந்த பின்னும் எவ்வளவோ சிதைக்கப்பட்ட பின்னும் தொடர்ந்து அவர் அந்த சிதைவுகளுடனே முழுமையாக நின்றார். இது காரணமாகத்தான் நான் பிள்ளையாரை எடுத்தேன். அதாவது என்னுடைய சிதைவுகளுக்கும் பிரிவுகளுக்குமுரிய முழு அளவு எல்லையற்ற சுதந்திரத்தை நான் அந்த வடிவத்தில் அனுபவித்தேன்.

சிங்கள ஓவியர்களும், தமிழ் ஓவியர்களும் இணைந்ததான கலைப்பால முயல்வுகள் குறித்து தங்களுடைய கருத்து என்ன?

அது மிகவும் அவசியம். அரசியல், அறிவியல் ஊடகத்துறைகளில் இரண்டு இனங்களுக்குமிடையில் நிலவும் இடைவெளி குறைந்த பட்சம் கலைஞர்கள் மட்டத்திலாவது



கடக்கப்பட முடியுமா என்று முயல்வது வரவேற்கத்தக்கதுதானே.

புலத்திலும் நீங்கள் அடையாளம் காணக்கூடிய ஓவியர்கள் உருவாகி வருகிறார்களா? அவர்கள் யார் யார் என குறிப்பிட முடியுமா?

ஆம், கே.கே ராஜா போன்றவர்களை இங்கே சொல்லலாம். வைதேகி எங்கே இருக்கிறார் என்று தெரியாது, ஓரளவுக்கு அருந்ததி, மற்றது தயா, மகாவைச் சொல்லலாம்.

எழுத்தாளர்களுடைய சமூகப் பணிகள் எவ்வாறு இருக்கவேண்டும் என தாங்கள் கருதுகிறீர்கள்?

எழுத்துக்கும் வாழ்க்கைக்குமிடையே இடைவெளி இருக்கக்கூடாது. அல்லது குறைந்த பட்சம் அந்த இடைவெளியை இயன்ற அளவு குறைப்பதற்கான இடையறாத ஒரு போராட்டமாகவாவது படைப்பாளியின் வாழ்க்கை அமைந்தாலும் சரிதான். படைப்பாளி முதலாவதாக குறைந்தபட்சமாவது ஒரு போராளியாக இருக்கவேண்டும்.

'யாழ்ப்பாணமே ஓ எனது யாழ்ப்பாணமே!' 'வன்னிமான்மியம்' இவை எழும்பக் காரணமாக இருந்த மன உந்துதல்களைக் கூறமுடியுமா?



https://tamileelamarchive.com/

ஒளிப்படங்கள்: தி.தவபாலன்

இடப்பெயர்வு, தலைமறைவு, வனவாசம், உறங்குகாலம் என்பவற்றுக்கூடாக கண்டுபிடிக்கப்பட்ட எனது மொழியும் வெளிப்பாட்டு முறையும் மேற்படி படைப்புக்களின் ஊடாக அவற்றின் ஒரு கட்டதிரட்சியைப் பெற்றன எனலாம். முற்றுகையிடப்பட்ட ஒரு நகரத்தில் இருந்து எனது மூக்குக் கண்ணாடிகளையும் ஒரு மணிக்கூட்டையும் தொலைத்துவிட்டு, ஒரு ஆங்கில அகராதியுடன், இடம்பெயர்ந்தவன் நான். காடு என்னை தத்தெடுத்தது. கடல் எனது காயங்களை ஆற்றியது. தத்திப் பறக்கும் அந்த கொட்டைப்பாக்குக் குருவி எனது பாடலின் முதல் அடியை எடுத்துக் கொடுத்தது. கடலம்மாவில் தொடங்கியது வன்னிமான்மியம், யாழ்ப்பாணமே ஓ எனது யாழ்ப்பாணமே என்ற அதன் அடுத்த கட்ட கூர்ப்பை அடைந்தது.

மெய்யுள் என மு.தளையசிங்கம் அவர்கள் முன்வைக்கும் இலக்கியக் கருத்துப்பற்றி தங்களுடைய கருத்து என்ன?

மிகச்சரி. அகவடிவத்தின் தமிழ் கேட்டது, கேட்பது அதைத்தான்.

அவரை நீங்கள் எவ்வாறு எப்போது ஆகர்சிக்கத்தொடங்கினீர்கள்?

என்னுடைய 16 வது வயதில் என்று நினைக்கிறேன். நான் ஓ.எல் எடுத்ததன் பின் பரியோவான் கல்லூரியில் எனக்கு ஆசிரியராக, அவர் உண்மையாக எனக்கு நேரடியாக ஆசிரியராக இருக்கவில்லை திரு.யுகபாலசிங்கம் அவர்கள்தான் முதல் முதலாக தளையசிங்கம் என்று சொல்லக் கேட்டேன். அவருடைய வாயால் தான் தளையசிங்கம் என்ற அந்த பெயரை முதலில் கேட்டேன். அதற்குப் பின் 18 வது வயதில் புங்குடுதீவில் மு.தவின் உறவினர்கள் சகாக்கள் சீடர்களைக் கண்டேன். அந் நாட்களில் தளையசிங்கத்தை அவருடைய சகாக்களினூடாகவே தரிசித்தேன். அவருடைய எழுத்துக்களினூடாக அவரை கண்டுபிடிக்க உதவியது யேசுராஜாதான். எனது 21 வது வயதில் மு.தவின் நூல்களை எனக்கு வாசிக்கக் கொடுத்தார்.

இன்றைய உலகமயமாதல் பற்றியும் அதன் பண்புகள் பற்றியும் நன்மை, தீமைகள் குறித்தும் சொல்லுங்கள்?

ஐரோப்பியமயமாதலின் ஆகப்பிந்திய வடிவமே இது. ஐரோப்பிய மயமாதலை நாம் எப்படி எதிர்கொண்டோமோ போராடினோமோ அப்படியே இதையும் எதிர்கொள்ள வேண்டும். எமது அடையாளங்கள் கரைந்துவிடாதபடி போராடியாகவேண்டும். ஐரோப்பிய மயமாதலின் நன்மைகளை எடுத்துக்கொண்டு,செரித்துக்கொண்டு, தீமைகளை எதிர்த்துப்போராடியது போல பூகோள மயமாதல் அல்லது அமெரிக்க மயமாதலின் நன்மைகளையும் செரித்துக்கொள்வோம். தீமைகள் எம்மை விழுங்கிவிடாதபடிக்கு விழிப்பாகியிருந்து போராடுவோம்.

ஐரோப்பிய மயமாதலை நாம் பிழை என்று சொன்னால் நாங்கள் அச்சு இயந்திரம் தொடக்கம் கடிகாரம் வரை நாம் பாவிக்க முடியாது. சேலை, பிளவுஸ் தொடக்கம் உள்ளாடை வரை நாம் பாவிக்க முடியாது. ஐரோப்பிய மயமாதல் என்பது நம் நாட்டின் ஒரு கட்ட வளர்ச்சி. அதை நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். வரலாற்றில் எந்த ஒரு வளர்ச்சியும் வரலாற்றின் குறிப்பிட்ட அக்காலகட்டத்தின் அதிகாரத்தில் இருப்பவர்களின் கருவியாக மாறுவது இயல்பு. ஆனால் அதற்காக அந்த வளர்ச்சிகளின் சொந்தக்காரர்கள் இல்லை என்று சொல்லமுடியாது. அது முழு மனித குலத்துக்கும் உரியது. ஆசியாவின் கண்டுபிடிப்புக்களும் ஆசிய ஆபிரிக்க நாடுகளை காலனித்துவம் சுறண்டி எடுத்த உபரியும் இல்லையென்றால் அப்படி ஒரு கட்டமே வந்திருக்காது. அந்த வளர்ச்சிக்கு நாமும் வேள்வியைக் கொடுத்திருக்கிறோம். அந்த வளர்ச்சிக்கு எமது மூளையும் பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறது. எனவே அந்த வளர்ச்சிகளில் எமக்கும் உரிமை உண்டு. அப்படித்தான் பூகோள மயமாதல் அல்லது அமெரிக்க மயமாதல். பூகோள மயமாதல் என்பது அதன் புரிவு அர்த்தத்தில் அமெரிக்க மயமாதல் தான். அது முழு மனித குலத்தினுடையதும் ஒரு வளர்ச்சியின் விளைவு அதில் தக்கதை எடுத்துக் கொண்டு தகாததை விலக்குவதோடு அவை எம்மை விழுங்கிவிடாதபடியும் நாம் போராடுவோம் விழிப்பாயிருப்போம்.


எரிமலை எனும் சஞ்சிகை வாசகர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?

இந்தப் பதில் நான் ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பு ஐ.பி.சி. வானொலிக்கு அளித்த ஒரு பேட்டியில் சொல்லப்பட்ட பதிலின் தொடர்ச்சியாகத்தான் இருக்க முடியும். புலம் பெயர்ந்த மக்கள் இன்று அது புலம் பெயர்ந்து மக்கள் மத்தியிலிருந்தே எரிமலை வருகிறது என்பதனால் அதைப்புலம் பெயர்ந்த மக்களை நோக்கியே சொல்வது பொருந்தும். புலம் பெயர்ந்த மக்கள் இன்று ஈழப் போரின் நிதிப்பின்தளமாக மாறிவருகிறார்கள் மாறிவிட்டார்கள். இத்தகைய ஒரு சூழலில் அவர்கள் ஈழப் போரின் நிதிப்பின் தளமாக மட்டுமல்லாமல். அதுக்கு அப்பாலும் போகவேண்டிய ஒரு கட்டம் வந்துவிட்டது.

**ஈழப்போர் பிராந்தியத்தில் ஒப்பீட்டளவில் பாதகமான ஒரு சூழ்நிலைக்குள் இருக்கும் கட்டத்தில் புலம்பெயர்ந்த மக்கள் அங்கெல்லாம் நிதிப்பின்தளமாக மட்டுமின்றி அரசியல் பின்தளமாகவும் ராஜதந்திர பின்தளமாகவும் வேண்டிய ஒரு நிர்பந்தம் வந்துகொண்டிருக்கிறது. புலம்பெயர்ந்த மக்கள் இப்பொழுது அந்தந்த நாடுகளின் மொழிகளை கற்றுவிட்டார்கள். அந்தந்த நாடுகளின் வழமைகளைக் கற்றுவிட்டார்கள். அந்தந்த நாடுகளின் சமூகத்தோடு குறிப்பிடத்தக்கஅளவு ஒட்டியும் வருகிறார்கள். எனவே அவர்கள் அங்கே உள்ள அறிவுஜீவிகள், கலைஞர்கள், கொள்கைவகுப்பாளர்கள், அரசியல்வாதிகள், போன்றோரோடு சென்று கலந்து எமது போராட்டத்தின் நியாயத்தை அறிவுபூர்வமாக தர்க்க பூர்வமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களிடத்தில் ஒரு கருத்து மாற்றத்தை அல்லது அவர்களிடத்தில் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்த உழைக்கவேண்டும்.**

புலம் பெயர்ந்த மக்களுக்கு முன்பு மொழி ஒரு தடையாக இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது புலப்பெயர்ச்சி தொடங்கி கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களின் பின்னணியில். இப்பொழுது மொழி ஒரு தடை அல்ல. எனவே அவர்கள் அங்கெல்லாம் அந்த புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கக்கூடிய அறிவுஜீவிகள், கொள்கைவகுப்பாளர்கள் போன்றோரோடு உரையாடல்களை நடத்தி அவர்களோடு சந்திப்புக்களை ஏற்படுத்தி ஈழப்போரின் நியாயத்தை தக்க பூர்வமாக அவர்களுக்குச் சொல்லும் ஒரு பணி இப்பொழுது அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது.

https://tamileelamarchive.com/



# ஆதிகால மானுட வரலாறு

■ நிலாந்தன்

## நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்



கருவிலிருந்து மனித சிந்தனைக் கூர்ப்பைத் தூலமாக அடையாளம் காணலாம். கருவியும், சிந்தனையும் ஒன்றை மற்றொன்று பாதித்து படிப்படியாக வளர்ந்து வந்தன. அதாவது பொருளும், அறிவும் ஒன்றையொன்று பாதித்து வந்தன எனலாம். இப்படிக் கருவிலிருந்து தூலமாக அடையாளம் காணப்படும் சிந்தனைக் கூர்ப்பின் முதற் கட்டத்தில் மனிதன் வேட்டைக்காரனாகவும், உணவு சேகரிப்பவனாகவும் இருந்தான். அந்நாளில் அவன் இயற்கை விட்ட வழிகளில் எல்லாம் தன்போக்கில் அலைந்து திரிந்தான். உளவியல் அர்த்தத்திலும் பௌதீக அர்த்தத்திலும் அது எல்லா விதத்திலும் வேரற்றதொரு வாழ்க்கைதான். நிச்சயமின்மைகளின் மீது சதா அலையும் வாழ்க்கை. இந்த வாழ்க்கை முறைப்படி உடலுழைப்பே பிரதானமானதாக இருந்தது. சிந்தனை அல்லது அறிவு இரண்டாம் பட்சம்தான். மனித மனம் பதட்டமானதாகவும், ஓய்வற்றதாகவும் காணப்பட்ட காலப்பகுதி இது. ஒப்பீட்டளவில் சிந்தனைக் கூர்ப்பு மந்தமாக திகழ்ந்த காலப் பகுதி இது.

### அடுத்த கட்டம் மந்தை மேய்ப்பு

இங்கேயும் மனிதன் அதிகபட்சம் அலைபவன்தான். மந்தைகளிற்காக அவன் அசைய வேண்டியிருந்தது. முன்னைய வாழ்க்கையை விட இது பாதுகாப்பானதாகவும், உத்தரவாதமானதாகவும் இருந்ததுதான். எனினும் மந்தைகளின் உணவு, நீர் மற்றும் பாதுகாப்புக் காரணிகளை முன்னிட்டு எப்பொழுதும் அலையவேண்டியிருந்தது. மந்தைகளே அவனது அசைவைப் பெரிதும் தீர்மானித்தன. இதுவும் உளவியல் மற்றும் பௌதீக அர்த்தத்தில் பலவிதங்களிலும் வேரற்றதொரு வாழ்க்கைதான். இங்கேயும் உடலுழைப்பே பிரதானமானதாக இருந்தது. அறிவு இரண்டாம் பட்சம்தான். தொடர்ச்சியாகச் சிந்திப்பதற்கு அதாவது சிந்தனையை ஒரு தொழிலாகக் கொள்வதற்குரிய உத்தரவாதமான நிலைமைகள் இங்கேயும் இருக்கவில்லை. சதா அசைந்தபடி இருந்த அவனால் ஒரு நிலையான அவதானியாகவும் இருக்க முடியவில்லை.

### அடுத்த கட்டம் விவசாயம்

விவசாயம்தான் மனிதனை அவனது இலட்சக்கணக்கான ஆண்டுகால அலைதலில் இருந்தும் விடுவித்தது. அது அவனை மண்ணுடன் இறுகப் பிணைத்தது. உளவியல் மற்றும் பௌதீக அர்த்தங்களில் மனிதன் வேர் கொள்ளக்கூடியதான நிலைமைகள் இங்கிருந்தே தொடங்குகின்றன. இத்தகைய வேர் கொண்ட மனிதனே ஒப்பீட்டளவில் சிந்திப்பதற்கு வேண்டிய ஓய்வான, பதட்டம் குறைந்த நின்மதியான மனதைக் கொண்டிருந்தான். இப்பொழுது அவன் தற்சார்பாக ஒரு மகா அவதானியாகவும் மாறிவிட்டான். நிலஞ்சார் வாழ்வில் சிந்திப்பதற்கான தேவைகளும், சிந்திப்பதற்கான ஓய்வும் சிந்தனையைப் பொருட்களின் மீது பிரயோகிக்கத் தேவையான வளங்களும் அதிகரித்துச் சென்றன. சிந்தனைக் கூர்ப்பைப் பொறுத்தவரை இது எல்லா விதங்களிலும் பாய்ச்சலையே குறிக்கின்றது. இங்கேதான் மூளை உழைப்பின் பெயரால் சீவிக்கின்றது அதனாலேயே சமூகத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றதொரு சமூகப் பிரிவு மிக வலிமையோடு எழுச்சி பெற்றது. விவசாய உற்பத்தி முறையின் கீழ் இத்தகையதொரு சமூகப் பிரிவை உடலுழைப்பிலிருந்து விடுவித்துப் போவிக்கக்கூடிய அளவிற்கு உபரியும் காணப்பட்டது. மன்னர்கள், பிரதானிகள், நிர்வாகிகள், மதகுருக்கள், சமூக முகாமையாளர் போன்ற மூளை உழைப்பாளிகள் சமூகத்தின் ஏனைய உளைப்பாளிகள் மீதும் வளங்களின் மீதும் மேலாண்மை பெறும் நிலைதான் இது.

இங்கேதான் சிந்தனை அறிவு உடலுழைப்பைவிட முதன்மையானதாக மாறியது.

மனித சமூகக் கூர்ப்பில் இதுவரை காலமும் உடலுழைப்பு முதன்மைபெற்றிருந்த காலம் போய் மூளை உழைப்பு அதாவது அறிவு முதன்மை பெறும் ஒரு நிலையினையும் அதுவே சமூகக் கூர்ப்பின் மைய விசை

■ கருவிலிருந்து மனித சிந்தனைக் கூர்ப்பைத் தூலமாக அடையாளம் காணலாம். கருவியும், சிந்தனையும் ஒன்றை மற்றொன்று பாதித்து படிப்படியாக வளர்ந்து வந்தன. அதாவது பொருளும், அறிவும் ஒன்றையொன்று பாதித்து வந்தன எனலாம். இப்படிக் கருவிலிருந்து தூலமாக அடையாளம் காணப்படும் சிந்தனைக் கூர்ப்பின் முதற் கட்டத்தில் மனிதன் வேட்டைக் காரனாகவும், உணவு சேகரிப்பவனாகவும் இருந்தான். அந்நாளில் அவன் இயற்கை விட்ட வழிகளில் எல்லாம் தன்போக்கில் அலைந்து திரிந்தான். உளவியல் அர்த்தத்திலும் பௌதீக அர்த்தத்திலும் அது எல்லா விதத்திலும் வேரற்றதொரு வாழ்க்கைதான். நிச்சயமின்மைகளின் மீது சதா அலையும் வாழ்க்கை. ■



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/





யாக மாறியதொரு நிலையையும் இது குறிக்கின்றது.

இதுதான் மனித நாகரீகத்தின் தொடக்கம். அதாவது உடலைவிட மனம் அல்லது அறிவு முதன்மைபெறும் ஒரு நிலை.

ஆரம்பத்தில் நாகரீகம் எனப்படுவது காலம் இடம் சார்பாக மனிதனின் ஒரு குறிப்பிட்ட மனோநிலையைத்தான் குறிக்கின்றது.

எனவே, மனம் அல்லது அறிவு முதன்மை பெறுமொரு நிலையை நாம் நாகரீகத்தின் தொடக்கம் எனத் துணியலாம். இதன் படி அறிவு அல்லது மனம் முதன்மை பெறும் வாழ்க்கை முறையின் வளர்ச்சிக் கட்டமே முதல் நாகரீகம் எனலாம்.

விவசாய உற்பத்திமுறையின் கீழ் குறிப்பாக நதிக்கரைகளில் துரிதமாக அதிகரித்த குடித்தொகை, அதிகரித்த உற்பத்தி அதனால் அதிகரித்த உபரி இவற்றுடன் அதிகரித்த அனுபவங்கள் என்பவற்றின் திரட்சியாகவே முதல் நாகரீகங்கள் எழுச்சி பெற்றன.

எனவே இத்தகைய அர்த்தத்தில் கூறுமிடத்து விவசாயத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டதே மனித நாகரீகம் எனலாம்.

இற்றைக்கு சுமார் 12,000 ஆண்டிருந்து 9,000 ஆண்டு வரையான காலப்பகுதியில் அதாவது கி.மு 10,000 - 7,000 ஆண்டு வரையான காலப்பகுதியில்தான் பூமியில் உணவுத் தாவரங்கள் தோன்றினவென நம்பப்படுகின்றது. எனினும் ஒளிச்சேர்க்கைக்கு உகந்த காலநிலை சுமாராக கி.முன் 8,000 - 7,000 வரையான காலப்பகுதியில்தான் உண்டாகியது என நம்பப்படுகின்றது. அப்பொழுதுதான் கோதுமை, ரை, ஓட் முதலிய உணவுத் தாவரங்கள தோன்றின. சற்று ஏறக்குறைய இதே காலப்பகுதியில்தான் மேற்காசியாவின் ஜெரிக்கோவிலும், ஹெற்றல் ஹ்யூக்கிலும் மனிதன் தனது முதல் நிலையான குடியிருப்புக்களை நிறுவினான். இதன் படி உணவுப் பயிர்கள் விளையக்கூடியதான ஒரு காலநிலை அதாவது விவசாயத்திற்கு வாய்ப்பானதொரு காலநிலை உருவாகிய போதே மனிதன் மண்ணில் நிலையான குடியிருப்புக் களை நிறுவக்கூடியதான நிலைமைகள் தோன்றினவெனக் கருத இடமுண்டு.

வரலாற்றாசிரியரான ஜே.எம்.றொபேட்ஸ் என்பவர் இக்காலப்பகுதியிலிருந்து குறிப்பாக கி.மு 8000இல் இருந்து இன்று வரையிலும் பூமியில் குறிப்பிடத்தக்க பெரிய அளவிலான காலநிலை மாற்றங்களோ, நிலவியல் மாற்றங்களோ ஏற்படவில்லையெனக் கூறுகின்றார். எனவே இக்காலப்பகுதியின்பின் பூமியிலுண்டான அனேக மாற்றங்களும் மனிதன் செய்தவைகள்தான் எனக் கூறும் அவர் அத்தகைய மனிதன் செய்த மாற்றங்களில் சிறப்பானதொரு நிலையையே நாகரீகம் எனவும் கூறுகின்றார்.

எனினும் ஜெரிக்கோவிலும், ஹெற்றல ஹ்யூக்கிலும் குடியேறிய முதல் விவசாயிகள் அங்கு நாகரீகம் என நாம் அழைக்கப்படும் வளர்ச்சிகள் எதனையும் சாதித்திருக்கவில்லை. இக்குடியிருப்புக்கள் சுமாராக 2000 ஆண்டுகள் நிலவின. ஆனால் அவை அங்கு நாகரீகங்களை உருவாக்காமலேயே வரலாற்றின் தொல்லிருளில் மறைந்துவிட்டன.

இதுவரை எமக்குக் கிடைத்த தொல்லியற் சான்றாதாரங்களின் படி மேற்படி குடியிருப்புக்கள் ஒன்றில் பருவமழையை நம்பிய அல்லது நீர்நிலை நீரூற்றுக்களை நம்பிய விவசாயக் குடியிருப்புக்களாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஜெரிக்கோவில் காணப்படும் பிரமாண்டமான அரண்மனைகள் அங்கிருந்த அரிதான நீரூற்றுக்களை நம்பிய விவசாயக் குடியிருப்புக்கள்தான் என்று இன்று வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றார்கள்.

ஆதி விவசாயியின் இத்தகைய நீர்நிலைமை விவசாயத்தில் பல அடிப்படையான வரையறைகள் இருந்திருக்க முடியும். முக்கியமாக விவசாய உற்பத்தி முறையின்கீழ் சடுதியாக அதிகரித்த குடித்தொகைப் பெருக்கத்தை ஒரு கட்டத்திற்குமேல் தாங்கும் சக்தி நீர் நிலமைகளுக்கோ நீரூற்றுக்களுக்கோ இருந்திருக்க முடியாது. மேலும் இங்கு பயிர் செய் நிலம், உரமூட்டல் இன்றி தொடர்ச்சியாகச் சக்தி இழந்துபோகும் நிலையும் காணப்பட்டது. எனவே நீர்நிலை மைய வாழ்வானது அதுசார்ந்த நீர்நிலையைப் போலவே ஒருகட்ட வளர்ச்சிக்குப்பின் தேங்கிநின்றுவிடும் நிலைமைகளே அதிகம் இருந்திருக்க முடியும். இன்னொரு விதமாகச் சொன்னால் நீர்நிலை மைய வாழ்வில் இயற்கையைச் சுரண்டுவதில் அடிப்படையான வரையறைகள் இருந்தன எனலாம். அதாவது நீர்நிலை மைய வாழ்வில் முதல் விவசாயிகளால் முழு அளவில் வேர் கொள்ள முடியவில்லை என்பதேயாம். இதுதான் ஜெரிக்கோவிலும் ஹெற்றல் ஹ்யூக்கிலும் நாகரீகங்கள் எழுச்சி பெறாது போனமைக்கான பிரதான காரணமாக இருக்க வேண்டும்.

ஆனால் நதிப்பள்ளத்தாக்குகளில் இத்தகைய வரையறைகள் காணப்படவில்லை. அங்கு வாழ்க்கையும் நதியைப்போலவே தேங்காது அசைந்தபடி இருந்தது. பலவீனமான தொழில்நுட்பத்துடன் இருந்த ஆதி விவசாயியைப் பொறுத்தவரை நதிகள் இயற்கையின் வளங்களாகக் காணப்பட்டன. நதிப்பள்ளத்தாக்குகளில் ஆதி விவசாயத்திற்கு இன்றியமையாத பல அனுகூலமான அம்சங்கள் காணப்பட்டன.

நதிக்கரைகளில் காணப்பட்ட மென்மையான வண்டல் மண் பலவீனமான தொழில் நுட்பத்துடனிருந்த ஆதி விவசாயிடம் அதிகம் உழைப்பைக் கோரவில்லை. நதி உரத்திற்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



காக உழைப்பதிலிருந்த ஆதி விவசாயியை விடுவித்தது. பருவமழைகள் தோறும் பெருகிய நதித் தொலைவுகளிலிருந்து அள்ளிக் கொண்டு வந்த சத்தான வண்டல் மண்ணை தனது பள்ளத்தாக்குகளில் படியவிட்டுச் சென்றது. இது இயற்கையாக விநியோகிக்கப்பட்ட உரம் போல இருந்தது. இதனால் நதிக்கரை நிலம் தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட்டுவந்தது.

நதி, மழைக்காகக் காத்திருப்பதிலிருந்து ஆதி விவசாயியை விடுவித்தது. பயிர்ச் செய்கைக்கு வேண்டிய நன்னீர் போதியளவு நதியிடமிருந்தது. நதியிலிருந்து கிடைத்த மீன் போன்ற கடலுணவுகள் ஆதி விவசாயியைப் பொறுத்த வரை அவன் புரதச்சத்தை அதிகம் பெற்ற உணவு வகைகளில் முக்கியமானவைகளாகக் காணப்பட்டன. பிந்திய காலங்களில் அதாவது நகரங்களின் எழுச்சிக் காலங்களிலும், வர்த்தக நிர்வாகத்தின் போதும், நதி பிரதான போக்குவரத்துப் பாதையாகவும் வர்த்தக வழியாகவும் இருந்தது. அதோடு முக்கியமாக சமூகத்தையும், ராஜ்ஜியங்களையும் வர்த்தக மையங்களையும் இணைக்கும் பிரதான பரிபாலன மையக் கோடாக அது காணப்பட்டது.

வரலாற்றில் முன்னெப்பொழுதும் இத்தகைய அனுகூலமான உத்தரவாதமான நிலமைகளை ஆதி விவசாயம் அனுபவித்ததில்லை. நதிகளை அவன் ஒப்பீட்டளவில் வரையறையின்றி சுரண்டக்கூடியதாக இருந்தது. எனவே குடித்தொகை பெருகிச் சென்றது. உற்பத்தியின் வேகமும் அளவும் அதிகரித்தன. அதனால் மிகையுற்பத்தியின் அளவும் அதிகரித்தது. இப்படி உருவாகிய உபரியே நதிக்கரைகளில் பின் உண்டான எல்லா வளர்ச்சிகளுக்கும் ஆதாரமாக இருந்தது. இவ்விதம் உற்பத்தியும். குடித்தொகையும் ஒன்றையொன்று சார்ந்து துரிதமாக அதிகரித்துச் சென்றன. இந்த ஆதியான குடித்தொகைப் பெருக்கத்தை நதி தாங்கக் கூடியதாக இருந்தது.

நாகரீகங்களின் எழுச்சிக்கால அடிப்படையான முன் நிபந்தனைகளில் இதுவும் ஒன்று. அதாவது அதிகரித்த உற்பத்தியினதும், அதிகரித்த குடித்தொகையினதும், அதிகரித்த அனுபவங்களினதும் தொடர்ச்சியைத் தலைமுறைகள் தோறும் பேணியபடி ஓரிடத்திலேயே பரவிச் செறிந்து வாழும் நிலை என்பது ஹெற்றல் ஹ்யூக்கிலும், ஜெரிக்கோவிலும் இதற்கு வரையறைகள் இருந்தன. ஆனால் நதிகள் இந்த வளர்ச்சிகள் அனைத்தையும் தாங்கும் சக்தியோடு இருந்தன. இத்தகையதொரு போக்கின் வளர்ச்சி நிலைதான் முதல் நாகரீகம்.

* * * * *


கிளவுட் குளுக்கோன் போன்ற வரலாற்றாசிரியர்கள் ஒரு சமூகம் நாகரீகம் அடைந்துவிட்டதா என அடையாளம் காண்பதற்குரிய பிரதான பொது இயல்புளில் ஒன்றாகக் குறிப்பிட்ட அளவு மொத்த குடித்தொகை அதாவது 25,000 இற்கும் குறையாத குடித்தொகை பற்றிக் கூறுவதை இங்கு குறிப்பிடலாம்.

இக்கேள்விக்கு டாக்டர் டி.டி.கோசாம்பி தரும் விளக்கம் ஏற்புடையதாக இருக்கின்றது. இரும்புப் பிரயோகத்திற்கு வந்திராத அக் காலப் பகுதியில் தன்னிடமிருந்த பலவீனமான செம்பு மற்றும் தாமிர ஆயுதங்களினால் பெரிய காடுகளை அழித்துப் பயிர் செய்ய அன்றைய விவசாயியால் முடியாமலிருந்திருக்கும் என்பதும் மேலும், அடர்ந்த காடுகளிற்கு அருகில் வசிப்பது ஆபத்தான மிருகங்கள், பூச்சிகளின் தாக்குதல்களிற்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புக்களை அதிகம் கொண்டிருக்கும் என்பதாலும் பாலை நிலங்களைப் பிளந்து சென்ற நதிகளின் அருகில் காணப்பட்ட சிறிய பற்றைக் காடுகளை அழித்துப் பயிர் செய்ய ஆதி விவசாயி விரும்பியிருக்கலாம் என்றும் கோசாம்பி கூறுகின்றார்.

மேலும் மனித வாழ்விற்கும் விவசாய உற்பத்தி முறைக்குமான காலநிலைத் தேவைகளை ஒப்பீட்டளவில் அதிக பட்சம் பூர்த்தி செய்வதாகக் காணப்பட்ட இப்பிராந்தியங்களின் மித வெப்பநிலையும் ஆதிவாசிகளைக் கவர்ந்திருக்கலாம்.

இம்மூன்று பிராந்தியங்களிலும் தோன்றிய எல்லா நாகரீகங்களும் ஒரே மாதிரியான வளர்ச்சிகளைக் கொண்டிருந்தன எனக் கூறமுடியாது. ஏனெனில், மனிதனின் சமூக கலாச்சார மத சிறப்பு அடையாளங்கள் முழு வளர்ச்சியடைந்து வந்த காலப்பகுதி இது. அதாவது பூர்வீக நிலையில் இருந்து வந்த இனத்துவ, மத கலாச்சார வேறுபாடுகள் ஆழமாக்கப்பட்டதும், கூர்மையடைந்ததும் நாகரீகங்களின் எழுச்சியோடுதான். இதற்குரிய முக்கிய காரணம் அந்தந்த நாகரீகங்களின் அமைவிடம் காரணமாக ஒவ்வொரு நாகரீகமும் தனக்கென்றே தனியடையாளங்களையும் தனித்துவமான நூதனமான வளர்ச்சிகளையும், எழுச்சிகளையும், வீழ்ச்சிகளையும் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் நாகரீகங்களின் வளர்ச்சிப் போக்குக் குறித்து ஒரு பொது விதிக்கு வந்து சேர்வதில் பல சிரமங்கள் உண்டு. இத்தகைய ஒரு பொதுவிதி ஒவ்வொரு நாகரீகத்திற்கும் உரிய நூதனமான தனித்துவங்களைப் புறக்கணித்துவிடாதபடி அமையவேண்டியுமுள்ளது.

இந்த வகையில் நாம் இங்கு, நாகரீகம் எனப்படுவது மனித சமூகக் கூர்ப்பில் அறிவு முதன்மை பெறும் ஒரு நிலையின் வளர்ச்சிக் கட்டம் என்பதின் அடிப்படையில் நோக்குமிடத்து எல்லா நதிப்பள்ளத்தாக்குளிற்குமுரிய ஒரு பொதுப் போக்கை அடையாளம் காணலாம். இதன்படி குறிப்பிட்ட ஒவ்வொரு நதிப் பள்ளத்தாக்கிலும் ஆதி விவசாயிகள் எப்படியெப்படி அறிவு முதன்மை பெறும் ஒரு நிலையை நோக்கி நகர்ந்திருப்பார்கள் என்பதை அடையாளம் காண முயல்வோம். அதாவது பொருளுலகை வசப்படுத்தும் தனது முயற்சிகளில் மனித அறிவு எத்தகைய வளர்ச்சிப்படி நிலைகளிற்கூடாக அதன் முதல் முழு வெற்றியை பெற்றிருக்க முடியும் என்பதனை அடையாளம் காண்










https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



பதே அது.

மனித வாழ்வில் அறிவு முதன்மை பெறும் நிலை அல்லது பொருளுலகம் அறிவின் வசமாகும் நிலை அல்லது சமூகத்தில் மூளை உழைப்பாளிகள் பிரதானிகளாக மாறிய நிலை என்பது மனிதன் நதிகளை வந்தடைந்த பின்னர் திடீர்ப்பாய்ச்சலுற்றது எவ்வாறெனில் மேற்படி மூளை உழைப்பாளிகளைப் போசிக்கத் தேவையான உபரி உற்பத்தி நதிகளை மறித்துப் பயிர் செய்யும் நதி நீர்ப்பாசன முறையின் கீழேயே முன்னெப்பொழுதையும் விட ஸ்திரமாகவும், அதிகரித்த அளவிலும் வேகத்திலும் வளர்ந்து சென்றது என முன்னர் கண்டோம்.

எனவே நதி நீர்ப்பாசனமே நதிக்கரை வாழ்வில் மனிதன் அடைந்த எல்லா மகத்தான வளர்ச்சிகளுக்கும், தாயாக அமைந்தது. நதி வசமாக வசமாக பொருளுலகின் மீதான மனித அறிவின் பிடியும் இறுகி இறுகிச் செல்லலாயிற்று, என்பதினாலேயே சில வரலாற்றாசிரியர்கள் பாசன பயிர்ச்செய்கை முறையை 'நாகரீகத்தின் திறப்பு' என்று கூறுகின்றார்கள்.

பாசனப் பயிர்ச்செய்கை முறையின் தேவைகளே சமூகத்தில் ஆகச் சிறு அலகாகிய குடும்பத்தை உறுதிப்படுத்தியது. அதேசமயம் சமூகத்தின் ஆகப் பெரிய அலகாகிய அரசு போன்ற நிறுவனங்களின் கருநிலை முன்னோடியாகிய முதலாவது புத்தி பூர்வ சமூக முகாமைத்துவம் அல்லது நீர்ப்பாசன முகாமைத்துவமும் மேற்படி பாசனப் பயிர்ச்செய்கை முறையின் தேவைகளின் நிமித்தமே தோன்றி வளர்ந்தது.

இதனை இன்னும் திருத்தமாகச் சொன்னால்; குடும்பம், அரசு, போன்ற அமைப்புக்கள் யாவும் இயற்கையை வசப்படுத்தும் மனிதனின் தேவைகளின் வளர்ச்சிப் போக்கில் உருவாகியவையேதான் எனலாம்.

மற்றது மதங்களும், புராணங்களும் எந்த இயற்கையை, நதியை, சமூகத்தை வசப்படுத்த வேண்டியிருந்ததோ அந்த இயற்கையை முதலில் ஏதோ ஒரு தொகுக்கப்பட்ட ஒழுங்கிற்குள் விளங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. இப்படி இயற்கையைப் புரிந்துகொள்ளும் பிரயத்தனங்களே முதல் மதங்கள், புராணங்கள் அவற்றின் முதலாவது தொகுக்கப்பட்ட வடிவத்தைநோக்கி இட்டுச் சென்றன.

நதிக்கரைகளில் இத்தகைய வளர்ச்சிப் போக்கில் இறுதியாகக் கண்டு பிடிக்கப் பட்டவையே எண்ணும் எழுத்தும். அதாவது நதிக்கரைகளில் அறிவு பொருளுலகின் மீது அதன் முதற்கட்ட இறுதி வெற்றியைப் பெற்றுவிட்டதை எண்ணும் எழுத்தும் குறிக்கின்றன. எண்ணோடும், எழுத்தோடும் பொருளுலகின் மீதான அறிவின் பிடி முன்னெப்பொழுதையும்விட பலமானதாயும், உறுதியானதாயும் மாறிவிட்டது. எனவேதான் எண்ணோடும், எழுத்தோடும் மனிதனின் முதல் நாகரீகம் அதன் முதிர் நிலையை எய்தியது என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

நதிக்கரைகளில் மனிதன் இந்த வளர்ச்சிகளை எவ்விதம் அடைந்து சென்றான் என்பதை நாம் இனி விரிவாகக் காண்போம்.

நதிக்கரைகளில் முதலில் குடியேறிய விவசாயிகளிடம் ஏர் இருக்கவில்லை. ஏரின் முன்னோடிக் கருவிகளான பலவீனமான பண்படுத்தும் கருவிகளையே அவர்கள் வைத்திருந்தார்கள். உலோக பாவனையும் அப்போது அதன் ஆரம்ப நிலையிலேயே இருந்தது. குடும்பம் அப்பொழுதுதான் சமூகத்தின் ஆக அடிப்படை அலகாக உருவாகிக் கொண்டிருக்கமுடியும். ஏனெனில் விவசாயந்தான் குடும்பத்தைத் திட்டவட்டமாக்கியது.

குடும்பத்தின் தொடக்கத்தை அடையாளம் காண்பதற்குரிய போதிய தொல்லியற் சான்றாதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் விவசாய உற்பத்தி முறையின் கீழ்த்தான் குடும்பத்திற்காக தேவைகள் அதிகரித்திருக்கலாம். குறிப்பாக ஆதி விவசாயிக்கு அவசியமாகியிருந்த ஆக அடிப்படை வேலைப் பிரிவினையை குடும்பமே இலகுவாக்கி கொடுத்திருக்க முடியும். எனினும் ஜெரிக் கோவிலும் ஹெற்றல் ஹ்யூக்கிலும் காணப்படும் வீடுகளில் இருந்து குடும்பத்தை அடையாளம் காண்பதற்குரிய தூலமான சான்றாதாரங்களைப் பெற முடியவில்லை. எனவே நதிமைய வாழ்வில்தான் அதன் ஆரம்ப காலங்களில் எப்பொழுதாவது குடும்பம் அதன் முழு வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். இதன்படி கூறுமிடத்து முழு வளர்ச்சியடைந்த குடும்பத்தின் தொடக்க காலம் கி.மு. 6000 இற்கு முன் செல்வதற்கு இல்லையெனலாம். நதிமைய வாழ்வில்தான் குடும்பம் முதன்முதலாக அதன் பல்பரிமாணத் தேவைகளோடும் காணப்படுகின்றது. ஆதி விவசாயியின் மத, புராண, கலாச்சார நம்பிக்கைகளின் தொடர்ச்சியான அனுஸ்டானக் களமாக குடும்பமே இருந்திருக்க முடியும். இதன்படி மேற்படி மத, புராண, கலாச்சார அடையாளங்கள் தலைமுறைகள் தோறும் கடத்தப்படுவதற்குரிய ஆக அடிப்படை ஊடகமாகவும் குடும்பமே இருந்திருக்க வேண்டும். மேலும் சமூகத்தின் ஏனைய அனுபவங்களைக் குறிப்பாக தொழில் நுணுக்கங்களை தலைமுறைகளிற்கூடாகப் பத்திரமான முறைகளில் கடத்துவதற்குரிய பிரதான ஊடகமாகவும் அதாவது ஆதியான கற்பித்தல் முறையின் ஆக அடிப்படை அலகாகவும் குடும்பம் இருந்திருக்க வேண்டும். இவற்றுடன் உபரியின் திரட்சிக்கும் அதாவது சொத்துக்கள் தலை முறைகள் தோறும் பரிமாறப்படுவதற்கும் குடும்பமே ஒரு அடிப்படை அலகு. குடும்ப மனித உறவுகளால் வனையப்பட்டிருந்தான். அவனது வேரற்ற மூதாதையரைப் போல அவன் இப்பொழுது ஒரு உதிரி அல்ல. குடும்பம் அவனிடம் ஏதோவொரு ஒழுங்கைக் கோரியது; பொறுப்புணர்ச்சியைக் கோரியது. அது அவனது பாலியற் தேவைகளை ஒரு ஒழுங்கான கட்டுப்பாடான விதத்தில் தீர்த்து வைத்தது. எனவே இத்தகைய குடும்பத்தின் பல்பரிமாண செயற்பாடுகளின் அடிப்படையில் கூறுமிடத்து நாகரீகத்தை நோக்கிய வளர்ச்சிப் போக்கில் மனிதனின் உளவியலைப் பேணியதிலும், நெறிப்படுத்துவதிலும் செழுமைப்படுத்தியதிலும் குடும்பம் முக்கிய பங்காற்றியது எனலாம்.

சமூகத்தின் ஆக அடிப்படை அலகான குடும்பம் மனிதன் நாகரீகத்தை நோக்கி எடுத்து வைத்த முதல் அடிகளில் ஒன்று.

இன்னும் வரும்



நதி நீர்ப்பாசனமே நதிக்கரை வாழ்வில் மனிதன் அடைந்த எல்லா மகத்தான வளர்ச்சிகளுக்கும், தாயாக அமைந்தது. நதி வசமாக வசமாக பொருளுலகின் மீதான மனித அறிவின் பிடியும் இறுகி இறுகிச் செல்லலாயிற்று, என்பதினாலேயே சில வரலாற்றாசிரியர்கள் பாசன பயிர்ச்செய்கை முறையை 'நாகரீகத்தின் திறப்பு' என்று கூறுகின்றார்கள்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

சுனாமிப் பேரழிவின்
ஓராண்டு நினைவாக....

# எய்தவன் இருக்க அம்பை நொந்தோம்!?



எங்கள்
நேசிப்பிற்குரிய தேசத்தின்
நெய்தல் பெரு நிலத்தை
ஆழிப்பேரலை அடித்துத் துவைத்தது.
நாட்கள் நகர்ந்தாலும்,
நெஞ்சு துடிக்கிறது இன்றும். . .

அலையே. . . . . !
அமைதியானாய், எப்படி. . . . ?
மருங்கு நீளவும் மரணக்காடாய் சபித்துவிட்டு
மௌனித்துக் கிடக்கிறாய், எப்படி. . . ?
எந்தக் குற்ற உணர்வும் இல்லாது
பொய்யாய் நுரை பொங்க,
எப்படிச் சிரிக்க முடிகிறது உன்னால்?
ஆனாலும் உன்னை,
வேண்டாம் என வெறுக்கவும் முடியவில்லை
அன்பாய் ஈர்த்து அணைக்கவும் முடியவில்லை.

கரைவந்து கால்தழுவி
கடல்மீளும் வெள்ளலையே
காதலித்தாய் என்றெல்லோ
கனவுகள் கண்டோம்.
அணைத்த கைதானே அடித்தும் போட்டது.
நாமும் தான். . . .
அன்றெழுந்த வெஞ்சினத்தில்
காதகி மூளி காட்டேரி என்று
கரித்துக் கொட்டினோம், சபித்தோம்
அவசரத்தில் வார்த்தைகளை
அள்ளி அனல் குழம்பாய் விதைத்தோம்
எம் தார்மீக கோபம் நியாயம்தானே!
தவறு என்பதால் தாங்கி கொண்டாய்
ஆனாலும் உன் தவிப்பும்
தாமதமாய் புரிந்தது. . . .
கடல் நடுவே நிலம் பிளந்து
காவு கொள்ள உனை
கரை அனுப்பி வைத்தது
எய்தவன் இருக்க அம்பை நொந்தோம்!

ஆழிப் பேரணங்கே. . . .
சரி. . . .வா! சமரசம் செய்து கொள்வோம்
என்ன இருந்தாலும்
எஞ்சிக் கிடக்கின்ற ஏதிலி உறவுகள்
பாய்விரித்து நாளை படகேற வேண்டும்.
அலையேறி துடுப்பசைத்து
வலைவீசி வாழ்தலன்றி
இயைந்து எதுசெய்ய இயலும் இவர்க்கு?
உப்பு நீரோடு வாழ்வெனினும்
உவப்பான வாழ்வன்றோ
அடித்த அலைக்கரங்களே! ? மீண்டும்
அணைத்துக் கொள்.

சாம்பரில் இருந்து தளிர்த்து எழுந்த
சந்ததி எங்களது
அலை எழுதிய அவலம்
அழித்தெழுத மாட்டோமா
புலத்து உறவுகள், பொதியாய் மதியாய்
பொருண்மிய வலுச்சேர்க்க வந்தார்.
இத்துயர் களைந்தும்
இடர்தாண்டி எழுவோம்!

அலையே. . . . .
அழித்த உயிர் தவிர்த்து
அனைத்தும் மீட்போம்!

சோதியா



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# அவஸ்தை



காலைப்பனி மேனிதடவ உள்மனக்கூட்டில் ஒருவித உணர்வு உரசிற்று. கதிரவன் தன் புன்சிரிப்போடு சாளரம்நோக்கி வந்தாள் தொலைபேசியில் பொருத்தப்பட்டிருந்த அலாரம் மணி அடித்துக்கொண்டிருந்தது. எழுப்புவதுபோல் அலறியெழுப்பியது. காலையிலிருந்து மாலைவரை ஓயாமல் உழைத்ததால் அசந்துறங்கினான் அவன். அலாரம் மணியின் அலறல் ஓசை அதிர அவசரம் அவசரமாக எழும்பினான். நிலக்கீழ் தொடருந்தின் தரிப்பிடம்நோக்கி வேகமாக ஓடிச்சென்றான். கடமுடக்கும் ஒலியெழுப்பி தான்வரும் திசையறியத்தந்து சில நிமிடங்களில் தரிப்பிடம் தரித்து வாசல்கதவை திறந்து வரவேற்றது.

தொடருந்தின் கடைசிப் பெட்டிக்குள் நுழைந்து கொண்ட அன்ரன் கடைசி ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். மெல்லிய குளிர் காற்று மேனிதடவ இமைகள் மூடுவதும் திறப்பதுமாக பொய்த்தூக்கம் அவனை அப்பிக் கொள்ள பக்கத்து இருக்கையில் தமிழ் சொற்கொட்டுக்கள் பெட்டியை அதிரவைப்பது போல் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. பல்லினமக்கள் அந்த பெட்டியில் அமர்ந்திருந்தாலும் எம்தமிழ் உறவுகளின் அரசியல் ஆர்வம் ஒருவகையில் அவன் இதயத்தை பூரிப்படைய செய்திருந்தாலும் இடம், பொருள், ஏவல் என்பதை உணர்ந்திருக்க வேண்டும் என்று ஒருவிதமான எரிச்சலும் அவனை ஆட்கொண்டது.

தொடர்ந்த அவர்களின் அரசியல் விவாதத்தை காதில் நுழைத்துக் கொள்ள தயாராகிக் கொண்ட இவன் சாளரக்கண்ணாடியில் தலையை சாய்த்து செவியை அரசியல் விவாதத்தில் கலக்கவிட்டான்.

"அண்ணை நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் இலங்கை அரசாங்கம் எங்களுக்கு ஒன்றும் தரமாட்டாங்கள். நாங்கள் அடிச்சுப்பறிச்சாலொழிய வேறு சந்தர்ப்பமே இல்லை" என இலங்கை இனவாத அரசால் தமிழன் தொடர்ச்சியாக ஏமாற்றுப்பட்டு வந்த அனுபவத்தின் பால் ஒருவர் அறுத்துறுத்து கூறினார்.

மற்றவர் "என்னதம்பி நீ விசர்க்கதை கதைக்கிறாய். நெடுகிலும் சண்டைபிடிச்சு சாகிறதுதான் முடிவா இப்பதான் புலிகள் மீதுள்ள தடையை எடுத்து சமாதானத்தை தந்திருக்கிறாங்கள் இதால எல்லா சனமும் நிம்மதியா இருக்குதுகள் இதுக்கு பிறகு என்ன வேணும்".

"இப்ப நடந்து கொண்டிருக்கிறது சமாதானம் இல்லை நிழல்யுத்தம் இந்த சமாதானத்துக்கான காலத்திலும் தமிழன்தான் சாகிறான். அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்யாத இலங்கை அரசு ஏன்?.. இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான பணிகளை செய்வதற்கே இடைக்கால உத்தரவை பிறப்பித்து முடக்கி வைத்த சிங்கள அரசும் அதன் சட்டமும் தமிழனுக்கு எப்படி நியாயமான சுதந்திரமான வாழ்வை கொடுக்கும்"

பக்கத்து இருக்கையில் சூடாக நடை பெற்றுக்கொண்டிருந்தது அரசியல் விவாதம், கடந்த காலத்தின் நீண்டநினைவுகள் மனதிரையில் காட்சியாய் விரிகின்றது.

அது ஒரு அழகான கிராமம், வெள்ளை மணலும், பச்சைவிரிப்பால் கிராமத்தை போர்த்தி நிற்கும் மரம் செடிகளும் வடக்கே கடற்கரையும் தெற்கே வயல்வெளியும் என வனப்போடு இருக்கும் இந்தக் கிராமத்திற்கு எல்லாவற்றையும்விட வரலாற்றுஅழகு கிராமத்தின் கீரிடமாய் வீரியத்தோடு நிமிர்ந்து நிற்கிறது. ஆம் தமிழீழ போராட்ட வரலாற்றில் தமிழ்மண் மீட்பு பணியில் கடலால் தரையிறக்கிய போராளிகளின் புனித சுவடுகள் பதிந்ததினால் தேசத்தின் விடுதலை வரலாற்றில் குடாரப்பும் தலைநிமிர்ந்து நிற்கிறது. இந்தக் குடாரப்பு கிராமத்தில்தான் எலியாஸ் குடும்பம் எளிமையான வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தது.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

"அம்மா நான் பள்ளிக்கூடம் போவிட்டுவாறன்" சரியம்மா. கவனமா போட்டுவாங்கோ, என தன் சிட்டை பள்ளிக்கு அனுப்பிவிட்டு கடற்கரைக்கு விரைந்தாள் மரியம்மா.

கட்டுமரம் கண்ணுக்குள் மிதக்க சந்தோசத்தில் மனம் மிதக்க சுட்டுக்கொண்டிருக்கும் பனங்காய் புட்டையும், தேத்தண்ணிப்போத்திலையும் அம்பறாக்கூட்டின் அருகில் வைத்துவிட்டு கரை தொட்ட கட்டுமரம் நோக்கி கணவனிடம் செல்கின்றாள் மரியம்மா. காற்றோடும், கடலோடும் போராடி வீட்டின் நாளாந்த விடிவுக்காக சவள்பிடித்து களைத்துப்போன கணவன் எலியாஸ். மனைவியின் முகமலர்ச்சி கண்டு தேகம் புத்துயிர் பெற புன்சிரிப்போடு, கண்ணின் அசைவால் வரவழைத்தவன்

"என்னப்பா மோள் பள்ளிக்கூடம் போட்டாவே ?" "ஓமப்பா இப்பதான் அனுப்பிப்போட்டு வாறன்" என செல்லமாக பதிலளித்தாள் மரியம்மா. "அப்ப பெரியவன் என்ன செய்யிறான்?" "அவரோ, ராசாமாதிரி நித்திரை கொள்ளுறார். கடற்கரைக்கு போய் அப்பாவுக்கு தேத்தண்ணியையும் பனங்காய்ப்புட்டையும் குடுத்துட்டு வாடா எண்டா, மறுபக்கமா புரண்டுபோய் படுத்திருக்கிறான்". "சரியப்பா, பிள்ளையை சினக்காத, மூத்தபிள்ளை செல்லமா வளர்ந்திட்டான், இந்தக் கஸ்ரப்பட்ட தொழில் பக்கமே வரவேண்டாம், அவன் படிக்கட்டும், அதுகாணும்"

எலியாஸ், மாரியம்மா தம்பதிகளின் மூத்தமகன் பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதிவிட்டு பரீட்சையின் பெறுபேறுகளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றான்.

"அது சரியப்பா, நாளைக்கு நத்தார், அந்தோனியாரிட்டை இரவு பூசைக்கு போகவேணும். இரவைக்கு கொழுக்கட்டையும் அவிக்கவேணும், எல்லா அடுக்குகளும் வாங்கியாச்சே" "இண்டைக்குப் படுகிற மீனை வித்துப்போட்டு வாங்குவமெண்டு இருக்கிறன்" "கடவுளே எண்டு நத்தாரை கொண்டாடுறதுக்கெண்டு நல்ல சின்னட்டி, கும்பிளா எல்லாம் பட்டிருக்கு, நத்தாரை இந்தாண்டு சிறப்பா கொண்டாடுவம்" என மனைவியோடு மனமகிழ்வோடு பேசிக்கொண்டான்.

மனித வாழ்க்கையை பொறுத்தமட்டில் கொஞ்சம் பணக்கஸ்ரம் வந்து விட்டால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் மனக்கஸ்ரம் வருவது வழக்கம். ஆனால் எலியாஸ்சும், மரியம்மாவும் பிறந்ததிலிருந்தே ஏழைகளாக இருந்தும் இவர்களது குடும்ப வாழ்க்கையில் மனக்கஸ்ரம் மருந்தளவும் இவர்களை ஆட்கொண்டதில்லை. மாறாக இவர்களுக்கிடையில் பண்பும், பாசமும் நிறைந்தே காணப்பட்டது.

அறக்கொட்டியான் வலையில் அகப்பட்ட மீன்களை அள்ளிக்கட்டிக்கொண்டு மரியம்மா பளையில் சந்தைப்படுத்திவிட்டு நத்தாருக்குரிய பொருட்களையும் பிள்ளைகளுக்கு புத்தாடையும் வாங்கிக்கொண்டு குடாரப்புக்கு வர மாலை யாகிற்று. விரைவு விரைவாக நத்தார் கொண்டாட்டத்திக்குரிய தின்பண்டங்கள் தயாரிப்பதில் தயாரானாள், கூடவே கணவனும் ஒத்தாசை வழங்க கொண்டாட்டத்திற்கு தேவையான தின்பண்டங்களை செய்து முடித்தாள், முடிக்கவும் கடக்குட்டியின் முனகல் சத்தம் மரியம்மாவின் செவிப்பறையை எட்ட

"என்னம்மா, ஏன் சிணுங்குகிறாய்"

"எல்லா பெடியளும் நாளைக்கு பட்டம் ஏத்தப் போகினம் எனக்கு பட்டம் ஒட்ட கடதாசி இல்லை"

"சரி பிள்ளை அம்மா பிள்ளைக்கு நாளைக்கு வாங்கித்தாறன் என்ன"

அன்னையின் இனிப்பான வார்த்தை மேரியின் சிணுங்கலை தணித்துக்கொண்டது. "இஞ்சாருங்கோப்பா கெதியா வெளிக்கிடுங்கோ 12மணி பூசைக்கு அந்தோனியாரட்டை போகவேணுமல்லே" " இந்தா வெளிக்கிடுகிறனப்பா".. எனக் கூறிய மரியம்மா விரைவாக வெளிக்கிட்டுவர அனைவரும் அந்தோனியாரிடம் வந்து சேர்ந்தார்கள்.

அந்தோனியாரின் இரவுப்பூசையில் கலந்துவிட்டு வீடு வந்துசேர பின்னிரவாகி கண்ணில் தூக்கம் முட்ட அனைவரும் அசதியில் விழி மூடி அசந்துறங்க...

தென்னங்கீற்றுகளுக்கிடையில் காலைச்சூரியன் செங்கதிர்களால் முற்றத்தில் சித்திரம் கீறி சிரித்திடும் கண்கொள்ளாக் காட்சியின் விரிப்போடு நத்தார் பண்டிகை பிறக்க வெடியும் வாணமும் விளக்கேற்றி வரவேற்றுக்கொண்டது. அந்தவேளையில் அசந்துறங்கிய எலியாஸ் குடும்பத்தினர் குதூகலத்தோடு நத்தார் தினத்தை வரவழைத்து உற்றார் உறவினர் நண்பர்களை உளமகிழ்வோடு வரவழைக்கத் தயாராகினார்கள்.

நவம்பர்25 இல் உறவுகள் ஒன்றாய்க்கூடி உண்டு மகிழ்ந்து உவகை பொங்கிட உல்லாசமாய் உருண்டோடியது அன்றைய நாள் .

ஓடியோடி உற்றார் உறவினர் நண்பர்களை உபசரித்து ஆடிப்பாடிய அன்றைய பொழுது மீண்டும் அசதியை ஏற்படுத்திவிட தூக்கமும் கண்களைத்தடவ விறாந்தையின் வெள்ளை மணலில் காலைப்புதைத்தபடி கண்ணுறங்கினார்கள்.

காலையில் சவள் எடுத்துக் கொண்டு கடற்கரை நோக்கி புறப்பட்ட எலியாஸ் "ஐயோ எல்லாரும் ஓடுங்கோ கடல்வருகுது கடல்வருகுது என்று ஊரெல்லாம் ஒலி எழுப்பியபடி தன் வீட்டை நோக்கி ஓடிவரவும் இராட்சத அலைவந்து கூட்டை குலைத்துவிட்டது. அப்பா, அம்மா, அக்கா, தம்பி, தங்கை என ஊரெல்லாம் தேடித் தேடி கதறும் உறவுகள் ஒருபுறமும். மறுபுறம் சேறும் சகதிகளுக்குள்ளும் புதையுண்டுபோன உயிரற்ற உடல்களுமாய் ஊரெல்லாம் வேரறுந்த மரமாய் காட்சி கொண்டது.

இப்படியே இவனின் இதயம் இயற்கை அனர்த்தத்தின் கோர நினைவுகளை பிரசவித்துக்கொண்டிருந்தவேளை இவனை அறியாமலே விழிநீர் சொரிந்து. அந்தவேளையில் அருகில் இருந்த ஒருவர் என்ன தம்பி, ஏன் அழுகிறியள் என அன்பாக வினாவிய போது சுனாமியால் தான் பாதிக்கப்பட்டதையும் கண்ணுக்குமுன்னால் அலையின் அகோர கரங்களில் அகப்பட்டு அப்பாவும் அம்மாவும் தங்கையும் தாண்டு மூச்சடக்கி உயிர்பிரிவதை கண்டும் காப்பாற்ற முடியாமல் பனையின் கங்கு மட்டைக்குள் தொங்கிப்போய் தான் மட்டும் தப்பிக்கொண்டதையும் விக்கி விக்கி கூறிய அவன், சற்று நேரம் அமைதியாகியதும் கன்னத்தில் வழிந்தோடியகண்ணீரை துடைத்துவிட்டு கம்பீரத்தோடு கூறினான் எங்கட போராளிப் பிள்ளையளும் புனர்வாழ்வுக்கழகமும் இல்லையெண்டா தமிழரில் பாதியழிந்தும் மீதி நோய்வாய்ப்பட்டும் போயிருப்பினம். இனியும் நாங்கள் யாரையும் நம்பமுடியாது. நாங்கள் நாங்களாக வாழவேண்டுமானால் சுதந்திர மனிதர்களாக வேண்டுமானால் புலத்தில் பரந்த மனசுக்காரராக மாறி விரைந்திட வேண்டும்" எனக் கூறினான். 'கட, கட' என சுரங்கத்துக்குள் தொடருந்து ஓடிக் கொண்டிருந்தது.

■ மாமுனை மனோ- நோர்வே




https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும்- 3

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம். கடந்த நவம்பர் நடுப்பகுதி. தமிழர்தாயகமெங்கனும் வானம் பொத்துக்கொண்டது மாதிரி மழை கொட்டியது. நான்கு நாட்கள் தொடர்மழை. எங்கும் ஒரே வெள்ளம். குடியிருப்புகளுக்கள் வெள்ளம். மக்களுக்கு மீண்டும் இடப்பெயர்வு வாழ்வு. ஆழிப்பேரலையால் அழிந்து இடம்பெயர்ந்து மக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களிலும் வெள்ளம். இங்கும் மக்கள் இடம்பெயர்ந்தனர். காடு மேடெல்லாம் வெள்ளம். வன்னியில் குளங்கள் எல்லாம் நிரம்பிவழிந்தன. பாரிய இரணமடுக்குளம் கூட காலையில் அடியில் இருந்த தண்ணீர் மாலையில் நிரம்பி வான்பாய்ந்துகொண்டிருந்தது. இரணமடு உடைக்குமோ என்ற பயம் கூட நீர்ப்பாசனபொறியியல் பிரிவினருக்கு வந்துவிட்டது. கிளிநொச்சி நகருக்குள்ளும் வெள்ளம். அக்கராயன்குளம் நிரம்பி அதன் வெள்ள அணை பிரிந்து குடியிருப்புகளை தண்ணி தின்றுவிட்டது. வீதிகளை சிதைத்துவிட்டது. இப்படி எங்கும் வெள்ள அவலம். இந்த நாட்களில் திட்டமிட்ட மாவீரர்பெற்றோர்கௌரவிப்புகள் ரத்துச்செய்யப்பட்டு பிறிதொரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டன. தொடந்து மழையால் அவலம் தலைமீறியது. மழைபெய்துகொண்டிருக்கின்றது. மழை தொடங்கி 3ம் நாள். மழை பற்றிய அழிவுகளை பார்ப்பதற்காகச் சென்றோம். இரு சக்கர வாகனங்களில் வெள்ளம் காரணமாக பயணிக்க முடியாத நிலையில் நான்கு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கிறோம். எங்கும் வெள்ளம் பாய்கின்றது. அதற்குள்ளும் ஒருவரின் முயற்சி அதிரவைத்தது. நான்காம் நாளாக பெருமழை தொடர அதற்குள்ளும் சைக்கிள் கொண்டு கோடாலியுடன் காட்டுக்குள் சென்று விறகு வெட்டி அதனை சைக்கிளில் கட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார். வழியில் *விறகை சீர்செய்துகொண்டிருந்தபோது மூன்றாவது கண்ணுள்* அகப்படுத்திய காட்சி. அந்த அவலத்திலும் அபாயத்திலும் விறகுவெட்டியாவது குடும்பத்தை ஓட்டுவதற்கு எடுக்கும் முயற்சி.....






https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/







தி.தவபாலன்

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: தி.தவபாலன்

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/







**மு.பொ**

# சோ.ப.வின் தென்னிலங்கைக் கவிதை தொடர்பாக -

# சமகாலச் சிங்களக் கவிதை பற்றி ஒரு கலந்துரையாடல்

சோ.ப அவர்களின் மொழிபெயர்ப்பில் வெளியான தென்னிலங்கைக் கவிதை நூலைப் படித்தபோது அது பற்றிச் சில கூற லாம் என நான் நினைத்தேன். ஆனால் இதற்கு முன் சிங்கள நவீன கவிதைப் போக்கு பற்றி தமிழ் வாசகர்களுக்கு அறியத்தருவது சிறிது பொருத்தமானதும் இம்மொழிபெயர்ப்புக் கவிதைகளை விளங்கிக் கொள்வதற்கு உதவி யாகவும் இருக்கும் என நான் நினைத்தபோது எனது நண்பன் ஒருவர் மூலம் சிங்களக் கவிஞரான ரணவீர ஆரியவான்ச (சோ.ப.வின் இம் மொழிபெயர்ப்புத் தொகுப்பில் அவரது ஒன்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன) அறி முகமானார். அவரோடும் அவரை எனக்கு அறி முகப்படுத்திய என் சிங்கள நண்பர் ஆனந்த வோடும் 'பிரவாத' என்னும் சிங்களச் சஞ்சி கையின் ஆசிரியரான ரஞ்ஜித் பெரேராவோ டும் நான் சிங்களக் கவிதைகள் பற்றி நடத் திய உரையாடல் மூலம் அறிந்தவற்றை இங்கே நம் தமிழ் வாசகர்களுக்குத் தர முயன்றுள் ளேன்.

மு.பொ: சிங்கள நவீன கவிதைப் போக்கின் ஆரம்பகர்த்தாக்களாக இருந்த கவிஞர்கள் யாரெ னக் கூறுவீர்களா?

ஆனந்த: இவ்விஷயத்தைப் பொறுத்த வரை எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லா மல் கவிஞர் முனிதாஸ குமாரதுங்கவே முதன்மையான இடத்தைப் பெறுகிறார். இவர் பல்வகை ஆற்றல் கொண்டவர். இவர் சிங் களத்தை நவீனப்படுத்தியவர். இவர் மூலம் பல சொற்கள் சிங்கள மொழியில் பாவ னைக்கு வந்தன எனலாம். உதாரணமாக பாஸல (பாடசாலை), ஹக்கியாவ (ஆற்றல்) றக்கியாவ (தொழில்) என்பன போன்ற சொற் களைக் காட்டலாம்.

இவர் ஒரு மரபு வழிக் கவிஞர். இவரிடம் கவிதை ஆற்றொழுக்காகப் பெருக்கெடுத்தது எனலாம். இவரது காலம் 1930களில் ஆரம்பிக் கிறது.

(இவரோடு தமிழில் ஒப்பிடுவதானால் மரபுக்கவிஞர் சோமசுந்தரப் புலவரையும் அவர்பின் வந்த மஹாகவியையும் ஒப்பிடலாம் - (மு.பொ)

மு.பொ: இவருக்கு அடுத்ததாக யாரைக் குறிப் பிடுவீர்கள்?

ரஞ்சித் பெரேரா: இவருக்கு பின்வந்த முக்கியமான கவிஞராக விமலரத்ன குமரகம வைக் குறிப்பிடலாம். இவர் ஆரம்பத்தில் தன் னைக் கவிஞராகக் காட்டிக் கொள்ளவில்லை. நகரச் சூழலில் பிறந்து வளர்ந்த இவர் D.R.O அதிகாரியாக கிராமியச் சூழல் நிலவிய இடங் களுக்கு மாற்றலாகிச் சென்று, அச்சூழலின் அழகாலும் எளிமையாலும் ஈர்க்கப்பட்ட போது, அவரது கவிதை உள்ளம் விழித்துக் கொள்கிறது.

அவ்விழிப்பு கவிதையாக மடைதிறக்கிறது



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

-எளிமையான மொழிக்கையாள்கையும் உச்ச மான கவிதைகள் கிராமச் சூழலில் தோய்ந்து வருகின்றன. இத்தகைய எளிமையான சொற் கையாள்கைக்கும் கவித்துவ ஆற்றலுக்கும் உதாரணங்காட்ட ஆங்கிலக் கவிஞர் Robert Froste ஐ இங்கு குறிப்பிடலாம்.

ரணவீர ஆரியவான்ச: இன்னும் குண தாஸ அமரசேகர, சிறிகுணசிங்க ஆகியோரை யும் இவர் காலத்தவர்களாகக் கொள்ளலாம்.

ஆனந்த: ஏன், எதிர்வீரசரச்சந்திர கூட சிறந்த இவர்கள் காலத்துக் கவிஞரே. இவர் கவிதை என்று பெரிதாக எதையும் எழுதா விட்டாலும் இவரது நாடகங்களான 'மனமே', 'சிங்கபாகு' ஆகியவற்றில் இடம் பெறும் பாடல்கள் இவரது கவித்துவ ஆற்றலுக்குச் சான்று பகிர்கின்றன. அடுத்து குணதாஸ அமரசேகரவும் முக்கியமான கவிஞர். இவர் சொல்லாற்றல் மிக்க கவிஞர். இவர் சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம் என்று பல்துறை ஆற்றல் மிக்கவர்.

மு.பொ:- இவர் ஒரு மோசமான இனவாதி என அறிந்துள்ளேன்.

ரஞ்சித் பெரேரா:- உண்மை. ஆனால் அது அவரது கவித்துவ ஆற்றலையோ ஏனைய எழுத்தாற்றலையோ பாதிப்படையச் செய்ய வில்லை.

ஆனந்த:- அதை நானும் ஏற்றுக் கொள் கிறேன்.

மு.பொ :- சிறிகுணசிங்காவைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ஆனந்த:- இவர் எழுபதுகளில் சிங்கள இலக்கியத்தில் ஏற்பட்ட நவீன மாற்றங்களின் காலகட்டத்துக்குரியவர். இவர் மரபுக் கவி தைக்கு எதிரான புதுக்கவிதைக்கு ('நிஸந் தஸ்') வித்திட்டவர்களில் ஒருவர் இவரது 'மஸ்லே றத்தியாட்ட' (சதை, இரத்தம் இல்லாத வர்க்கு) என்ற தலைப்பில் 70களில் வெளியான கவிதைத் தொகுப்பு பிரபலமானது. இதை ஒரு மரபு உடைப்புக் கவிதைத் தொகுப்பென்றே கூறலாம்.

(இவரதும் இவரைச் சார்ந்தோரதும் போக் கிற்கு ஏற்ப 60களில் தமிழ்நாட்டில் தோன்றிய 'எழுத்து' சஞ்சிகையின் புதுக்கவிதைப் பரி சோதனைகளையும் ஈழத்தில் இக்காலத்தில் தா.இராமலிங்கம், மு.பொ ஆகியோர் எழுதிய புதுக்கவிதைகளையும் எடுத்துக் காட்டலாம். 1968ல் வெளிவந்த மு.பொவின் 'அது' கவி தைத் தொகுப்பின் ஒரு பகுதி புதுக் கவிதை களைக் கொண்டது - (மு.பொ)

மு.பொ:- இவ்விடத்தில் இன்னொரு கேள்வி மாகாமசேகர பற்றி பேராசிரியர் சிவத்தம்பி (சோ.ப. நூலின் அணிந்துரையில்) கூறுகையில் அவருடைய கவிதைகள் பெரும்பாலும் நிஸந்தஸ் (சந்தமற்ற) என்ற புதுக்கவிதையைச் சார்ந்தவை என்று கூறுகிறார். சோ.ப.வின் மொழிபெயர்ப்பிலும் இவரது கவிதைகள் பல உள்ளன. இவரது கவிதைகள் பற்றிக் கூறுங்கள்.

ரணவீர:- இவர் ஆரம்பத்தில் கவிதை எழுதுபவராக ஆரம்பித்து இடையில் (அமர தேவாவின்) இசைப் பாடல்களால் பாதிக்கப் பட்டு கவிதை எழுதுவதற்குப் பதில் பாடல்கள் எழுதி புகழ்பெற்றார். ஆனால் கவிதை எழுது வதும் பாடல்கள் எழுதுவதும் ஒன்றல்ல. இவர் பாடல் எழுதுவதில் காட்டிய ஆர்வம் இவரது கவிதை ஆற்றலை பழுதாக்கியது என்றே சொல்ல வேண்டும்.

ஆயினும் இவர் புதுக்கவிதை எழுதுவதில் பல பரிசோதனைகளைச் செய்தார். இவர் எஸ்ரா பௌண்டினால் அதிகம் பாதிக்கப்பட்டு நெடுங்கவிதைகள் எழுதினார். 'ஞானம் பெற் றவன்' (பிரபுத்தன்) 'நான் சாகமாட்டேன்' (நொமியாமே) ஆகிய கவிதைகள் இதற்கு உதாரணம். சோ.ப.வின் தொகுப்பில் உள்ள 'பிரபுத்தன்' மொழிபெயர்ப்பு அந்நெடுங் கவி தையின் ஒரு பகுதியே. ஆனால் அக்கவிதை பெரியளவு கவிதைத் தன்மையைப் பேண வில்லை என்பதே என் அபிப்பிராயம். இவர் 47 வயதில் இறந்துபோனது துர்ப்பாக்கியமே. இவர் தன் ஆற்றலை பாடல் எழுதுவதால் பழுதாக்கிக் கொண்டார்.

ரஞ்சித் பெரேரா:- என்னைப் பொறுத்த வரை இவர் சிறந்த கவிஞரே. இவரது குறை பாடு என்னவெனில் இவர் மேற்கொண்ட பெருமெடுப்புக் கவிதைப் பரிசோதனைகளுக் கேற்ப இவரிடம் ஆழமான தரிசனம் (vision) இருக்கவில்லை. பாப்லோ நெருடாவுடன் இவரை ஒப்பிட்டுப்பார்த்தால் இவரது பலவீ னம் தெரியவரும். பாப்லோ நெருடா எத் தனையோ வகையான விஷயங்களை எத்த னையோ வகையான கவிதைத்தளங்களில் எழுதி உச்சங்களைத் தொட்டார். அதற்கு அவருக்குக் கை கொடுத்தது அவரது தரிசனம் மிக்க பார்வை. இது மகாமசேகரவிடம் இருக்க வில்லை.

மு.பொ:- சிங்கள நவீன இலக்கியத்தின் மறு மலர்ச்சிக்காலம் என 70 களையே குறிப்பிடுகிறீர் கள். சிறி குணசிங்க போன்றவர்களின் புதுக்கவி தைப் (நிஸந்தஸ்) பரிசோதனைகள் இக்காலத்த வையே. ஈழத்தமிழ் இலக்கியத்தில் 50களில் ஆரம் பித்து 60களில் ஸ்தாபனமாகி 70கள் வரை வியா பித்து நின்ற 'முற்போக்கு இலக்கியப் போக்கை' ஒத்த ஒன்று சிங்கள இலக்கியத்தில் இருந்ததில் லையா?

ரணவீர:- ஏன் இல்லை? சிங்கள இலக்கி யத்தில் இந்தப் போக்கின் ஆரம்பம் 70 களில் தான் இனங்காட்டிற்று எனலாம். பராக்கிரம கொடிதுவக்கு இப்போக்கின் முக்கியமான ஒருவராக நிற்கிறார். இவர் ஒப்பீட்டளவில் அதிகமாக கவிதைகள் எழுதியுள்ளார். இவர் கவிதைகளில் கவித்துவத்தன்மை பேணப் படாது அதிகளவு பிரச்சார நெடி ஓங்கியிருப் பதைக் காணலாம். இவர் மலையகத் தமி ழர்கள் படும் துன்பம் பற்றி எழுதிய நெடுங் கவிதைகள் உதாரணத்துக்குரியன. ஆயி னும் இத்தகைய நோக்கில் எழுதுபவர்களில் இவர் ஆற்றல் உள்ளவர் என்பதில் ஐய மில்லை இவர் பிரச்சார நெடி ஓங்காது எழுதி யுள்ள நல்ல கவிதைகளும் உள்ளன.

மு.பொ: இவரை ஒத்த வேறு கவிஞர்கள் ?

ரணவீர: கலபதி, நந்தன, வீரசிங்க போன்றவர்களைக் கூறலாம் இவர்கள் தம் முள் கெம்பி எழுந்த உணர்ச்சிகளுக்கு கவித்துவ ஆற்றலைப் பாய்ச்சாது வெற்று உணர்ச்சி பிரவாகத்தால் அள்ளுண்டு போயினர் ஆயினும் குறிப்பிடத்தக்க நல்ல கவிதைகள் இவர்களால் எழுதப்பட்டுள்ளன.

மு.பொ: சிங்களப் பெண்கவிஞர்கள் பற்றி?

ரணவீர: இன்றும் பலர் எழுதுகின்றனர் இவர்களில் முக்கியமானவராக மனிக்றுவன் பர திகழ்கிறார். இவரது மூத்த பரம்பரைக் குரிய கவிஞரான கஜமன் நோனாவைப் பின்பற்றி இவர் பெண்ணியக் கவிதைகள் எழுதிவந்தார். அண்மையில் இவர் இறந்து போனது கவலைக்குரிய விஷயமாகும்.

இவர் ஒரு மரபுக்கவிஞர் கூடவே. நாட் டார் பாடல்களாலும் பாதிக்கப்பட்டுக் கவி தைகள் எழுதினார். இன்றைய இளைய பரம் பரைக்குரிய, பலரின் கவனத்தைக் கவர்ந்த வராக இருப்பவர் யமுனா மாலினி டி சில்வா எனலாம்.

மு.பொ: இன்றைய முக்கியமான இளங்கவிஞர் கள் யார்?

ரணவீர: நந்தன வீரசிங்க, யமுனா மாலினி டி சில்வா, புத்ததாஸ கலப்பதி, எரிக் இளையப்பாராச்சி, கே.எம்.ஐ சுவர்ண சிங்க, ரத்ன சிறி விஜேசிங்க, ஹேரத்ன லீனாராச்சி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மு.பொ:- மூத்த கவிஞர்களில் ஒருவரான குணதாஸ அமரசேகரா ஒரு இனவாதி என்றால் இளையபரம்பரைக் கவிஞர்களில் ஒருவரான மஞ்சுள வெடிவர்த்தனா அதற்கெதிரான இனவாதிகளை கண்டனத்துக்குள்ளாக்குபவராக இருக்கிறார் என்பது எனது அபிப்பிராயம். அவர் தமிழ்ப் பெண் கவிஞர் கலா எழுதிய 'கோணேஸ்வரிகள்' என்ற கவிதையைப் படித்து விட்டு, அதனால் பாதிக்கப்பட்டு அதையும் விஞ்சிநிற்கும் கவிதையை 'நான் லிங்கமாலா ஆனேன்' என்னும் தலைப்பில் எழுதினார் இல்லையா? இவர் எப்படி?

ரஞ்சித் பெரேரா:- உண்மை. இவரும்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



நல்ல கவிஞர்தான். இன்றுள்ள கவிஞர்களில் இவரும் ஒரு முக்கியமான கவிஞர்.

(மஞ்சுள வெடிவர்த்தனாவின் 'நான் லிங்க மாலாவானேன்'கவிதையை விளங்கிக்கொள் வதற்கும் அதன் கவித்துவ உச்சத்தை காண் பதற்கும். அது சுட்டிநிற்கும் (Allude) 'அங்குலி மாலா' என்னும் ஜாதகக் கதையை அறிந்திருக்க வேண்டும் - (மு.பொ)

மு.பொ: (ரணவீரவிடம்) சோ.ப.வின் தொகுப்பில் உள்ள உங்கள் கவிதை பற்றிக் கதைப்போமா?

ரணவீர- எந்தக் கவிதையைப் பற்றி அறிய விரும்புகிறீர்கள்?

மு.பொ: 'ராகுலனுடைய பிறப்பு' என்ற கவிதை பற்றிச் சொல்லுங்கள். அதன் மூலம் எதைக் கூற வருகிறீர்கள்.

ரணவீர: உலகில் பிறக்கும் எவரும் இரு வகையான ஈர்ப்புச் சக்திகளால் பீடிக்கப்படு கின்றனர்.

ஒன்று குடும்பம். மற்றது உலகம். அனேகமா னோர் குடும்ப விவகாரங்களிலேயே தமது அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். அவ்வப் போது தமது தேவைக்கேற்ப உலக விஷயங்களிலும் ஈடுபடுகின்றனர். ஆனால் ஒரு சிலரே தம் முழு நேரத்தையும் உலகத்திற்காக அர்ப்பணிக்கின் றனர். அத்தகையோரில் ஒருவரே புத்தர். அவர் உலக மக்களுக்கான ஞான எழுச்சிக்காகவே தன்னை அர்ப்பணித்தார். 'ராகுல என்பது பந்தம் ராகுலனுடைய பிறப்பு' ஒரு பந்தமாகவோ அவர் முன் எழுகிறது. அதையும் கடந்து அவர் போகிறார் ஏன்?

மு.பொ: ராகுலன் போன்ற சகலரின் நன்மைக் காகவே, இல்லையா?

ரணவீர: மெத்தச்சரி. இதைப்போன்ற இன் னொரு கவிதை எழுதியுள்ளேன் புத்தரையும் சேகுவேராவையும் ஒப்பிட்டு. இவ்விருவரும் பூரணமாகவே வீட்டைத்துறந்து உலகுக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள். இல்லையா?

மு.பொ: உண்மை.



# கோணேஸ்வரிகள்....!

நேற்றைய அவளுடைய சாவு எனக்கு
வேதனையைத் தரவில்லை
மரத்துபோய்விட்ட உணர்வுகளுக்குள்
அதிர்ந்துபோதல் எப்படி நிகழும்!?
அன்பான என் தமிழச்சிகளே
இத் தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே வாருங்கள்

உடைகளை கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக்
கொள்ளுங்கள்
என் அம்மாவே
உன்னையும் தான்
சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்
வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத்
தீர்த்துக் கொள்ளுங்கள்
என் பின்னால்
எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவ்வளவோடு நின்று விடாதீர்!
எங்கள் யோனிகள் ஊடே
நாளைய சந்ததி தளிர் விடக்கூடும்
ஆகவே
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளர்விட முடியாதபடி
சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

-கலா

என நிறைவுற்றுள்ள இக்கவிதைக்கு 'ராவய' என்ற பத்திரிகையில் 'மஞ்சுல வெடிவர்தன' எனும் சிங்களக் கவிஞர் பதிற்கவிதையொன்று எழுதியுள்ளார். தமிழில் அதை மொழிபெயர்த்துள்ளார் செல்வர். சிங்கள தேசமெங்கினும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இக்கவிதை கோணேஸ்வரி கவிதையையும் விஞ்சி விடக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

# 'நான் லிங்கமாலா ஆனேன்'

வெசாக்கின் முழுநிலவு
தலையில்
கைவத்து அழுகிறது
அதன் மூக்குச்சளி
சாளரம் வழியால்
தெறிக்கின்றது.
அயல் வீட்டில்
வெசாக்கிற்கு மொட்டவிழ்ந்த
ஏழு தாமரைப் பூக்கள்
இன்னும் வாடவில்லை
ஐந்நூற்றி ஐம்பது
புராணக் கதைகளை
சுருக்கி, நவீனப்படுத்தி
தூரத்தில் அமைத்த
வெசாக் பந்தலில்
இடைக்கிடை
விருது பாடுவது கேட்கிறது
என்முன்
வெற்றுக் காகிதத்தாள்
கவிதைக்காக
விழித்திருக்கின்றது
சடுதியாக எங்கிருந்தோ
மிதந்து வந்த
இறைச்சித் துண்டமொன்று
காகிதத்தில் வீழ்ந்து
யோனியின் வடிவமைந்தது
அது
கோணேஸ்வரியினுடையது
அம்பாறையில் இருந்து
கொழும்புவர
இத்தனை நாளா?
எவ்வளவு தூரத்தில் நாம்
கண்களில் கண்ணீர்
குளிர்கிறது
கண்ணீருக்கு மத்தியில் நான்
அங்குலி மாலாவாக அல்ல
லிங்கமாலாஆகினேன்
எனக்கு விரல்கள் தேவையில்லை
ஆண்குறிகளே தேவை
வெகு பக்தியாக வலது கரத்தில
இறைச்சியையும்
மறுகரத்தில் இறுக்கமாக
ஆயுதத்தினதையும்
எடுத்துப் புறப்படலானேன்
வழியில் சந்திக்கும்
வீடுகளைத் தட்டி
சகல சிங்கள ஆண்குறிகளையும்
வெட்டி நூலாகக் கோர்த்து
இறுதியில் எனது
ஆ..............
வேதனையைத் தாங்கிக் கொண்டு
ஸ்ரீபாத மலையின் கழுத்திற்கு
ஆண்குறிகளை மாலையாய்
சூட்டினேன்
என்னை தடுத்து நிறுத்த போதி
மாதவன் இல்லாததால்
நான் இதனைச் செய்தேன்
சகோதர பாசமற்ற
உணர்வு அற்ற
இனம் ஒன்று எதற்கு?
என்முன் வெற்றுக்
காகிதம் அதன் மீது
இரத்தக் கறை
இது ஒரு தமிழ்க் கவிதை
அதனால் சிங்களவருக்கு
இது புரியவில்லை.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# தமிழீழத் தேசியச்சின்னங்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள தமிழீழத் தேசியஅரசின் முக்கிய கட்டமாக தேசியச்சின்னங்களின் பிரகடனம் அமைந்துள்ளது.
தேசியப்பூவாக கார்த்திகைப்பூ
தேசிய மரமாக வாகை மரம்
தேசிய விலங்காக சிறுத்தை
தேசியப் பறவையாக செண்பகம் என்பன பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## கார்த்திகைப்பூ



தமிழீழத்தின் தேசியப்பூ. இது கார்த்திகை மாதத்தில் பூப்பதன் காரணத்தால் இந்த பெயர் பயன்பாட்டில் உள்ளது. சங்க இலக்கியங்களில் இது காந்தள் எனக்குறிப்பிடப்படுகின்றது. ஆங்கிலத்தில் இது Flame lilly என அழைக்கப்படுகின்றது. இதன் பூர்வீகம் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களின் உலர் பிரதேசம். தாவரவியலில் நமது கார்த்திகைப்பூ குளோரியோஸா சுப்பேபா (gloriosa superba) எனப்படுகின்றது. கார்த்தகைப்பூவில் gloriosa superba, carsonii, simplex, verschuurii ஆகிய 4 வகைகள் உள்ளன. எம் தேசியப்பூ gloriosa superba என்ற இனமாகும். கார்த்திகைப்பூ கொடியில் பூக்கும் மலர். ஆங்கிலத்தில் இதன்பெயர் gloriosa என வருவதற்கு gloriosu, என்ற சொல் அடிப்படையாகும். இதன்பொருள் மிக அழகானது என்பதாகும். superba என்பது மிகவும் அழகான என்ற மேன்மையைக் குறிக்கவாக வைக்கப்பட்டது. கிழங்கில் இருந்து குறித்த காலத்தில் மட்டும் முளைத்துப் பூத்து பின் மடிந்து நிலத்தின் கீழ் கிழங்கில் மட்டும் உயிர்வாழும் செடியும் பூவும்தான் கார்த்திகைப்பூ அதன் உயிர் வாழ்வு விழவிழ எழுதல் என்ற பொருளையும் கொள்கிறதல்லவா. இதன் வாழ்வுக் காலம் நவம்பர் முதல் மார்ச் வரையாகும். செப்டம்பரில் நிலத்தின் கீழ் உள்ள கிழங்கு முளைக்கத் தொடங்கும். நவம்பர் பூக்கும். நேரடியாக சூரியனை எதிர்கொண்டதாக இல்லாமல் பற்றைகளின் நிழலில் படரும்கொடி இது. இதற்கு சதுப்பு நிலம் தேவை. தமிழர் தாயகம் உள்ளிட்ட இலங்கைத்தீவு, இந்தியா, ஆபிரிக்க நாடுகளான Cape coast, Natal, Swaziland, Northern Province, Botswana, Namibia, and Zimbabwe ஆகியவற்றில்இந்த வகை கார்த்திகைப்பூ செடிவாழ்கின்றது. உலகளவில் கார்த்திகைப்பூச் செடி மருத்துவ இரசாயனத் தேவைகளுக்காக பண்ணையாக வளர்க்கப்படுகின்றது. பழங்குடிகள் பாரம்பரிய மருத்துவத்தில் தோல் வியாதி, புளுவியாதி போன்றவற்றுக்கு கார்த்திகைச்செடியை பயன்படுத்துகின்றனர். இரசாயனப்பகுப்பில் கார்த்திகைச்செடியின் சகல பகுதிகளிலும் நச்சுத்தன்மை இருக்கின்றது. கார்த்திகைச்செடி உடலுக்குள் சென்றால் மயக்கம் ஏற்படும். உயிராபத்தும் ஏற்படும். ஆனால் மருத்துவத்தில் இது பயன்படுகின்றது. கார்த்திகைச்செடி 1.8 மீற்றர் தொடக்கம் 2.4 மீற்றர் வரை வளரும். இதன் வாழ்வுக்கு 15 பாகை செல்சியஸ் முதல் 30 பாகை செல்சியஸ் வரை சூழல் வெப்பம் இருக்கவேண்டும். பூக்கள் செழுமையாக இருக்க வளிமண்டல ஈரப்பதன் அதிகமாக இருக்க வேண்டும். சராசரி அமிலத்தன்மையுடைய ஈரமான மண் இதன் வாழ்வுக்குத்தேவை. செடி இறந்ததும். இதன் கிழங்கு மண்ணின் கீழ் வாழ்வதற்கு 20-25 பாகை செல்சியஸ் வெப்பம் தேவை. இதிலிருக்கும் நச்சுப்பொருள் alkaloid colchicine ஆகும். gloriosine என்ற நச்சுப்பொருளும் இதில் உள்ளது.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/





## வாகை

தமிழீழத்தின் தேசிய மரம். தமிழர் தாயகத்தின் மரபுரிமைச்சொத்தாக விளங்கி வரும் மரங்களில் தொன்மத்தன்மை வாய்ந்ததாக வாகை உள்ளது. சங்ககாலத்தில் போரில் வெற்றிபெறும் வீரர்களுக்கு வாகை மலர் சூட்டப்படுதல் நடந்திருக்கின்றது. வெற்றி பெறு தலை வாகை சூடுதல் என்று அழைக்கும் மரபு இந்த வாகை மலர் சூடுதலின் மூலமே வந்திருக்கிறது. சங்க கால மரபின் மூலம் வாகை எந்தளவுக்கு தமிழருடன் இணைந்து வந்திருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளலாம். வாகையில் பல வகைகள் உள்ளன. தமிழர் தாயகத்தில் பூர்வீகத்தன்மையாக உள்ளது இயவாகை என்பதாகும். இதன் வேறு இனங்கள் பல நாடுகளிலும் உள்ளன.

வாகை ஆங்கிலத்தில் சிரிஸ்ஸா என்று அழைக்கப்படுகின்றது. லத்தினில் வாகை 'மமோசா பிளெக்சூஸா' ( Mimosa Flexuosa) என்று அழைக்கப்படுகின்றது. அல்பிஸியா என்றும் இது அழைக்கப்படுகின்றது. இதன் தாவரவியல் பெயர் albizzia odoratissima. வாகையின் பகுதிகள் சித்த மருத்துவத்திலும் பயன்படுகின்றது. தாவரவியல் ரீதியாக வாகை மரத்தின் பதிவைத் தருகிறோம்.

Leguminosae (Mimosoideae) தாவரவியல்க் குடும்பத்தைச் சேர்ந்தது வாகை. இது ஆகக் கூடியது 25 மீற்றர்கள் உயரத்துக்கு வளரும். கிளைகள் அகலப்பரந்து ஒரு குடைபோல ஆகும். தென்ஆசியப்பிராந்தியம் தான்வாகையின் பூர்வீகம். இது உலர்வலயத்துக்குரிய தாவரம் என்பதால் இந்தியாவில் தமிழகமும் இலங்கையில் தமிழீழமும் அதன் மரபுரிமை வாழிடமாகிவிட்டது. ஆண்டுச்சராசரியாக இதற்கு 800முதல் 1000 மில்லி மீற்றர் வரையான மழை தேவையானது. வாகை வாழ்வதற்குரிய மண்ணுக்கு 6 க்குக் கூடிய பி.எச் (pH) பெறுமான அமிலத்தன்மை தேவை. இது விதை மூலமும், தண்டுகள் மூலமும் பெருக்கம் செய்யப்படும். விதைகளை விரைவாக முளைக்கச் செய்ய 24 மணிநேரம் அவற்றை சுடுநீரில் போட்டுவைக்கவேண்டும். இதன் பிரதான எதிரி மயிர்கொட்டிப்புழுக்கள். அவை இதன் இலைகளை அரித்து உண்டு பாதிப்பை ஏற்படுத்தும். வாகை விறகுக்காக பண்ணையாக வளர்க்கப்படும் தாவரமாகவும் இருக்கிறது.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# செண்பகம்

தமிழீழத் தேசியப்பறவை செண்பகம். பறவைகளைப் பொறுத்தவரை அதிக பறப்புத்திறன் கொண்ட பறவைகளுக்கு பெரும்பாலும் ஒரு மண்ணுக்குரிய தனித்துவ பூர்வீகத்தன்மை கிடையாது. அவை காலத்துக்கு காலம் தமக்கு ஏற்ற கால நிலைக்காக புலம்பெயர்ந்து கொண்டேயிருக்கும். சில பறவைகள் நீண்டகாலத்துக்கொருதடவை புலம்பெயரும். சில குறுகிய காலத்தில் புலம்பெயரும். பறப்புத்திறன் குறைந்த பறவைகள் இந்த புலப் பெயர்வுக்குட்படுவதில்லை. இதனால் பறப்புத்திறன் குறைந்த பறவைகளே ஒரு மண் ணுக்குரிய மரபுரிமைச் சொத்துக்களாகின்றன. உலகில் அதிகமான நாடுகளின் தேசியப் பறவைகளாக பறப்புத்திறன் குறைந்த பறவைகளே இருக்கின்றன. நமது தாயகத்தில் காடை, கௌதாரி, செண்பகம், புளினி, காட்டுக்கோழி, மயில் என்பன பறப்புத்திறன் குறைந்தவை. இவற்றில் மயில் இந்தியாவின் தேசியப்பறவையாக உள்ளது. காட்டுக்கோழி ஸ்ரீலங்காவின் தேசியப்பறவையாக உள்ளது. காடை, கௌதாரி என்பன உலகின் பலபகுதிகளிலும் உள்ளன. இனக்கூற்று அடிப்படையில் இவற்றில் நமது தாயகத்துக்குரிய தனித்துவ அம்சங்கள் குறைவாகவே உள்ளன.



இந்த வகையில் தமிழர் தாயகத்தில் பறப்புத்திறன் குறைந்த மரபுரிமைச்சொத்தாக உள்ள பறவைகளில் தனித்துவ அம்சங்கள் நிறைந்த செண்பகம் தேசியப் பறவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

செண்பகம் பொதுவாக ஆங்கிலத்தில் கிறேற்றர் கூகல் அல்லது குறோ பீசன்ற் என அழைக்கப்படுகின்றது. நமது தாயகத்திலும், இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலும் இதன் இனங்கள் வாழ்கின்றன. கறுப்பு உடலையும் காவிநிற செட்டைகளையும் கொண்ட செண் பகம் காகத்தை விட சற்றுப்பெரியது. நமது சூழலில்இவை தத்தித் தத்தி திரிவதை நாம் காணலாம். இது உலர்வலயப்பகுதிகளில்தான் அதிகம் உள்ளது. மெதுவான நடையும், தத்தித் தத்திப்பாய்தலும் இதன் தினத்துவ செயற்பாடுகள். பற்றைகள், சிறுமரங்களின் கீழ்ப்பகுதிகள் இதன் வாழிடங்கள். நத்தைகள், பூச்சிகள், அட்டைகள், தவளைகள், பாம்பு கள், ஓணான்கள் செண்பகத்தின் உணவுகள் ஆகும். பிற பறவைகளின் கூடுகளில் இடப்பட்ட முட்டைகளையும் செண்பகம் உண்ணும். செண்பகத்தின் வேட்கைக்காலம் பெப்ரவரியி லிருந்து செப்டம்பர் வரையாகும். இது தொடர்ந்து 3 முதல் 4 வரையான முட்டைகளை இட்டு அடைகாக்கும். இதன் உயிரியல் பெயர் சென்ரோபஸ் சினென்சிஸ் (Centropus sinensis).






https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



தி.தவபாலன்



# சிறுத்தை

சிறுத்தை தமிழீழத்தின் தேசியவிலங்காக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உலகத்திலே மிக வேகமாக ஓடும் சிறுத்தை. இங்கும் மிகவும் வேகமாக ஓடும் விலங்கு தான். சிறுத்தை உயரம் குறைந்த வரண்ட காடுகளில் தான் வாழும் இலங்கையில் சிறுத்தைகள் அதிகம் இருப்பது தமிழர் தாயகத்தின் வன்னி, மன்னார் காடுகளில்தான்.

சிங்கள தேசத்தில் அம்பாந்தோட்டையின் யால, அனுராதபுரத்தின் வில்பத்து வனவிலங்குச் சரணாலயங்களில் தான் சிறுத்தைகள் உள்ளன. கனடியச் சிறுத்தை ஆய்வுக்குழு ஒன்று இலங்கைக்கு வந்து இலங்கையில் உள்ள சிறுத்தைகள் உலகின் சிறுத்தை இனங்களில் தனித்துவமானவை. இதுவே இலங்கையின் தேசிய விலங்காக இருக்க வேண்டும் எனக் கூறிச்சென்றனர். தமிழர் தாயகப் பகுதியிலேயே சிறுத்தை அதிகம் உண்டு. இந்த சிறுத்தை மஞ்சள் உடலில் கறுப்புப் புள்ளிகளைக் கொண்டது. பூனை இன பெரிய விலங்குகளான சிங்கம், புலி போல அல்லாமல் சிறுத்தை தங்க என்று குறித்த இடமும் தேவையில்லை. பாறை, குன்று அல்லது ஒரு திட்டோ, பள்ளமோ, பற்றையோ, மரமோ எங்கும் ஒரு சிறு இடம் சிறுத்தைக்குப் போதும். தமிழர் தாயக காட்டுச் சிறுத்தை சிறியமான், குரங்கு, மயில், காட்டுக் கோழி, முள்ளம் பன்றி, முயல் என்பனற்றை வேட்டையாடிச் சாப்பிடும். இந்தச் சிறுத்தை மூக்குநுனி தொடக்கம் வால் நுனி வரையான நீளம் ஐந்தரை அடி. ஆகக்கூடியதாக 8அடி நீளமான சிறுத்தைகளும் உண்டு. நிறை 100கிலோ வரைக்கும் இருக்கும். சிறுத்தைக்குரிய உயிரியல் பெயர் பாந்ரா பார்டஸ் கொட்டியா (panthera pardus kotiya). புலிக்குரிய சிங்களப் பெயர் தான் கொட்டியா. இலங்கை சிறுத்தைக்குரிய உயிரியல் பெயரிடலில் சிங்கள அறிஞர்களின் ஆதிக்கம் அதிகம் இருந்ததால் கொட்டியா என்பது இறுதியில் வந்துவிட்டது. புலி, சிங்கம் பதுங்கிப் பாய்ந்துதான் பிராணிகளை வேட்டையாடும் ஆனால் சிறுத்தை என்ன செய்யுமென்றால். அது பிராணிகளை வேகமாகத் துரத்திச் சென்று வேட்டையாடும். வேட்டைத்தந்திரம் சிறுத்தைக்குத் தான் கூட இருக்கிறது என்றும் சிறுத்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு சிறுத்தை 25, 30 கிலோ கொண்ட பிராணிகளை வேட்டையாடி அதை இழுத்துத் தூக்கிக் கொண்டு 8அடி உயர பாறையிலும் ஏறும் வல்லமை கொண்டது. சிறுத்தைக்கு ஒடுங்கிய அல்லது மெல்லிய நீண்ட உடல் இருப்பதால் வேகமாகச் சுழன்று திரும்புதல், பாய்தல், ஓடி வேட்டையாடுவதல் என்பது அதன் திறனாகும். தமிழர் தாயக காட்டுக்கதாநாயகன் தான் சிறுத்தை. இதற்குக்குத் துல்லியமான கேட்டல் திறமை, கூர்மையான பார்வைப்புலன் உண்டு. சிறுத்தையின் வண்ணம் காரணமாக இங்குள்ள வரண்ட காடுகள் அதற்கு நல்ல உருமறைப்பு. அதனால் சிறுத்தையைக் காடுகளில் இலேசாகத் தனித்துப் பார்க்கமுடியாது. அதோடு சிறுத்தை அதிகம் கர்ச்சிக்காது. மிக அரிதாக அடித்தொண்டையால் உறுமும் அவ்வளவு தான். இங்கு வன்னியில் 'சருகுபுலி' என்று சிறிய காட்டுப்பூனையைக் காட்டுவார்கள். ஆனால் சருகுபுலி என்று சிறுத்தைதான் குறிப்பிடப்படுகின்றது. தமிழர் தாயகத்திலோ சிங்கள தேசத்திலோ காட்டுப்புலி இல்லை. அது இந்தியாவில் தான் இருக்கிறது. புலி இந்தியாவின் தேசிய விலங்கு சிறுத்தை பெலிடே என்ற விலங்குக் குடும்பத்தைச் சேர்ந்தது. இங்கு இருக்கின்ற தேசியத்தன்மை வாய்ந்த தனித்துவ விலங்கு சிறுத்தை தான். சிறுத்தையை ஆங்கிலத்தில் 'லெப்பேட்' என்று அழைப்பார்கள். சிறுத்தையின் வேறு இனங்கள் உலகத்தின் வேறு நாடுகளில் வாழ்கின்றன. பாந்தர், சீற்றா என்ற இனங்களில் எல்லாம் உலகத்தில் சிறுத்தைகள் இருக்கின்றன. அவற்றைவிட இங்குள்ள காட்டுச் சிறுத்தைகள் தனித்துவமானவை. உலகத்தில் மிக அருகி வரும் விலங்கு சிறுத்தை. தமிழர்தாயகதேசிய விலங்காக இருக்கின்ற பாந்ரா பார்டஸ் கொட்டியா இன சிறுத்தையும் உலகின் முழுதாக அழியும் தறுவாயில் இருக்கின்ற மிக அரிதான விலங்கு. இதனை வேட்டையாடாமல் அழிக்காமல் பாதுகாக்க வேண்டும் வேட்டைக்காரர்கள் பல்லுக்காகவும் தோலுக்காகவும் சிறுத்தையை வேட்டையாடுவார்கள். உணவுச்சங்கிலியில் முதலாவதாக சிறுத்தையே உள்ளது. சிறுத்தையை அழித்தால் இங்குள்ள உணவுச்சங்கிலியில் மோசமான பாதிப்பு வரும். இந்த சிறுத்தை தமிழரின் தொன்மை சங்க இலக்கியங்களிலும் வருகின்றது. அதுவே தமிழீழத்தின் தேசிய விலங்காகப் பிரகடனப் படுத்தபட்டுள்ளது.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

மணலாறு விஜயன்




# பெண்டுகல்சேனை ஆற்றங்கரையில்

மட்டுநகர் மண்ணில் மருத நிலச்செழிப்பை பார்க்கவிரும்புவோர் நேராக பெண்டுகல்சேனைக்குச் செல்லலாம். வயல்வெளிகளும், வயல்வெளிகளை ஊடறுத்துச்செல்லும் அருவிகளும், அருவிக்கரைகளில் செழித்து வளர்ந்து நிற்கும் மருதமரங்களும் இக்கிராமத்துக்கு கொள்ளை அழகூட்டும். ஆடம்பரமில்லாமல் வயல்வெளிகளில் நடுவே அமைந்திருக்கும் ஓலைக்குடிசைகளும், அந்தக்குடிசைக்குள் வாழும் கிராமியப்பண்புகளும், மனிதம் இன்னும் வாழ்கின்றது என்பதற்கு சான்றுபகரும். இக்கிராமத்து மக்களின் விருந்தோம்பலுக்குள் அகப்பட்ட எவரும் மீளுவது கடினமானது.

பெண்டுகல்சேனை ஆறு பெருக்கெடுத்துப்பாயும் காலங்களிலும் பெரும் மரங்களைப் புரட்டி அடித்துச்செல்லும். மாந்திரையாறு(மாதுறுஓயா) பாய்ந்து கலப்பதால் கடும் கோடைவந்தாலும் பெண்டுகல்சேனையாறு வற்றாது. பாய்ந்து வளம்சேர்க்கும். நிலாக்காலங்களில் ஆற்றின் இருகரையிலும் அள்ளி ஒதுக்கிய வெண்மணல் பரப்பில் சற்று நேரம் இருந்தால் போதும். அதுவே மனதுக்கு நிம்மதியாக இருக்கும்.

அமைதியும், அன்பும், பண்பும் பெருக்கெடுத்துநின்ற இக்கிராமத்து மக்கள் மனங்களில் மாறாத காயத்தை ஏற்படுத்திய நாளொன்று உண்டு.

புலிபாய்ந்தகல், கூழாவில், நாப்பத்தாவில், தரவை என இக்கிராமத்தைச் சூழ இருந்த கிராமங்களில் சிங்களப்படை முகாம்களை அமைத்திருந்ததால் பெண்டுகல்சேனை மக்கள் இராணுவ முகாமுக்கு நடுவே அகப்பட்டு சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்தார்கள். 1995ம் ஆண்டு இராணுவ அட்டூழியங்களை தாங்கமுடியாது மக்கள் பலர்

## மௌனப் புதைகுழிக்குள்






https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

அக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழத் தொடங்கினார்கள். கட்டிய வீடுகளையும், காத்துவாழவைத்த வயல் நிலங்களையும் கைவிட்டுச்செல்ல விரும்பாத பல குடும்பங்கள் எறிகணை வீச்சுக்கு மத்தியிலும், அடிக்கடி ஏற்பட்ட சுற்றி வளைப்பிற்குள் அகப்பட்டு அடி உதைகள் வாங்கியபோதும் தங்கள் கிராமத்துக்குள்ளேயே வாழத் தலைப்பட்டனர். பகல் முழுவதும் தமது வீடுகளில் தங்கி சமைத்துண்டுவிட்டு இரவானதும் பெண்டுகல்சேனை ஆற்றைக்கடந்து மறுகரையில் ஆற்றுமணலில் உறங்குவார்கள். விடிந்ததும் மீண்டும் நிம்மதியாக உறங்கவும், உண்ணவும் முடியாத துயர நிலை தொடர்ந்தது.

1995ம் ஆண்டு, ஆனித் திங்கள், 30ம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு உறக்கத்தில் வைத்தே பத்து பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். குடும்பத்தில் கணவன், பிள்ளைகள் எல்லோரையும் பறிகொடுத்து ஐந்து தடவைகள் கத்தியால் குத்தப்பட்டபோதும் இறந்து போகாது உயிர்தப்பிய திருமதி தியாகராஜா - பரஞ்சோதி என்பவரோடு இக்கொலை நடந்த நாள் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டேன்.

இரவு காலவேளையோட சாப்பிட்டு புருஷன் பிள்ளகளோட ஆத்தைக்கடந்துபோய் படுத்திட்டம். அண்டைக்கு நல்ல விடிநிலவு. விடியச்சாமம் நாலுமணிக்கெல்லாம் கண்முழிச்சிட்டன். பிள்ளையளும்,புருஷனும் நல்லாய் தூங்கீட்டிருந்தாங்கள். இருந்தால் போல் ஆக்கள் கதைச்சுக்கேக்குது. இஞ்சேருங்கோ ஆரோ ஆட்கள் கதைக்கிறாப்போல இருக்குது ஆமியோ தெரியாது ஆரெண்டு பாருங்கோ என் இவரை எழுப்பினன். நித்திரை நல்லாய்ப்போனதால அவர் உசும்பல்ல.

நானும் சொல்லிவாய் மூடல்ல, படபடெண்டு வெடிபொழியுது. என்னண்டு பாத்தால் பிள்ளையளும் புருஷனும் எழும்பல்ல. பக்கத்தில வெடிபொழிய ஏன் கண்முழிக்காம இருக்கிறாங்களென நினைச்சன். எழும்பிப்பாக்க முடியல்ல எழும்பினால் என்ன நடக்குமெண்டு தெரியாமலிருந்தது. சத்தங்கூட இல்லாமல்கிடக்கிறார்களென நினைச்சு மெதுவாய் சரிஞ்சு பாத்தன் எல்லாரின்ர உடம்பையும் சன்னங்கள் சல்லட போட்டுக்கிடந்தது. கத்த வாய்திறக்க முன்னரே செத்திட்டாங்கள்.

வெடிச்சத்தங்கள் நிண்ட உடனேயே சிங்களத்தில் கத்திச் சத்தம் போட்டுக்கொண்டு பாஞ்சுவந்தாங்கள். எல்லாரின்ர கையிலேயும் கத்தியிருந்தது. தாறுமாறாய்க் குத்தத்தொடங்கினார்கள். செத்துச் சவமாய்க் கிடந்தவர்களையும் குத்தினார்கள். செத்ததுபோல முகக்குப்பறக்கிடந்த எனக்கு ஐந்து குத்துக்குத்தினார்கள். குத்து விழுந்த கொஞ்சநேரத்தில எழும்பியிருக்க முற்பட்டன் முடியல்ல. என்ரபலம் முழுவதையும் திரட்டி கையை ஊண்டி எழும்ப முற்பட்டபோது சரிந்து நிமிந்தன். நிமிர்ந்து கிடந்து மேல பாத்தன், மரங்களுக்கு மேலயெல்லாம் துவக்கை நீட்டினபடி ஆமிக்காரர் இருந்தாங்கள். என்னையும் சுட்டுக்கொல்லுங்கோ.... என்னையும் சுட்டுக்கொல்லுங்கோ எனக் கத்தினன். ஒருத்தன் வந்து காலால உதைஞ்சான். உலகமெல்லாம் இருண்டுகொண்டு வாறமாதிரிக் கிடந்தது.

மயக்கம் தெளிஞ்சு திரும்பவும் கண்திறந்து பாத்தன் மருதமரங்களில் இருந்த ஆமியெல்லாம் அப்படியே இருந்தாங்கள். மதியம் மூண்டு மணியிருக்கும் விடியச்சாமம் நாலுமணிக்கு வந்தவங்கள் போகாமலே இருந்தாங்கள். ரத்தம் தன்ரபாட்டிலபோய் நாக்கு வரண்டு போயிருந்தது. தொண்டை அடைப்பதுபோல இருந்தது, தண்ணி.... தண்ணி..... என கத்தினன். கத்த முடியல்ல திரும்பவும் என்னையும் கொல்லுங்கோ என்னையும் சுட்டுக் கொல்லுங்கோ என் கத்தினன். சத்தம் வரல்ல. ஒரு ஆமி வந்து காலால என்னை உருட்டி நிமித்தினான்.

கொஞ்சத்தண்ணி கொண்டு வந்து வாய்க்குள் ஊத்தினான். எழும்பியிருக்க முயற்சி செய்தன். முடியல்ல மாலை ஆறுமணியாகிக் கொண்டிருந்தது. எல்லாரும் அந்த இடத்தைவிட்டு செல்லத் தொடங்கினார்கள். ஆமி போன கொஞ்சநேரத்துக்குள்ள எங்கட கிராமத்து மக்கள் வந்திட்டார்கள். பகல் வெயில் முழுவதும் ஆத்துமணலுக்கு மேலேயே கிடந்ததால உடம்பெல்லாம் வெந்து போச்சு.

என்னோட புருஷன் ஒரு பாவமும் செய்யாதவர். காலேல எழும்பி கோயிலுக்கு பூ ஆஞ்சு கொண்டு போவார். விடியக்காலையிலேயே பூக் கூடையோட போவார். ஆமி பலதடவை மறிச்சு "ஏய் கொட்டி நீ கொட்டிதான்" எனக் கேட்பான். "ஓமோம் நான் கொட்டிதான். கடவுளுக்கு பூ கொட்டுற கொட்டிதான்" என சொல்லுவார். ஒரு பாவமும் அறியாத அந்தச் சீவனைக்கூட பாவியள் விட்டுவைக்கல்ல. இடுப்பையும் நெஞ்சையும் சன்னங்கள் பிச்சுப்போட்டுது என ஆறு ஆண்டுகள் நெஞ்சில் எரிந்த நினைவுகளை கொட்டினாள் அந்த மூதாட்டி.

அறுபத்தியேழு வயது தாண்டியும் திடகாத்தரமான உடலுறுதியும் அந்த உறுதிக்கேற்ற தெளிவான கதையும் ஒரு கிராமத்துப் பெண்ணின் வலுவைக் காட்டியது. தனிமரமாய் நின்றாலும் தனது கணவன், பிள்ளைகளது நினைவுகளோடு காலத்தை ஓட்டும் அந்த முதிய தாயின் முகத்தில் கருணையும், கடந்தகால கொடிய நினைவுகளின் வேதனையும் மாறிமாறி வெளிப்பட்டது. நீதி கேட்க யாருமில்லாமலே கொலையுண்டுபோன மக்கள் உணர்வுகள். இனவாத அரச படைகளுக்கெதிராய் கொழுந்து விட்டெரிக்கின்றது. சிங்களப் படையின் கொலை வெறிக்குள் சிக்கியவர்கள்.


க.தியாகராசா
தி.வாணி (24 வயது)
தி. புஸ்பராசா(27வயது)
தி.கீதா(09வயது)
ஆ.பாக்கியம்
ஆ.தயா
ஆ.ஜீவா
ஆ.தரன்
சிவகாமி கோவிந்தராசா
சி.முருகன்





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



# துரோகத்தின் பரிசு

பிரஞ்சுக் காலனித்துவப் பிடியிலிருந்து தம்மை விடுவிக்கத் தனது இறுதிப் போராட்டத்தை அல்ஜீரிய 'தேசிய விடுதலை முன்னணி' முடுக்கிவிட்டிருந்த காலகட்டமது. பல நூறாயிரம் படையினரைக் கொண்ட பிரஞ்சு இராணுவத்தின் எல்லை கடந்த கொடூரங்களையும் மீறி அல்ஜீரியத் தேசிய விடுதலை முன்னணி உக்கிரமான தாக்குதல்களை பிரஞ்சு இராணுவத்தின் படைப் பிரிவுகள் மீது தொடுத்துக் கொண்டிருந்தது.

ஏகாதிபத்தியக் காலனித்துவச் சக்தியிடமிருந்து விடுபட்டு தனது சுதந்திரத்தை நிலைநிறுத்தும் நோக்கில் அல்ஜீரியர்கள் முன்னெடுத்த சுதந்திரப் போராட்டம் மிகவும் கடினமானதாகவும் பாரிய இழப்புகளைக் கொண்டதாகவும் நகர்ந்துகொண்டிருந்தது.

ஒரு தேசத்தின் விடுதலைப்போராளிகளை அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்கு அநேகமான அடக்குமுறையாளர்கள் அத்தேசத்தின் பிளவுகளைப்பயன்படுத்தி அத்தேசத்தின் இனத்தவர்கள் மத்தியிலுள்ள பலவீன உள்ளங்கொண்டவர்களையும், சுயநலத்திற்காக எதையும் செய்யத் தயங்காதவர்களையும் இனங்கண்டு அவர்களைத் தம்முடன் இணைத்து தம்மவர்களுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடுத்துவது வரலாறு கண்ட வழமை.

அல்ஜீரியர்களுக்கெதிராக அல்ஜீரியர்களையே ஆயுதம் தூக்க வைப்பதில் பிரஞ்சு ஏகாதிபத்தியம் சிறிது சிறிதாக வெற்றிகண்டது. இவ்வகையில், அல்ஜீரியர்களில் பலவீனம் கொண்டவர்களை, அப்பாவிகளை, சுயநலத்திற்காகத் தேசமறுப்புச் செய்தவர்களையெல்லாம் ஒருங்கு கூட்டி அவர்களுக்கு பயிற்சி வழங்கி, ஆயுதங்களும் வழங்கி பிரஞ்சு இராணுவம் அவர்களை தனது உதவியாளர்களாக உருவாக்கிக் கொண்டது. தமது பிரஞ்சு எஜமானர்களின் கட்டளைகளை ஏற்று தம்மக்களுக்கெதிராகவே இந்த அல்ஜீரியர்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



க.வாசுதேவன்

கள் அறியாமையாலும் சுயநலத்தாலும் போராட்டத்தில் குதித்தார்கள். பிரஞ்சு இராணுவத்தினரால் வெறியூட்டப்பட்ட இவர்கள் எண்ணுக்கணக்கற்ற தொகையில் அல்ஜீரியர்களையே கொன்றொழித்தார்கள். கிராமங்கள் சிலவற்றை முற்று முழுதாக அழித்த பெருமையும் இவர்களுக்குண்டு.

'இயக்கம்' எனும் பெயரில் (அரபு மொழியில் ஹார்க்கா) இவ்வாறான ஒரு துணைப் படையை உருவாக்கி அல்ஜீரியர்களை இலகுவாக அடக்குவதற்குப் பிரஞ்சு இராணுவம் அவர்களைப் பயன்படுத்தி வந்தது. இவர்கள் மூன்று பிரிவுகளாக சேவையிலீடுபட்டிருந்தார்கள். தமது பிரஞ்சு எஜமானர்களுக்கு மிகவும் விசுவாசமாக உழைத்தார்கள் இந்த 'இயக்கக்காரர்கள்'. அரபு மொழியில் இன்றும் இவர்கள் 'ஹார்க்கிகள்' என்றே அழைக்கப்படுகிறார்கள். தமது நாட்டவருக்கெதிராகப் போராடிய இவர்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்கள் போர்க்காலத்தின் போதே இறந்தார்கள் அல்லது காணாமற் போனார்கள்.

1962 ம் ஆண்டு மார்ச் மாதம் பிரஞ்சுக் குடியரசின் அன்றைய ஜனாதிபதியான து - கோள் அல்ஜீரியத் 'தேசிய விடுதலை முன்னணியை' அனைத்து அல்ஜீரிய மக்களினதும் பிரதிநிதிகளாக ஏற்று அவர்களின் கையில் அல்ஜீரிய ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கத் தீர்மானித்து அவசர அவசரமாக 'எவியன் ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டது. இவ் வொப்பந்தத்தின் பிரகாரம் பிரஞ்சுப்படைகளுக்கும் அல்ஜீரியத் தேசிய விடுதலை இராணுவத்திற்குமான போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பிரஞ்சு இராணுவம் அல்ஜீரியாவை விட்டுப்புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இக்காலகட்டத்தில் அண்ணளவாக இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான 'இயக்கக்காரர்கள்' (அல்லது ஹார்க்கிகள்) பிரஞ்சு இராணுவத்துடன் ஒத்துழைப்புச் செய்து கொண்டிருந்தார்கள்.

எவியன் ஒப்பந்தத்தின் இரண்டாவது அதிகாரம் எதிர்காலத்தில் அல்ஜீரியமக்களின் குடியுரிமைகள்பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருந்தது. நூற்று முப்பத்தியிரண்டு வருட காலங்களாக காலனியாதிக்கத்தின்போது அல்ஜீரியாவில் குடியேறி அந்நாட்டிலேயே வேரூன்றி விட்ட பிரஞ்சுப் பிரஜைகளின் எதிர்காலம் சம்பந்தமான தீர்மானங்களை இவ்வொப்பந்தங்கள் கொண்டிருந்தபோதும், பிரஞ்சுக்காரர்களுடன் ஒத்துழைத்து அல்ஜீரிய மக்களின் அடங்காத வெறுப்பைப் பெற்றிருந்த 'ஹார்க்கிகளின்' சார்பில் எதுவித பிரத்தியேகப் பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. அவர்களை முற்று முழுதாகப் பிரஞ்சு அரசு அலட்சியம் செய்தது. அவர்களைப் பொருட்டாகக் கூட பிரஞ்சு அரசாங்கம் மதிக்கவில்லை. ஆயுதம் களைந்து அவர்கள் எவ்விதப்பாதுகாப்பும் இன்றிக் கைவிடப்பட்டார்கள்.

பிரஞ்சு அரசாங்கம் தமது ஒத்துழைப்புப் படைகளைச் சேர்ந்த அல்ஜீரியர்களை பிரான்சுக்கு அழைத்துவரவேண்டும் எனும் திட்டத்தை மறுத்தது. சுயவிருப்பிலோ அல்லது சுயமுயற்சியிலோ இப்படையினர் எவரையும் பிரான்சுக்குள் அழைத்து வரக் கூடாதென அனைத்து பிரஞ்சுப்படை உயர் மட்டக் கட்டளை அதிகாரிகளுக்கும் இறுக்கமாகக் கட்டளையிட்டது. இவ்வாறாக தங்களுடன் ஒத்துழைத்த அல்ஜீரியத் துணைப் படைகளுக்கு ஆபத்து நிகழும் நிலையில் பிரஞ்சுப்படைகள் எக்காரணங்கொண்டும் அவர்களுக்கு உதவியளிக்கும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என பிரஞ்சு அரசாங்கம் ஆணையிட்டது. தமது இராணுவ முகாம்களை விட்டு வெளியேறிய பிரஞ்சுக்காரர்களின் இராணுவ லொறிகளின் பின்னால் ஓடித்தாவி ஏறி "எங்களையும் உங்களுடன் கொண்டு செல்லுங்கள்" என அலறிய ஹார்க்கிகளின் கையில் துவக்குப்பிடியால் இடித்து அவர்களை கீழே விழுத்தி விட்டார்கள் தமது மேலதிகாரிகளின் உத்தரவுக்குப் பணிந்த பிரஞ்சுச் சிபபாய்கள்.

> ஒரு தேசத்தின் விடுதலைப்போராளிகளை அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்கு அநேகமான அடக்குமுறையாளர்கள் அத்தேசத்தின் பிளவுகளைப்பயன்படுத்தி அத்தேசத்தின் இனத்தவர்கள் மத்தியிலுள்ள பலவீன உள்ளங்கொண்டவர்களையும், சுயநலத்திற்காக எதையும் செய்யத் தயங்காதவர்களையும் இனங்கண்டு அவர்களைத் தம்முடன் இணைத்து தம்மவர்களுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடுத்துவது வரலாறு கண்ட வழமை

தமது நாட்டு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அந்நிய எதிரிகளுடன் கூட்டிணைந்து போராட்டத்தைப் பின்னடையவைத்து, தமது மக்கள் எதிரிகளினால் அடக்குமுறைக்கும் சித்திரவதைக்கும் உட்படுவதற்கு உடந்தையாயிருந்தவர்களை, தமது மக்களையே எவ்வித இரக்கமுமின்றிக் கொன்றொழித்தவர்களை அவர்களைப் பயன்படுத்தியவர்கள் கூட மதிக்கவில்லை.

அல்ஜீரியத் தேசிய விடுதலை முன்னணி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதையடுத்து பிரஞ்சு அரசாங்கம் ஹார்க்கிகளைக் கைவிட்டுவிட்டது. அல்ஜீரியாவில் வசித்த தமது ஐரோப்பியப் பிரஜைகளை மீண்டும் நாட்டுக்கு வருவித்து அவர்களுக்குப் புனர் வாழ்வளிப்பதில் முனைப்புடன்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



ஈடுபட்டிருந்த பிரஞ்சு நிர்வாக உயர்பீடம் தமது முன்னைய ஒத்துழைப்பாளர்களுக்குப் பாதுகாப்பு எதுவும் இல்லையென்பதை நன்குணர்ந்திருந்தும் அவர்களை அடியோடு கைவிட்டுவிட்டது.

ஈடிணையற்ற உயிர்களைப் பலி கொடுத்து தமது தேச ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகப் போராடி அவர்களைப் பின்வாங்கவைத்திருந்த அல்ஜீரியத் தேசிய முன்னணியினதும் அவர்களது இராணுவமான அல்ஜீரியத் தேசிய விடுதலை இராணுவத்தினதும் நியாயமான சினத்தின் முன் கைவிடப்பபட்டார்கள் ஹார்க்கிகள்.

இதுவரையும் காட்டிக்கொடுத்து, கொன்று, சித்திரவதைசெய்து எதிரிகளுடன் ஒத்துழைத்துத் துரோகம் இழைத்தவர்கள் தமது துரோகங்களுக்குப் பரிசாக அல்ஜீரியர்களின் நியாயமான கோபக்கனல்களின் முன் ஆயுதங்கள் களையப்பட்டுக்கைவிடப்பட்டார்கள். இதைத்தொடர்ந்து 1962ம் ஆண்டு முடிவடைவதற்குமுன் அல்ஜீரிய மக்களும் அவர்களது இராணுவமும் கருணையிழந்து, பொறுமையிழந்து கடூரமான முறையில் நூறாயிரத்திற்கும் மேற்பட்ட ஹார்க்கிகளையும், அவர்கள் குடும்பங்களையும் கொடூரமாகக் கொன்றொழித்தார்கள்.

பிரஞ்சு அரசின் காலனித்துவப் போக்கிற்கு எதிராகவும் அல்ஜீரிய விடுதலை முன்னணியின் சார்பாகவும் குரலெழுப்பிய உலகறிந்த தத்துவஞானியும் மாக்ஸிஸ்டுமான சார்த்தர் கூட ஹார்க்கிகளின் படுகொலைக்கெதிராக எவ்விதக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. மூன்றாவது மண்டல நாடுகளின் விடுதலையை முன்வைத்துப் போராடிய அல்ஜீரிய போராட்ட ஆதரவாளரான பிரான்ஸ் பனோன் கூட இவ்விடயம்பற்றி எதுமே கூறவில்லை.

பிரெஞ்சு அரசின் மனப்பூர்வமற்ற இறுதிநேர அனுசரணையுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஹார்க்கிகள் பிரான்சுக்குள் அழைத்து வரப்பட்டு அவர்களுக்கெனப் பிரத்தியேகமாக நிறுவப்பட்ட முகாம்களுள் இருத்தப்பட்டார்கள். மொத்தத்தில் அல்ஜீரியாவிலிருந்து 25 ஆயிரம் ஹார்க்கிகளின் குடும்பங்கள் பிரான்சிற்கு அரைமனதுடன் காப்பாற்றிக் கொண்டுவரப்பட்டார்கள்.

பிரஞ்சுச் சமூகம் அவர்களை மதிக்கவில்லை என்பது மட்டுமல்லாது அவர்களை அவமதிக்கவும் செய்தது. அவர்களுக்கான முகாம்கள் குடிமனைகள் உள்ள இடங்களிலிருந்து தொலைவான இடங்களிலேயே அமைக்கப்பட்டன. ஒரு பகுதியினர் காடுகளுள்ளும் மறுபகுதியினர் நிலக்கரிச் சுரங்கங்களுள்ளும் வேலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

**ஹார்க்கிகளை அல்ஜீரியர்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். சிலவேளை அவர்களின் வழித்தோன்றல்கள் மன்னிக்கப்படக்கூடும். ஆனால் ஹார்க்கிகள் தமது தேசத்திற்கு இழைத்த துரோகத்தை வரலாறும் அல்ஜீரிய மக்களும் எக்காரணம் கொண்டும் மறக்கமாட்டார்கள்.**

'இந்த ஹார்க்கிகளிலிருந்து எம்மை விடுவிப்பதற்கு, நகரசபை என்ன திட்டத்தை வைத்திருக்கிறது' என எழுதியது ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகை. தமது நாட்டின் சுதந்திரப்போராட்டத்தை மறுத்தவர்களை பிரஞ்சு இடதுசாரிகள் கணக்கிலெடுக்கவில்லை என்பது மட்டுமல்லாது அவர்களுக்கெதிரான போக்கைக் கடைப்பிடித்தார்கள் என்பதும் என்பதும் உண்மையாகும்.

பிரஞ்சுக் கம்யூனிசக் கட்சி சார்பான பலம்மிக்க தொழிற்சங்கமான சி.ஜீ.ரி, தொழிற்சாலைகளில் ஹார்க்கிகளை வேலைக்குச் சேர்ப்பதற்கு நீண்டகாலமாக எதிர்ப்புத் தெரிவித்து வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று வரையும் அல்ஜீரியாவில் துரோகிகள் எனும் சொல்லால் அழைக்கப்படும் ஹார்க்கிகள் அந்நாட்டில் வேண்டப்படாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் அல்ஜீரியாவிற்குப் பயணிக்கும் உரிமையுமற்றவர்கள். பிரான்ஸில் கூட இன்றுவரையும் அவர்களின் நிலை தற்காலிகமானதாகத்தான் உள்ளது. பிரான்ஸில் இன்று வாழும் ஹார்க்கிகளினதும் அவர்களினது வழித்தோன்றல்களினதும் எண்ணிக்கை அண்ணளவாக நான்கு இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அல்ஜீரியாவிற்கும், பிரான்சுக்குமான பொருளாதார ராஜதந்திர உறவுகள் சுமூகமானவை. இரண்டு சுதந்திர நாடுகளுக்கிடையில் இருக்கக்கூடிய பல ஒப்பந்தங்கள் இவ்விரண்டு நாடுகளுக்குமிடையில் இருக்கின்றன. பிரஞ்சுக்காரர்கள் அல்ஜீரியாவிற்குப் பயணிக்கமுடியும். அல்ஜீரியர்கள் பலர் பிரான்சுக்குப் பயணிக்கிறார்கள். ஆனால் ஹார்க்கிகள் தம் நாட்டில்காலடி எடுத்து வைக்கமுடியாத நிலையிலுள்ளார்கள். பிரான்ஸில் அவர்கள் அந்நியர்கள். தம் தேசத்திற்குத் துரோகம் விளைவித்துவிட்டுத் தப்பியோடிவந்தவர்கள். அல்ஜீரியாவில் அவர்கள் துரோகிகள். அந்த நாட்டு மண்ணில் காலடி எடுத்து வைப்பதற்கு எவ்வித அருகதையும் அற்றவர்கள்.

அண்மையில் தற்போதைய அல்ஜீரிய தேசத் தலைவர் உத்தியோக பூர்வமாக பிரான்சுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது அவரிடம் 'ஹார்க்கிகளுக்கு' அல்ஜீரியாவிற்குப் மீண்டும் பயணிக்கும் உரிமை வழங்கப்படல் வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு அவர் அதற்கான காலம் இன்னமும் வரவில்லை என்றும் இரண்டாவது உலகப்போரின் போது தமது தேசத்தை ஆக்கிரமித்திருந்த நாசிகளுடன் ஒத்துழைத்தவர்களைப் பற்றி பிரஞ்சுக்காரர்கள் என்ன கருதுகிறார்களோ அப்படியொரு கருத்தையே அல்ஜீரியர்களும் 'ஹார்க்கிகள்' விடயத்தில் கொண்டுள்ளார்கள் என்றும் கூறிவைத்தார்.

ஹார்க்கிகளை அல்ஜீரியர்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். சிலவேளை அவர்களின் வழித்தோன்றல்கள் மன்னிக்கப்படக்கூடும். ஆனால் ஹார்க்கிகள் தமது தேசத்திற்கு இழைத்த துரோகத்தை வரலாறும் அல்ஜீரிய மக்களும் எக்காரணம் கொண்டும் மறக்கமாட்டார்கள்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



அன்பரசு

# உடையும் திருமண உறவுகள்

தமிழீழம் புதிய ரகப் பிரச்சனை ஒன்றை எதிர்கொள்கின்றது. அசுர வேகத்தில் வளரும் விவாகரத்து விகிதம் எமது சமுதாயக் கட்டமைப்பை உடைக்கும் வலுவுள்ளதாக அமைகிறது. முன்பு எம்மத்தியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிக அபூர்வமாக விவாகரத்துக்கள் நடைபெற்றன இப்போது விவாகரத்துக்கள் சர்வசாதாரணமாகிவிட்டன. திருமணம் சொர்க்கத்தில் நிட்சயிக்கப்பட்டாலும் அது சில சமயத்தில் பொருந்தா உறவாக அமைவதுண்டு உறவை முறித்துக்கொள்வது மேல் என்ற நிலை தோன்றுகிறது. ஆனால் நீதி மன்றம் வரை செல்வதற்கு சமூகப் பெரியோர்களும் நெருங்கிய உறவினர்களும் விடமாட்டார்கள் எது விதப்பட்டும் சமரசம் செய்து வைக்கமுயல்வார்கள். அது சரிவராவிட்டால் சிலகாலம் பிரிந்து வாழும்படி ஆலோசனை சொல்வார்கள் அவர்கள் ஒன்றிணையும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பார்கள் காலப்போக்கில் இத்தனையும் மாறிவிட்டன. விவாகரத்துக்கோரி நீதிமன்றம் செல்லும் போக்கு பெருகிவிட்டது. தடுப்பதற்கு யாருமில்லை எமது சமுதாயம் தனது பாரம்பரியங்களை இழந்துவிட்டது. தமிழினம் எதிர்நோக்கும் ஆபத்தை இது கட்டியம் கூறுகிறது.

வாழ்விலும் தாழ்விலும் சாவரை ஒன்றினைந்து வாழ்வோம் என்ற உறுதிமொழியோடு தொடங்கிய திருமண உறவு ஒரு புனிதமான உறவு என்று பண்டுதொட்டுக் கருதப்படுகிறது. திருமணச் சடங்குகள் இதை வலியுறுத்தின இப்போது தமிழீழ மக்கள் மத்தியிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழுறவுகள் மத்தியிலும் திருமண உறவைத் துச்சமாக மதிக்கும் போக்கு காணப்படுகிறது. அண்மையில் வவுனியா நீதிமன்றத்தில் ஒரே நாளில் எழுபத்தி மூன்று விவாகரத்து வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இது முதல் தடவையல்ல வவுனியா நீதி மன்றத்தில் மாத்திரமல்ல தமிழீழத்தில் பிற நீதிமன்றங்களிலும் விவாகரத்து வழக்குகள் எண்ணிக்கையில் உச்சம் அடைகின்றன. ஆனால் வவுனியா சாதனை படைக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மிகக் கூடுதலாகவும் நெருக்கமாகவும் வவுனியா அதன் சுற்றுப்புறம் ஆகியவற்றிலுள்ள அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்கின்றனர் இராணுவ நடவடிக்கைகள் இவர்களை இடம் பெயர வைத்துள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நடக்கும் ஆக்கிரமிப்பு அவர்களை சொந்த இடங்களை நோக்கிச் செல்லாமல் தடுக்கிறது. நாற்புறமும் அடைத்த வேலி, மறைவான கிணறு, கழிப்பு வசதி, சொந்த வீடு போன்றவற்றோடு வாழ்ந்த மக்கள் சுகாதாரமற்ற சூழலில் வாழ்கின்றனர். ஒரே மண்டபத்தில் உடுத்த சேலையை மறைப்பாகவும், எல்லைக் கோடாகவும் தொங்க விட்டுள்ளனர். அந்தரங்கம் என்பது கிடையாது வயது குறைந்த இரு பாலாரும் ஒன்றாகப் பழகும் வாய்ப்புக்கள் அதிகம் தோன்றுகின்றன. திருமணத்திற்கு முந்திய பாலியல் உறவுகள் கட்டாயத் திருமணத்தில் முடிகிறது. காதல் என்ற மயக்கம் இளவயதுத் திருமணத்திற்கு இட்டுச் செல்கிறது.

உடலும் உள்ளமும் முதிர்ச்சி அடையாத நிலையில் செய்யப்பட்ட திருமணம் பொருளாதார நெருக்கடி தோன்றும்போது எளிதில் முறிந்துவிடுகிறது. 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்று சொல்வார்கள் பண வசதி இல்லாதவர்களின் காதல் காற்றில் பறந்துவிடும் என்றும் சொல்லத் கேள்விப்பட்டிருக்கிறோம். முதல் பிள்ளை பிறந்தவுடன் குடும்பம் ஆட்டம் காண்பதாகச் சொல்வதில் நியாமில்லை பொறுமைவேண்டும் வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் மனவுறுதி வேண்டும் இளம்தம்பதிகளுக்கு இவை குறைவுதான் மந்தைகளைப் போல் ஒருவர்பின் ஒருவராக நீதி மன்றம் சொல்கிறார்கள். இதுவொரு நாகரிகமாகி விட்டது. இது தனி மனிதர் பிரச்சனை என்று ஒதுக்கிவிட முடியாது. இது ஒட்டுமொத்த சமுதாயத்தின் பிரச்சனை இராணுவ ஆக்கிரமிப்பு, கட்டாய இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்வு, பொருளாதாரச் சீரின்மை, இளவயதினர் மனதைக் கெடுக்கும் தமிழ்த்திரைப்படங்கள், மலிவுப் பிரசுரங்கள் போன்ற காரணிகளின் மொத்த வடிவமாக இப்பிரச்சனை தோன்றியுள்ளது. இதற்கு நாமே தீர்வு காணவேண்டும் தவறினால் இதற்குரிய விலையை நாமே கொடுக்கவேண்டும்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# தமிழீழத்தில் பிளாஸ்டிக் பைகள் - புரையோடுமுன் புண்ணுக்கு மருந்து போடலின் அவசியம்

தா.விவேகானந்தன்



எங்கு திரும்பினாலும் இந்தப் பிளாஸ்டிக் பைகள் வியாபித்துநிற்கின்றன. தென்னாபிரிக்காவில் அதன் தேசியப்பூக்கள் என வர்ணிக்கப் படுகின்றன. சீனாவிலே வீதிகளில் காற்றோடு அள்ளுப்பட்டுவரும் இவை வெள் ளைக்குப்பை என அழைக்கப்படுகின்றன. அயர்லாந்தின் கிராமப்புற வேலிகளெங்கும் சிக்கிப் படபடத்துக்கொண் டிருக்கிற இவை தேசியக்கொடி எனத் துயர்நகையா கப் பேசப்படுகின்றன. கென்யாவின் ருவாண்டாவின் நைஜீரியாவின் இன்னும் பல ஆபிரிக்க ஆசிய நாடுகளின் சேரிப்புறங்கள் பிளாஸ்டிக் பைகள் நிறைந்த குப்பைமேடு களை அண்டி சுகாதாரச் சீர்கேடுகள் மலிந்து நிற்கின்றன. ஏ- 9 பாதைத்திறப்போடு உலகமயமாக்கல் தமிழீழ மண் ணிலும் கால் பதிக்க, கூடவே அதன் பக்கவிளைச்சல் களாக இந்தப் பிளாஸ்டிக் பைகளும் வழமையைவிட அதிகமாக வலம்வரத்தொடங்கியாயிற்று.

இந்தப் பிளாஸ்டிக் பைகள் காற்றிலே பறக்கின்றன, புதர்களிலே கட்டித் தொங்க விட்ட சரங்கள் போல் தூங்குகின்றன, வேலி களிலே சிக்கிப் படபடக்கின்றன, நீர்நிலை களிலே மிதக்கின்றன, தேசத்தின் அழகிய தோற்றத்தினைக் குலைக்கின்றன. இந்தக் குப்பைகளுக்கு ஒரு முடிவுகட்ட உலகெங்கு முள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள். அரசாங் கங்கள் இதன் பாவனையைத் தடை செய்வதா அனுமதிப்பதா எனச் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. இத்தனைக்கும் காரண மான இந்தப் பிளாஸ்டிக் பைகளோ நவீன தொழிநுட்ப முன்னேற்றத்தாலும் உலகமய மாதலாலும் இயந்திரமயமாகி அவசரகதியில் இயங்கும் வாழ்க்கையில் இன்றியமையாத ஓர் பாகமாகிவிட்டது.

பாரமற்றது, பலமிக்கது, உற்பத்தி செய்ய இலகுவானது, உற்பத்திச் செலவு குறை வானது, எங்கும் எளிதில் கிடைப்பது, அநேக இடங்களில் இலவசமாகக் கிடைப்பது என ஏகப்பட்ட அனுகூலங்களால், இட்டு நிரப்ப முடியாத இடத்தை இவை வகிக்கின்றன.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

இவற்றின் நன்மை தீமைகள் குறித்து துறை சார் அறிஞர்கள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன. உண்மையில் ஒரு மூலப் பொருளாக நோக்குமிடத்து பிளாஸ்டிக் மிகப் பயன்படு தகைமையும் பெறுமதியும் கொண்டது என்பதில் மாற்றுக் கருத்தேதுமில்லை. மனிதன் அதனைச் சரியான பயன்பாட்டுக்கு உட்படுத்தவில்லை அல்லது அதன் பிற பயன்பாடுகள் குறித்துப் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதுதான் உண்மை. பொதி செய்யும் மூலப் பொருளாக பிளாஸ்டிக்கினைத் தேர்வு செய்து அதற்கே முன்னுரிமை அளித்தது ஒரு பிழையான நடைமுறை என்கிறார்கள் சில அறிஞர்கள்.

1960களில் பிரபலமான பிளாஸ்டிக்பைகள் அன்றிலிருந்து மக்களின் அசமந்தமான நுகர்வுப் போக்கால் பல்கிப்பெருகி இன்று தீர்க்க முடியாத சூழலியற் தலைவலி ஆகிவிட்டது. பிளாஸ்டிக் பைகள் பொருண்மிய நோக்கில் பல நன்மைகளைக் கொண்டிருந்தாலும் சூழலியல்நோக்கில் மீளத்திருத்தச் சிரமமான பல தீமைகளை விளைவிக்கின்றன, விளைவித்துக் கொண்டேயிருக்கப்போகின்றன. ஒருமுறை உற்பத்தி செய்யப்பட்டுவிட்டால் எங்கள் தலைமுறைப் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் எனப் பலதலைமுறை தாண்டி அவை மண்ணில் நிலைத்துநிற்கும். அவை சிதைவடைந்து மண்ணிற் சேர 1000 வருடங்கள் வரை ஆகலாம் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. இங்கே சிதைவடைந்து மண்ணிற் சேர்தல் என்பதில் அழுத்திக் குறிப்பிடப்படவேண்டிய முக்கிய விடயம் பிளாஸ்டிக் முற்றாகச் சிதைவடையாது: சிறுசிறு துகள்களாக மண்ணில் நிலைத்திருக்கும் என்பதே.

பிளாஸ்டிக் பைகள் எங்கும் பரவிகண்ணை உறுத்தும் அசிங்கமான சுகாதாரமற்ற சூழலை உருவாக்குகின்றன. இவற்றின் நீர் புகவிடாத தன்மை காரணமாக மழைக்காலங்களில் நீரேந்திநிற்கும் செயற்கைக் குட்டைகளாக இவை மாறுகின்றன. ஆபிரிக்க நாடுகளில் குவிந்துகிடக்கும் பொலித்தீன் பைகள் மழைக்காலங்களில் ஏக்கர் கணக்கான பரப்பளவு கொண்ட நீர்த்தேக்கங்களுக்குச் சமனாக மாறி நுளம்புகள் முட்டையிட்டுப் பல்கிப் பெருகும் இடங்களாகின்றன. 2004 நோபல் சமாதானப் பரிசினை வென்ற கென்யாவின் கலாநிதி வன்காறி மாத்தாய் மலேரியாவைக் கருவறுப்பதானால் பிளாஸ்டிக் பைகள் தொடர்பான உறுதியான நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும் என்கிறார்.

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதில் பெரும்பாலான வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறை மண்ணில் புதைத்தலாகும். மண்ணில் புதைக்கப்படும பிளாஸ்டிக் பைகள் சேதனமுற்று மண்ணில் சேர்வதற்கு நீடித்த காலம் எடுக்கிறது. இந்த இடைப்பட்ட காலப் பகுதியில் மண்ணில் தங்கியிருக்கும் இவை இயற்கையான நீர் வடிதலைத் தடை செய்வதால் வெள்ளப்பெருக்கிற்கான சாத்தியப்பாட்டை அதிகரிக்கச்செய்கின்றன. அதேநேரம் பிளாஸ்டிக் சேதன முறும்போது வெளிவிடப்படும் ரசாயனப் பதார்த்தங்களால் மண்ணின் வளம் பெருமளவில் குன்றிப்போகிறது.

மூன்றாம் உலகநாடுகளின் பொருண்மிய வளர்ச்சியால் வேலைவாய்ப்புகள் தேடி மக்கள் பெருநகரங்களுக்கு நகர்வதால் ஏற்படும் நெரிசலும் இடநெருக்கடியும் காரணமாக ஏற்கனவே பழமையான உட்கட்டமைப்புக்கள் குறிப்பாக வடிகாலமைப்புக்கள் புதுப்பிக்க முடியாத இக்கட்டான சூழலில் சனநெரிசலில் பிதுங்கி வழியும் இந்நகரங்களுக்கு பிளாஸ்டிக் பைகள் மழைக்காலங்களில் பெரும்பொருளிழப்பையும் உயிர்ச் சேதத்தையும் விளைவிக்கின்றன. நகரவடிகால்களை பிளாஸ்டிக் பைகள் அடைத்துவிடுவதால் ஏற்படும் பாரிய வெள்ளப்பெருக்குகளுக்கு சமகாலப்பகுதியிலேயே பல எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும். 1988, 1998 பங்களாதேஷில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, இந்த வருடம் மும்பையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, என்பவற்றின் சூத்திரதாரி பிளாஸ்டிக் பைகள் என அவதானிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பைகளை எரியூட்டுதல், கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ஒரு முறையாகப் பல நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் எரிக்கப்படும்போது வெளிவிடப்படும் டையொக்ஸின் எனும் ரசாயனக் கழிவு மிகச்சிறிய அளவில் உள்ளெடுக்கப்பட்டாலும் கூட அதிஉயர்ந்த நச்சுத்தன்மையைப் பயக்கும் சக்தி வாய்ந்தது. சூழலில் வெளித்தள்ளப்படும் டையொக்ஸின் அற்றுப்போவதற்கு நீண்ட காலம் எடுப்பதுடன் உடற்கலங்களில் சேர்வதால் புற்றுநோய் அபாயம், கருவிலுள்ள குழந்தைகளின் ஓமோன்கள் பாதிக்கப்படும் அபாயம் எனத் தீங்குகளின் விளைநிலமாகி விடுகிறது. ரசாயனத் தொழிற்சாலைகளுக்குள் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளே கார்சினோஜன் எனப்படும் புற்றுநோயை உருவாக்கும் ரசாயனப்பொருளை அதிகளவில் வெளியேற்றுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியது.

ஏறத்தாழ உலகின் கடற்பரப்புக்கள்யாவும் பிளாஸ்டிக் பைகள் மழைநீரோடு கழுவப்பட்டு கொண்டுவரப்படுவதால் பிளாஸ்டிக்மயமாகி விட்டது. சிந்தெற்றிக் சீ ( synthetic sea ) எனும் ஆவணப்படம் ஒன்றை அண்மையில் பார்த்த போது, பாவித்தபின் வீசியெறியும் பண்பாட்டின் அவலங்களை பிளாஸ்டிக்கைத் தவிர வேறு எதுவும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவுபடுத்தமுடியாது என்பதை உணர்ந்தேன். ஆல்கலிற்றா கடல்சார் ஆய்வு மையம் தயாரித்த அந்த ஆவணப்படத்தில் அந்தாட்டிக் சமுத்திரத்தை அண்டிய கடற்பகுதியிற் கூட பிளாஸ்டிக் பைகள் மிதக்கின்றன. பசுபிக் சமுத்திரத்தின் குறிப்பிட்ட கடற்பகுதியொன்றில் ஆய்வுக்காக எடுக்கப்பட்ட கடல்நீர் மாதிரியைப் பகுப்பாய்வு செய்கிற போது ஒரு றாத்தல் பிளாங்ரன் உயிரிகளுக்கு ஆறு றாத்தல் பிளாஸ்டிக் துணுக்குகள் என்ற விகிதாசாரத்தில் கடல்நீர் மாசுபட்டிருக்கிறது. பிளாஸ்டிக் சிதைவடையும் துறையில் நிபுணரான கலாநிதி அந்தனி என்கிளாடியன் உலகில் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு துண்டு பிளாஸ்டிக்கும் இன்றும் இனியும் நிலைத்திருக்கும் என்கிறார். எந்த உயிரினத்தாலும் உயிரியப் பொறியியலாலும் எந்த பக்டீரியாவாலும் எதனாலும் பிளாஸ்டிக்கைச் சிதைவடையச் செய்யமுடியாதென்கிறார் அவர்.



நெதர்லாந்தில், விஞ்ஞானிகள் இறந்த 382 பறவைகளின் வயிற்றுப் பகுதியிலிருந்த பொருட்களை ஆராய்ந்தபோது 367 பறவைகளில் பிளாஸ்டிக் பைகளின் துணுக்குகள் காணப்பட்டன. இதேபோல ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நெருக்கடிமிக்க நகர்ப்புறப்பகுதிகளில் மனிதர் வீசும் கழிவுகளை உண்டு வாழும் கால் நடைகளுக்கும் இவை உணவாகும் அவலம் நிகழ்கிறது.

பிளாஸ்டிக் பைகளின் அதிஉச்சமான தாக்கம் கடல்சார்வாழ்விலேயே அதிகம் உணரப்பட்டிருக்கிறது. அப்பாவியான விலங்கின் உணவாக மாறி அதன் உயிருக்கு உலைவைக்கும் பிளாஸ்டிக் பை அந்த விலங்கு இறந்து சிதைந்தபின்பும் தான் அழியாதிருந்து அடுத்துவரும் விலங்குக்கு உணவாகி எமனாகி என ஒரு தொடர்கொலையாளியாகத் தொழிற்படுகி



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



**வீடு தான் உலகம் என்று வாழ்ந்த காலம் போயிற்று. இன்று உலகமே வீடாகச் சுருங்கிவிட்டது. உலகம் எமது வீடு என்கிற உரிமையுணர்வு எமக்குள் வந்தாகவேண்டும். போகிற போக்கிலே வீசிவிட்டுப் போகிற எதுவும் இயற்கையைப் பொறுத்தவரையில் சுவரில் எறிந்த பந்தாய் எம்மிடமே மீண்டும் வரும் சூழலியற் பிரச்சினைகளாய் என்பதை மனதில் வைப்போம்**



றது. பிளாஸ்டிக் பைகளினால் அதிகம் பலியாகும் கடலாமைகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. கடல்வாழ் உயிரிகளான ஜெலிபிஷ் எனும் வழுவழுப்பான உயிரினமே கடலாமையின் முக்கிய உணவாகும். இந்தப் பிளாஸ்டிக் பைகள் ஜெலிபிஷ்சை ஒத்திருப்பதால் கடலாமைகள் அவற்றை உண்டு மூச்சுத்திணறி இறக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ ஒரு லட்சம் திமிங்கிலங்கள், சீல் எனப்படும் கடல்நாய்கள், கடலாமைகள் மற்றும் பிற கடல்சார் விலங்குகள் பிளாஸ்டிக் பைகளால் கொல்லப்படுகின்றன என பிளானெட் ஆர்க் எனும் சர்வதேச சூழியற் குழுமம் தெரிவிக்கிறது. நெதர்லாந்தில், விஞ்ஞானிகள் இறந்த 382 பறவைகளின் வயிற்றுப் பகுதியிலிருந்த பொருட்களை ஆராய்ந்தபோது 367 பறவைகளில் பிளாஸ்டிக் பைகளின் துணுக்குகள் காணப்பட்டன. இதேபோல ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நெருக்கடிமிக்க நகர்ப்புறப் பகுதிகளில் மனிதர் வீசும் கழிவுகளை உண்டு வாழும் கால் நடைகளுக்கும் இவை உணவாகும் அவலம் நிகழ்கிறது.

பெற்றோலியம் என்பது மீள உருவாக்கப்பட முடியாத அருகிவருகின்ற தொல்லியல் படிவு எரிபொருளாகும். போட்டிபோட்டுக்கொண்டு வளரும் வளர்முகப் பொருளாதாரங்கள் எரிபொருள் தேடி ஆனைப்பசியுடன் புறப்பட்டிருக்கும் இன்றைய சூழலில் பிளாஸ்டிக் பைகளை உருவாக்க பெற்றோலியம் விரயமாக்கப்படுகின்றது. பெற்றோலியத்திலிருந்து கிடைக்கும் பொலிமெரிலிருந்து தான் பிளாஸ்டிக் பைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு பையைத் தயாரிக்கப் பயன்படும் எரிபொருளுடன் ஒரு மகிழுந்தை பதினொரு மீற்றர்கள் செலுத்தமுடியும் என்கின்றனர் சூழியல் விஞ்ஞானிகள்.

பிளாஸ்டிக் பைகளின் பெருக்கத்தால் சமூகம் சார்ந்த விலைகளும் கொடுத்தாக வேண்டியுள்ளது. பல ஆசிய ஆபிரிக்க மத்திய அமெரிக்க நாடுகளில் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கியுள்ள மக்கள் இந்தப் பிளாஸ்டிக் பைகளைப் பொறுக்கிவிற்கின்ற அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வேர்ல்ட்வின் போன்ற தொண்டுநிறுவனங்கள் மேலை நாடுகளில் நிதிசேகரிப்பதற்காக குப்பைமேடுகளில் பிளாஸ்டிக் பைகள் பொறுக்கும் குழந்தைகளை தொலைக் காட்சித்திரைகளில் காண்பிப்பது பழகிப்போன ஒன்றாகிவிட்டது. குப்பை பொறுக்குவோர் ஒரு சமூகப்பிரிவாக அவர்களிடமிருந்து பைகளை வாங்கிவிற்கும் ஏமாற்றுவியாபாரிகள் என ஒரு பாதாளப் பொருளாதாரம் அங்கு உருவாகிறது.

பிளாஸ்டிக் பைகளின் ஆக்கிரமிப்பு என்பது மக்களின் திருப்திப்படுத்தமுடியாத பாவனைப் பண்பாடு, அசட்டையான போக்கு, சூழல் பற்றிய விழிப்புணர்வின்மை என்பன போன்ற பல்வேறு காரணிகள் ஒன்றுசேர்ந்து உருவான சாபம் என்றே சொல்லவேண்டும். பிளாஸ்டிக் பைகள் தமது அமோக வெற்றியின் காரணமாக தமக்கே குழிபறிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பையொன்று 0.01 அமெரிக்க டாலர் என மிகமிக மலிவான செலவில் உற்பத்தி செய்யப்படுவதால் சில்லறை விற்பனையாளர்கள் பையின் செலவைத் தமது விற்பனைப் பொருட்களின் விலைக்குள் அடக்கிவிடுகின்றனர். இது, பைகள் நுகர்வோருக்கு இலவசமாக கிடைப்பதுபோல் தோற்றுவதால் அவர்கள் அதை விலைமதிப்பற்ற பொருளாக நினைத்து மீளப் பயன்படுத்துவதை மிகக் குறைத்து வீசிவிடுகின்றனர். இந்த நச்சு வட்டத்தில் பைகளின் குறைந்தளவு விலையானது அவற்றை உருவாக்கப் பயன்படும் மூலப்பொருளைக்குறைக்கத்தூண்டுவதால் தரமற்ற மீள்பயன்படு தகைமை குறைந்து பைகள் உற்பத்தி செய்யப்பட ஏதுவாகிறது.

அமெரிக்காவில் மட்டும் பிளாஸ்டிக் தொழிற்துறையின் பொலித்தீன் பிலிம், தாள்கள், பைகள் உற்பத்திப்பிரிவானது ஒரு வருடத்தில் 26 பில்லியன் டாலர்களுக்கு மேலான விற்பனையைச் செய்கிறது. அதே வேளை பிளாஸ்டிக் பைகள் பாவிக்கப்படும் எண்ணிக்கையும் விண்ணை முட்டுகிற வேகத்தில் உயர்கிறது. ஹொங்ஹொங்கில் ஆண்டு தோறும் கால் பில்லியனுக்கும் மேலான பைகள் பாவிக்கப்படுகின்றன. சன்பிரான்சிஸ்கோவில் 50 மில்லியனுக்கும் மேலாகவும் கென்யாவில் 300 மில்லியனுக்கும் மேலாகவும் பாவிக்கப்படுகின்றன. அமெரிக்கா முழுமையாக ஆண்டுதோறும் 100பில்லியனுக்கும் மேலான பிளாஸ்டிக் பைகள் உபயோகிக்கப்படும் அதேவேளை 0.6 வீதமான பைகளே அங்கு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. ஒரு சராசரி இந்தியக்குடிமகன் ஒரு வருடத்தில் உபயோகிக்கும் பைகளின் நிறை 1 கிலோ எனவும் உலகம் முழுவதும் ஒரு வருடத்தில் உபயோகிக்கும் பைகளின் நிறை 18 கிலோ எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு தான் உலகநாடுகள் பல உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன. அயர்லாந்து பிளாஸ்டிக் பைகளுக்கு பிளாஸ் ராக்ஸ் எனப்படும் 15 சத வரியை அறவிட ஆரம்பித்துள்ளது. இந்த மேலதிக வரிவிதிப்பால் பைகளின் பாவனை 90 வீதத்தால் குறைவடைந்திருக்கிறது. வரி விதிப்பால் பெறப்படும் பணம் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்று வழிகளைக் காணவும் ஏனைய சூழலியற் பிரச்சினைகளைத் தீர்க்கவும் பயன்படுத்தவென பசுமைநிதியமொன்றில் வைப்பிலிடப்படுகிறது. சென்ற மாதம் ஸ்கொட்லாந்திலும் இந்த வரி அறவிடும் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கியராச்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் வரிவிதிப்பை விரிவுபடுத்த கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதை ஒத்த நகர்வு ஒன்றின் மூலம் டென்மார்க் பிளாஸ்டிக் பைகளின் பாவனையில் 66 வீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் பிளாஸ்டிக் பைகளுக்கான சில ஒழுக்காற்றுச் சட்டமூலங்களை ஆலோசித்து



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

வருகின்றன. சில ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. தென்னாபிரிக்காவிலே 30 மைக்ரோனுக்கும் குறைவான கனதியுடைய பைகளைத் தடை செய்யும் சட்டமூல மாதிரியைப் பின்பற்றி கென்யாவிலும் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் பிளாஸ்டிக் பைகளின் பாவனையைக் குறைக்கும் அரசின் தன்னார்வத் திட்டத்தில் 90 வீதமான விற்பனையாளர்கள் தம்மை இணைத்துக்கொண்டுள்ளனர். இத்திட்டமானது இவ் வருடத்தினுள் பைகளின் பாவனையை 25வீதமாகக் குறைக்கவும் அடுத்த வருடத்தில் 50 வீதமாகக் குறைக்கவும் உறுதிபூண்டுள்ளது. பைகளின்பாவனை இலக்கினை விற்பனையாளர்கள் எட்டாவிடில் ஒவ்வொரு பையிற்கும் 25 சத வரியை விதிக்கப் போவதாக அவுஸ்திரேலிய அரசு எச்சரித்துள்ளது. சில அவுஸ்திரேலிய நகரங்கள் எல்லா விற்பனை நிலையங்களிலும் பைகளின் பாவனையை முற்றாகத் தடை செய்துள்ளன. வேறு சில நகரங்கள் பிளாஸ்டிக் அற்ற நகரம் எனும் சுலோகத்தை முன்வைத்துச் செயலில் இறங்கியுள்ளன. சென்ற ஆண்டு தாய்வானில் நடைமுறைக்கு வந்த சட்டம், பல்பொருள் அங்காடிகள் மற்றும் சிறுவணிகங்களின் பாவனையாளர்களிடம் பிளாஸ்டிக் பைகளுக்கான கட்டணத்தை அறவிட வழிசெய்ததன் மூலம் அங்கு பிளாஸ்டிக் பாவனையில் 69 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என செய்தியறிக்கைகள் கூறுகின்றன. பங்களாதேஷ் பிளாஸ்டிக் பைகளின் பாவனையை முற்றாகத் தடைசெய்துள்ளது. அதற்குப் பதிலாக சணற்பைகளை பாவிப்பதை ஊக்குவித்துள்ளது. இதனால் நலிவடைந்து போயிருந்த சணல் ஆலைகள் மீளெழுச்சி கண்டுள்ளன. பிளாஸ்டிக் தலையிடிக்கு சரியான மாற்றுமருந்துகளில் ஒன்றாக சணல் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உலகநாடுகள் பிளாஸ்டிக் பைகளின் பிரச்சனைக்கு இவ்வாறான பல நடவடிக்கைகளை எடுத்துவரும் இன்றைய சூழலில் நாமும் அத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும். பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றீடாக உள்ளூர் மூலப் பொருட்களை இனங்கண்டு அறிமுகப் படுத்துதல் முதலாவதும் முதன்மையானதுமான பணி. பனையோலை, தென்னோலை, பன்புல், பிரம்பு போன்ற மூலப்பொருட்களைக் கொண்டு வெற்றிகரமான பைத் தயாரிப்பு முறைகளை ஆய்வுகள் மூலம் கண்டடைவதன் மூலம் குடிசைக் கைத்தொழில்கள் உயிர்பெறும் அதேவேளை விகிதாசாரப்படி அதிகம் பயன்படுத்தப்படாத பெண்களின் மனிதவளம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உறுதுணையாகிநிற்க ஏதுவாகிறது. பங்களாதேஷின் சணற் பைகளின் வெற்றியை நாம் கவனிக்கவேண்டும். இங்கு நெல்வயல்களில் நைதரசனைப் பதிப்பதற்காகச் சணல் பயிரிடப்படுவது சில இடங்களில் வழமையாயுள்ளது. இதையே தொழில்ரீதியாகப் பயிரிட்டு நவீனத் தொழிநுட்பத்துடன் கூடிய சணல் ஆலைகளை நிறுவி சணற்பைகளை பிளாஸ்டிக் பைகளுக்கு சிறந்த உரு மாற்றீடாகக் கொண்டுவரமுடியும்.

தென்னாபிரிக்காவில் ஜெனி கோர்க்லன்ட் என்ற பெண்மணி வீசப்படும் பிளாஸ்டிக் பைகளைப் பாவித்து அழகிய கைவேலைப்பாட்டுடன் கூடிய தொப்பிகள், கைப்பைகள் என உருவாக்க ஆரம்பித்தார். இன்று 132 பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுடன் ஏற்றுமதிசெய்யும் வாய்ப்புப் பெற்ற ஒரு தொழிலாக அது வளர்ச்சிபெற்றிருக்கிறது. சூழலில் வீணே கிடந்து வினையாகும் பிளாஸ்டிக் பைகளை சற்று நீடித்த பாவனைக்குரிய பொருட்களாக மாற்றுதல் ஒரு தற்காலிகத் தீர்வேயாயினும் வரவேற்கத்தக்கதே. ஏனெனில் சூழல் மாசடைதலின் வேகம் சற்றேனும் குறைவடைய அது உதவுகிறது.

மீள் பயன்பாடுடைய வழிமுறைகள் குறித்துப் போதிய கவனம் செலுத்தப்படவேண்டும்.பொதிசெய்யப் பயன்படும் பொருட்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும்போது சூழலில் விடப்படும் கழிவுகளின் தொகை கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது. முன்னைய காலங்களில் நீடித்த பாவனைக்கேற்ற ஆடியக்குவளைகளில் பால் போன்ற திரவங்கள் அடைக்கப்பட்டன. ஒரு ஆடியக்குவளை அதன் வாழ்நாளில் 17லிருந்து 70 தடவைகள் தொழிற்சாலைக்கும் நுகர்பவருக்கும் இடையே இருவழிப்பாதையாகப் பயணித்தது. இன்று பல்தேசிய நிறுவனங்கள் வந்தபின்னர் பொதிசெய்யப் பயன்படும் பொருட்களின் எதிர்காலச் சேர்விடம் குறித்து அவை அலட்டிக் கொள்வதேயில்லை. தொழிற்சாலையிலிருந்து நுகர்பவரைச் சென்றடைவதுடன் ஒருவழிப் பாதையாக அதன் பயணம் முடிவடைகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான பல்தேசிய நிறுவனங்களை நாம் அனுமதிக்க நேர்ந்தால் மீள்பயன்பாடுடைய பொதிய மூலங்களை அவை உபயோகிப்பதைக் கட்டாயமாக்கவேண்டும்.

பிளாஸ்டிக் பைகளின் பாவனையைக் குறைப்பதில் வணிகர்கள் சிறப்பான பங்கினை ஆற்றமுடியும். சூழலைப் பேணுவதில் தன்னார்வத்துடன் இயங்கும் வணிகங்கள் விளம்பரமின்றியே மக்களின் கவனத்தை தம்பால் ஈர்க்கமுடியும். தமது வணிகங்களின் விளம்பரமும் சூழலைப் பேணும் செய்தியும் பொறித்த மீள்பயன்பாடுடைய பொதியங்களை அறிமுகப்படுத்துவதால் தமது தனித்துவத்தை செலவு குறைவாக விளம்பரப்படுத்த முடியும். மேற்கத்தைய நாடுகளின் பல்பொருள் அங்காடிகள் முறை பிளாஸ்டிக் பைகளின் பாவனை அதிகரிப்பிற்கு ஒரு காரணம். எங்கள் நாட்டின் திறந்தவெளிச் சந்தை முறை வாடிக்கையாளரைத் தமது சொந்தப் பொதியங்களைக் கொண்டுவரத் தூண்டுகின்றன. எந்தப் பொருளையெடுத்தாலும் பிளாஸ்டிக் பொதிசெய்யப்பட்டு வரும் அவலம் எங்கள் சந்தைகளில் இல்லாதிருந்தது. எங்கள் திறந்த வெளிச் சந்தை முறை காலமாற்றத்தில் அடிபட்டுப்போகாமலும் அதேவேளை காலமாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையிலும் மாற்றியமைக்கப் படலாம்.

தமிழீழத்திற்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கிற ஒரு விடயம் அது முற்றாக மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டியிருப்பது தான். நெருக்கடியான நகர வலைப்பின்னலோ உட்கட்டமைப்புகளோ அநேகமாக இல்லாத சூழலில் சூழல் மாசு குறித்த ஏராளமான உலகநாடுகளின் கசப்பனுபவங்களைப் படிப்பினையாக உள்வாங்குவதன் மூலம் மிகச்சிறந்த சூழலியல் முகாமைத்துவத்தை நாம் கடைப்பிடிக்கமுடியும்

தமிழீழத்திற்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கிற ஒரு விடயம் அது முற்றாக மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டியிருப்பது தான். நெருக்கடியான நகர வலைப்பின்னலோ உட்கட்டமைப்புகளோ அநேகமாக இல்லாத சூழலில் சூழல் மாசு குறித்த ஏராளமான உலகநாடுகளின் கசப்பனுபவங்களைப் படிப்பினையாக உள்வாங்குவதன் மூலம் மிகச்சிறந்த சூழலியல் முகாமைத்துவத்தை நாம் கடைப்பிடிக்கமுடியும். பாதகமாக அமைந்த விடயம் தமிழீழம் ஒரு சிறிய தீவிற்குள் அமைந்திருப்பது தான். ஏனெனில் சூழலியல் தொடர்பான அசட்டையான போக்கின் விளைவுகள் பரந்த பெருநிலப்பரப்பிலும் பார்க்க சிறிய தனித்தமைந்த தீவுகளில் உடனடியாக உணரப் படலாம்.

எனவே மக்கள் தாம் வாழும் சூழலியல் குறித்து விழிப்புடன் இருக்கக் கற்பிக்கப்பட வேண்டும். இது குறிப்பாகக் குழந்தைப் பருவத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். அங்கிருந்து சூழல் பற்றிய விழிப்புணர்வு சகல தட்டு மக்களிடமும் சென்றுசேர வேண்டும். வீடு தான் உலகம் ஏ்ன்று வாழ்ந்த காலம் போயிற்று. இன்று உலகமே வீடாகச் சுருங்கிவிட்டது. உலகம் எமது வீடு என்கிற உரிமையுணர்வு எமக்குள் வந்தாக வேண்டும். போகிற போக்கிலே வீசிவிட்டுப் போகிற எதுவும் இயற்கையைப் பொறுத்த வரையில் சுவரில் எறிந்த பந்தாய் எம்மிடமே மீண்டும் வரும் சூழலியற் பிரச்சினைகளாய் என்பதை மனதில் வைப்போம். உலகெங்கும் தலைவிரித்தாடும் பிளாஸ்டிக் விருட்சம் தமிழீழத்தில் முளைவிடும்போதே கிள்ளி எறிவோம்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# அருந்ததி

அன்பரசு

சிங்கப்பூர் பயணிகள் விமானசேவையின் ஏ- 380 எயார்பஸ் விமானம் இலண்டன் வந்தடைந்தது. வல்லி வெளியே வந்தாள். பலமுறை வந்து போனபடியால் அவளுக்கு ஒன்றும் புதிதாகத் தோன்றவில்லை. மிக விரைவாக உள்வரவு நடைமுறைகளை முடித்துக்கொண்டு அவள் பிரயாணப் பெட்டிகளை மீட்கும் பகுதிக்கு வந்தாள். சற்றுக் கனமான தனது ஆடைப் பெட்டியைத் தூக்கித் தள்ளுவண்டியில் வைத்தபோது அது கைதவறி கீழே விழுந்தது. பக்கத்தில நின்ற இளைஞன் அதை எடுத்துது தள்ளு வண்டியில் வைத்தபின் தானே அதைத் தள்ளிக் கொண்டு வந்தான். அவனுக்கு நன்றி கூறிவிட்டு "நீ எங்கிருந்து வருகிறாய்" என்று ஆங்கிலத்தில் கேட்டாள். "சிங்கப்பூர்" என்று அவன் ஒற்றைச் சொல்லில் பதில் கூறினான். " சிங்கப்பூரா? அதுதான் உன்னுடைய வாழ்விடமா? என்று வல்லி அவனை வினாவினாள். அவன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான் ஆனால் அவனால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியவில்லை. அவனுக்கு அருகில் அறிவு இருந்தாலும் பேச்சுதான் குறைவாக இருந்தது, என்றாலும் தன்னைப் பற்றிச் சொல்லிமுடித்துவிட்டான்.

"நான் யாழ் நகர் டேவிற் றோட்டைச் சேர்ந்தவன் கடந்த சில மாதங்களாக ஒரு சிங்கப்பூர் கட்டிடக் கொம்பனியில் படம் கீறும் வேலை செய்கிறேன். ஆறு மாதப் பயிற்சிக்கு என்னை இலண்டன் அனுப்பியிருக்கிறார்கள்" இருவரும் வெளியே வந்து விட்டார்கள். பேச்சு அத்தோடு நின்றுவிட்டது, வல்லியைக் கண்டதும் "அக்கா" என்று கூறியபடி ஒரு பெண் ஓடிவந்து அவளை இறுக்க தழுவிக் கொண்டாள் "நிஷா,நிஷா" என்று வாய்க்கு வாய் சொல்லியபடி தனது இளைய தங்கையை வல்லி கட்டி அணைத்தாள் அதன்பின் நிஷாவுக்குப் பின்னால் நின்ற ஆங்கிலேயரைக் கண்டதும் "வணக்கம் அத்தான்"என்று வல்லி தமிழில் கைகூப்பியபடி சொன்னாள். அவரும் தனது பங்கிற்கு வணக்கம் வல்லி என்று தமிழில் கூறிவைத்தார். ஆர்தர் வில்சன் என்ற அவர் நிஷாவின் கணவர்.

விடைபெறுவதற்குத் தரணம் பார்த்தபடி அந்த இளைஞன் இவற்றைப் பார்த்தபடி ஒரு பக்கத்தில் நின்றான். "யார் இந்தப் பொடியன்" என்று கேட்பதுபோல் நிஷா தனது அக்காவைக் கண்களால் வினாவினாள் அதுதான் சரியான நேரம் என்று தீர்மானித்த அவன் "அம்மா என்னை அழைத்துப் போவதற்கு கொம்பனி முகவர் வந்துவிட்டார். நான் போய் வாறன்" என்று தமிழில் தயங்காமல் சொன்னான். "தம்பி வார இறுதி நாட்களில் உமக்கு வசதி



ஒளிப்படம்: ஜீவகுமார்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

இருந்தால் எங்கள் வீட்டிற்குச் சாப்பிட வாரும். போன் பண்ணினால் நல்லது" என்று சொல்லியபடி தனது முகவரி, தொலைபேசி விவரம் அடங்கிய அட்டையை அவனிடம் நிஷா கொடுத்தாள்.

ஆர்தர் வில்சன் ஒரு சுத்தமான கலப்பற்ற ஆங்கிலேயர் ஆனால் தாய் தந்தை பெயர் தெரியாத அனாதை. இங்கிலாந்தின் புகழ்பெற்ற டாக்டர் பார்னாடோ அநாதை இல்லத்தில் குழந்தைப் பராயம் தொட்டு வயது வரும் வரை வளர்ந்தவர். கன்னித் தாய்மார்கள் சமூகப்பிரச்சினை காரணமாகத் தாம் பெற்ற குழந்தைகளை அநாதை இல்ல வாயிலில் யாரும் அறியாமல் விட்டுச்செல்லும் வழக்கத்தை ஒரு காலத்தில் கொண்டிருந்தனர். இப்போது நாடு முன்னேறி விட்டது. சமூக விதிமுறைகளும் மாறிவிட்டன. திருமணமாகாத தாய்மார்கள் என்ற பெண்ணினம் மேற்கு நாடுகளில் காணப்படுகிறது. பெரும்பாலானோர் சிறந்த வருமானமுள்ள உயர்தொழில் பார்க்கின்றனர். திருமணமாகாமல் பெற்ற பிள்ளைகளை மிகவும் நேர்த்தியாகப் பராமரிக்க அவர்களால் முடிகிறது.

ஆர்தர் வில்சன் என்ற பெயரை டாக்டர் பார்னாடோ அநாதை இல்லம் அவருக்கு குழந்தைப் பருவத்தில் வழங்கிவிட்டது. அவருடைய பிறப்புச் சான்றிதழ் பெற்றார் பெயர் விவரம் குறிப்பிடப்படவில்லை. அநாதை இல்லத்தின் பொறுப்பில் அவருக்கு கல்வி வழங்கப்பட்டது. அவர் படிப்பில் தீவிர அக்கறை காட்டினார். உயர்கல்வி கற்கும் வாய்ப்பும் அதற்கான அரசின் உதவிப் பணமும் அவருக்குக் கிடைத்தன. அவர் மருத்துவப் படிப்பை மேற்கொண்டார். குழந்தை நோய்த் தடுப்புத் துறையில் விசேட சித்தியும் இத்துறைசார் நிபுணர்களின் ஆதரவும் அவருக்குக் கிடைத்தன. காலப்போக்கில் அவர் இத்துறையில் மிகச் சிறந்த நிபுணர்களில் ஒருவராக வளர்ச்சி பெற்றார்.

நிஷா சிங்கப்பூரில் இருந்து மருத்துவப் படிப்பிற்காக இலண்டன் வந்தவள். அவளுக்குப் பெற்றார் இட்ட பெயர் மகேஸ்வரி சிறுவயதில் கூடப்படித்த பள்ளிச் சிறுமிகள் அவளை நிஷா என்று அழைத்தார்கள். அது அவளுடைய பெயராக மாறிவிட்டது. இப்போது நிஷா மகப்பேற்று நிபுணராக இலண்டன் மாநகரில் பிரபல மருத்துமனையில் பணியாற்றுகிறாள். செய்யும் தொழிலில் மிகவும் கெட்டிக்காரி, வேகமாகச் செயற்படும் துணிச்சல்காரி அத்தோடு கைராசிக்காரி என்ற நியாயமான புகழ் அவளுக்கு உண்டு. ஒருமுறை இலண்டன் அமெரிக்கத் தூதரகத்தை சேர்ந்த இடைநிலை அதிகாரியின் மனைவிக்கு கடும் பிரசவ வேதனை தீவிர உணவுக் கட்டுப்பாடு காரணமாக உடற்பலம் குறைந்த நிலை. ஆனால் சிகிச்சை செய்வதா, இல்லையா என்று மருத்துவர்கள் தமக்குள் வாதிட்டனர். சில சமயம் குழந்தை அல்லது தாயின் உயிர் பிரியலாம் என்றும் அபிப்பிராயம் சொல்லப்பட்டது. இழுபறிக்கு முடிவுகட்ட நிஷாவிடம் யோசனை கேட்கப்பட்டது, அவள் பரிசோதனைக்குத் தயாரானபோது பிரசவ வேதனையில் துடித்த பெண்ணின் கணவன் "இந்த டாடக்கடர் என் மனைவியைத் தொடக்கூடாது. அப்படி என்ன வெள்ளை டாக்டர்களுக்கு தட்டுப்பாடா?" என்று பெரும் குரலில் கூச்சலிட்டான்.

நிஷாவின் உதவியாளரான மூத்த தாதிப் பெண்ணுக்கு கடுங்கோபம் ஏற்பட்டது, "நான் சொல்வதைக் கேள் மனிதா! டாக்டர் நிஷா வில்சனுக்கு நிகரான மகப்பேற்று நிபுணரை தற்சமயம் இலண்டனில் காணமாட்டாய். என்று அந்த வெள்ளை மாது அவனுக்கு முகத்தில் அடித்தற்போல் சொன்னாள். சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு அவனுடைய மனைவியைக் கொண்டு செல்லும்படி நிஷா உத்தரவிட்டாள். பிரசவ வேதனையை நிறுத்த மயக்க மருந்து ஊசியைக் கொடுக்கும்படி தாதிப் பெண்ணை நிஷா பணித்தாள். சில நிமிடங்களில் அறுவைச் சிகிச்சை தொடங்கிவிட்டது. வயிற்றின் வலது பக்கத்தில் இடுப்பிற்கு சற்று மேற்புறமாக மேலிருந்து கீழாக ஒரு வெட்டுப் போட்டாள். அதனூடக குழந்தையை நிஷா வெளியே எடுத்தாள். தாயும் சேயும் நலம் என்று கண்டுணர்ந்த அமெரிக்கன் நிஷாவின் காலில் விழாத குறையாக மன்னிப்புக் கோரி நன்றி தெரிவித்தான்.

இருவரும் பணியாற்றிய மருத்துவ மனையில் நடந்த பல்துறைசார்ந்த மருத்துவ நிபுணர்கள் ஒன்றுகூடலில் நிஷாவும் ஆர்தர் வில்சனும் முதன்முறையாகச் சந்தித்தனர். அவர் ஒன்றிலும் கடுமையாக ஈடுபடாமல் ஒதுங்கியிருந்தார். பார்க்க நன்றாக இருக்கிறார். இளைஞராகவும் தோன்றுகிறார். ஏன் இப்படி விலகிப் போகிறார் என்று நிஷா எண்ணத் தொடங்கினாள். அதன்பின் அவரிடம் தானாகவே சென்று பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள். தன்னை யாரோ தேடிப் பேச வந்ததை அவர் வரவேற்றார். சிறிது நேரத்தில் அவருக்கு ஏதோ மனசுமை இருப்பதை நிஷா உணர்ந்தாள். தன்னால் அதை நீக்க முடியுமா என்றும் அவள் சிந்தித்தாள். ஒன்றுகூடல் முடிந்த நாளுக்குப்பின் அவருடனான சந்திப்புக்களை நிஷா ஏற்படுத்தினாள் டாக்டர் ஆர்தர் வில்சனை நிஷா தத்து எடுத்து விட்டாள் என்ற பேச்சு மருத்துவ வட்டாரத்தில் கிளம்பியது. அது விரைவில் உண்மையாகி விட்டது.

"என்னை உனது கணவனாக ஏற்றுக் கொள்வாயா?" என்று ஒரு பெண்ணை மனைவியாக அடைய விரும்பும் ஆண்மகன் கேட்பது மேற்குநாட்டு பாரம்பரியம் குடும்ப வாழ்க்கை தொடக்கி வைக்கும் முக்கிய கேள்வி என்று இதை வர்ணிப்பார்கள். ஆர்தர் வில்சனுக்குத் துணிச்சல் போதாது கேட்க விரும்பினாலும் அவரால் அதைக் கேட்க முடியவில்லை. அவருக்காக நிஷாதான் கேட்கவேண்டியதாயிற்று. பெரு மகிழ்ச்சியுடன் அவர் சம்மதம் தெரிவித்தார். நிஷாதான் அவருடைய கொழுகொம்பு. அவருக்கு அவள்தான் எல்லாம். நிஷாவின் உறவினர்களை அவர் தனதாக்கினார். சில தமிழ்ச் சொற்களைப் பேசவும். தமிழ் உணர்வுகளைச் சுவைக்கவும் அவர் ஆரம்பித்தார்.

நிஷாவின் அக்கா வேதவல்லிக்கு வயது நாற்பதிற்கும் மேலாகிவிட்டது. இன்னும் திருமணம் ஆகவில்லை, தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். கேம்பிறிச் பல்கலைகழகத்தில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து முதுமாணிப்பட்டம் பெற்றதோடு வழுவூரில் பரதமும் கற்றுத் தேர்ந்தாள். உருவத்தில் அவள் கலை உலகைச் சேர்ந்தவள் என்பது புலப்படும். அழகும், நளினமும் நிறைந்த வல்லி கடினமான ஜதிகளை கொண்ட வர்ணங்களை களைக்காமல் ஆடுவதில் வல்லவள் சிங்கப்பூர் பல்கலைகழகத்தில் கணித விரிவுரையாளராகப் பணியாற்றும் வல்லி, வார இறுதி நாட்களில் செரங்கன் வீதியிலுள்ள தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில் இலவசமாக பரதம் கற்றும் கொடுக்கிறாள். மேட்டுக்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

குழாமினர் வாழும் பகுதியில் ஒக்சாட் வீதியில் அவளுக்குப் பெற்றார் கொடுத்த வீடும் நிலமும் இருக்கிறது. அவளுக்கு துணையாக அச்சுதன் என்ற வயோதிபரும் அவருடைய மனைவியும் அந்த வீட்டின் ஒரு பக்கத்தில் வாழ்கின்றனர்.

சகோதரிகளின் பெற்றோர் ஒரு விமான விபத்தில் இறந்து பல வருடங்களாகிவிட்டன. தாயையும் தந்தையும் ஒரே நாளில் இழந்து விட்டார்கள். தந்தை சேனாதிபதிராஜா யாழ் குடாநாட்டின் உரும்பிராய் கிராமத்தை சேர்ந்தவர். குடும்பத் தொழிலான புகையிலைச் செய்கை மற்றும் வியாபாரத்தில் ஈடுபடாமல் இளவயதிலேயே கல்வியில் நாட்டம் கொண்டவர். அவருடைய மூத்த சகோதரியின் கணவர் ஒரு பள்ளி ஆசிரியர் அவருடைய ஊக்குவிப்பும்இருந்தது. பல்கலைக்கழகம் புகுந்து பொறியல் பட்டம் பெறுமளவுக்கு அவருடைய வளர்ச்சி கண்டது. தொடர்மாடிகள், அணைக்கட்டுக்கள், பாலங்கள் போன்ற கட்டுமானங்களை ஒப்பந்த அடிப்படையில் நிறுவும் ஒரு சிங்கப்பூர் நிறுவனத்தில் அவருக்கு எடுத்த எடுப்பிலேயே பணிநிலை கிடைத்தது. கடும் உழைப்பும் அவர் சிங்கப்பூர் நாட்டிற்குப் பெற்றுக்கொடுத்த வருவாய் காரணமாகவும் அவருக்கு எளிதில் அந்த நாட்டின் குடியுரிமை கிடைத்தது.

ஒரு ஞாயிறு இரவு நிஷா சாப்பிட அழைத்த இளைஞன் வில்சன் தம்பதியினர் வீட்டிற்கு வந்தான், பெயர் சில்வெஸ்ரர் மாட்டின். நிஷாவின் பிள்ளைகள் மூன்றும் மேல்மாடியில் தங்கி விட்டனர். மூத்தது இரண்டும் படித்துக்கொண்டிருந்தனர். கடைசி, வயசில் மிகச் சிறியது தொட்டிலில் உறங்கியது. தன்னைப்பற்றி விரிவாகச் சொன்னால் மரியாதையாக இருக்கும் என்று சில்வெஸ்ரார் மாட்டின்.நினைத்தான். ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கிவிட்ட பறங்கி இனத்தைச் சேர்ந்தவன் என்று அறிமுகஞ் செய்தான். ஒரு காலத்தில் யாழ்நகர் பிரதான வீதியை அண்டிய பகுதியில் நிறைய பறங்கியர் வாழ்ந்தனர். பிரானவீதியின் பழைய பெயர் பறங்கித்தெரு. தனிச் சிங்களச் சட்டம் வந்தபின் வெள்ளைத்தோலும் பணவசதிமுள்ள பறங்கியர்கள் அவுஸ்ரேலியா, கனடா, இங்கிலாந்து நாடுகளுக்கு சென்றுவிட்டனர். எங்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மட்டக்களப்பு பார்வீதியில் எம்மவர்கள் வாழ்கிறார்கள் . கொழும்பிலும் இருக்கிறார்கள் ஆனால் எம்மோடு தொடர்பு வைப்பதில்லை. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் நகரங்களில் வாழும் பறங்கியர்கள் நிறத்திலும் பணத்திலும் குறைந்தவர்கள். நாங்கள் எமது தமிழர்களாக மாறி வருகிறோம். நாம் தமிழ் பேசுகிறோம், படிக்கிறோம், தமிழுணர்வோடு வாழுகிறோம். எமது இளைஞர்கள் சிறுவயதிலே வேலைக்குப் போகிறார்கள். என்போன்றோர் விதிவிலக்கு என்று சில்வெஸ்ரார் கூறி முடித்தான். என்ன யோசித்தானோ தெரியல்லை, யாழ்ப்பாணத்துப் பறங்கியர்கள் தமிழ்ப் பெயர்களையும் தமிழ்ப்பெண்களையும் திருமணம் செய்யும் வேகத்தைப் பார்த்தால் நாம் விரைவில் மறைந்து விடுவோம் என்று கவலையுடன் சொன்னான்.

“நாங்கள் சிங்கப்பூரில் பிறந்தாலும் எங்களுக்கும் யாழ்ப்பாணத் தொடர்பு உண்டு” என்று நிஷா சிறிது பெருமையோடு சொன்னாள். “அப்பாவும் அம்மாவும் உரும்பிராய் பிள்ளையார் கோயிலடியில் பிறந்தவர்கள் எந்தப் பிள்ளையார் கோயிலடியில் பிறந்தவர்கள். எந்தப் பிள்ளையார் கோயிலில் என்று மாத்திரம் கேட்கவேணட்டாம்.” என்றாள் முன்னெச்செரிக்கையாகச் சில்வெஸ்ராருக்கு வியப்பாக இருந்தது. “உரும்பிராயா? யாழ்ப்பாணப் பக்கம் எந்த வருடம் போனீர்கள் உங்களுக்கு இடம்பிடிச்சுதா? ” என்று கேள்விக்குமேல் கேள்வியாகக் கேட்டான்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது “சொன்னால் நம்ப மாட்டீர் தம்பி. அக்காவும் நானும் ஒரு முறையாவது அங்கை போனது கிடையாது. ஆனால் எங்களோடு கூடப் பிறந்த தங்கச்சி அங்கதான் ஒரு வருடமாய் நிற்கிறாள். என்றாள் டாக்டர் நிஷா வில்சன் “அம்மா குறை நினைக்க வேண்டாம், உங்களுடைய தங்கச்சி அங்கை என்ன செய்யிறா?” என்று மெதுவான குரலில் சில்வெஸ்ரார் கேட்டான்.

“கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால்தான் உமக்கு விளங்கும் தம்பி” என்றாள் வல்லி. “நாங்கள் மூன்று பேரும் அம்மா, அப்பா இறந்தபின் சிங்கப்பூரில் ஒன்றாக இருந்தோம். மருத்துவ படிப்புக்கு நிஷாவும். கணிதப் படிப்பிற்கு நானும் இலண்டன் வந்துவிட்டோம். அருந்ததி சின்னப்பெண் நாங்கள் போகின்ற இடமெல்லாம் கொண்டு திரிந்தோம், படிப்பிலே நல்ல கெட்டிக்காரி. விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் காட்டினாள். நான் சிங்கப்பூரில் தங்கிய காலத்தில் அவளை என்னோடு வைத்துக்கொண்டேன். தாயைப்போல் அவளைக் கவனித்தன்” என்று சொல்லி வேதவல்லி கண் கலங்கினாள்.



“நடந்ததை நான் சொல்லுகிறன்” என்றாள் நிஷா, “அருந்ததிக்கு அப்ப வயது இருபது இருக்கும். ஒரு விடுமுறைக்கு அக்காவும் அருந்துவும் என்னிடம் வந்தார்கள். திடீரென்று அத்தானையும் வைத்துக்கொண்டு அவள் ஏதோ சொன்னாள். நாங்கள் அதிர்ச்சியில் உறைந்து போனம். சில நாட்களில் அவள் சொன்னபடி செய்துவிட்டாள். சந்தோஷமாக விடைபெற்றுக் கொண்டு விமானம் ஏறிவிட்டாள். இப்போ வன்னிப் பகுதியில் எல்.ரி.ரி.ஈ இராணுவ அணியில் அருந்து இருக்கிறாள்.” என்று தனது உணர்ச்சியை வெளிக்காட்டாமல் நிஷா சொன்னாள்.

“அம்மா, அருந்ததி அக்காவைப் பற்றிக் கவலைப் படாதையுங்கோ. இப்ப இளையதலைமுறை நன்றாகச் சிந்திக்க தொடங்கிவிட்டது” என்றான் சில்வெஸ்ரர். “என்னுடைய தம்பி ஜோசப், நான் அம்மாவுக்கு வேற பிள்ளை இல்லை. அப்பா மாட்டின் அசல் டீசல் மெக்கானிக். தம்பி படிப்பை நிறுத்திப்.0போட்டு அப்பாவுக்கு உதவியாக நின்றவன். நல்லாய் வேலை செய்யவும் தொடங்கிவிட்டான். சொல்லாமல் கொள்ளாமல் ஒருநாள் எல்.ரி.ரி.ஈயில் சேர்ந்துவிட்டான். அப்பா அவனைத் தேடிப் போனார். கூட்டி வரல்ல. போய் விட்டாய், நின்று பிடி, திரும்பி வராதை என்று அப்பா அவனுக்குச் சொன்னாராம். பலாலித் தாக்குதலில் என்ரை தம்பி வீரச்சாவடைந்தான். அவனுடைய வித்துடல் கூடத் திரும்பிவரவில்லை.”



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் - 2005



தமிழீழம்

ஐக்கிய அமெரிக்கா





ஜேர்மனி





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் - 2005

## அவுஸ்திரேலியா





## கனடா





## டென்மார்க்





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

## பின்லாந்து





## பிரான்ஸ்





## இத்தாலி





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# உலகெங்கும் மாவீரர்நாள் நிகழ்வுகள் - 2005

## பிரித்தானியா



## நெதர்லாந்து





## நோர்வே





https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

தென்னாபிரிக்கா






சுவிற்சலாந்து





சுவீடன்






https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



## ஐக்கிய நாடுகள் சபையின் 'தகவல் சமுதாய உலக உச்சி மாகாநாடு'

16 நவம்பர் 2005

ஐக்கிய நாடுகள் சபையின் 'தகவல் சமுதாய உலக உச்சி மகாநாடு' 16.11.2005 அன்று முதல் 18.11.2005 அன்று வரை துனிசியாவின் தலை நகரான துனிசில் நடைபெற்றது. இதில் ஐ. நா. சபையின் நூற்றுத் தொண்ணுூற்று ஒரு அங்கத்துவ நாடுகளும், சர்வ அரசாங்க நிறு வனங்களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் அத்துடன் தகவல் சமுதாய உலக உச்சி மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபை யினால் அனுமதிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களும், விசேட வர்த்தக அமைப்புகளும் கலந்து கொண்டன. உச்சி மகாநாட்டில் உத்தியோகபூர்வமாக கலந்து கொண்ட பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் சமர்பிக்கப்பட்ட மனு மற்றும் அறிக்கை யானது "தகவல் பரிமாற்றம் என்பது, எந்தவித வேறுபாடுகள் வேற்று மைகள் இன்றி, சமனாக சகலரையும் சென்றடைய கூடிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் கலாச்சார, இன, மொழி வேறுபாடுகளின்றி தகவல் சமுதாயம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இப்படியான அடிப்படைகள் அற்ற முறையில் கட்டியெழுப் பப்படும் தகவல் சமுதாயம் என்றும் உலகில் தீய போக்குகளுக்கே வழிவகுக்கும்." எனும் சாரம்சத்தைக் கொண்டிருந்தது.

## சிறீலங்காவின் அரசுத் தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றி



18 நவம்பர் 2005

ஸ்ரீலங்காவின் ஐந்தாவது அரசுத் தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ஸ நாடளாவிய ரீதியில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

வாக்கு விபரங்கள்:

மகிந்த - 50.33%
4,880,950 வாக்குகள்

ரணில் - 48.4% -
4,694,623 வாக்குகள்

## தலைமை அமைச்சராக மீண்டும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவு

21 நவம்பர் 2005

ஸ்ரீலங்காவின் 14வது தலைமை அமைச்சராக ரட்ண சிறி விக்கிரம நாயக்க பதவி ஏற்றுள்ளார். 21.11.2005 அன்று அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் அரசு தலைவர் மகிந்த ராஜபக்ஸ முன்னிலை யில் அவர் தலைமை அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

## தாயக மண்மீட்புப்போரில் இதுவரை 17,903 மாவீரர்கள் வீரச்சாவு

24 நவம்பர் 2005

தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் விபரங்கள் புள்ளிவிபர ரீதியாக வெளியிடப்பட்டுள்ளன. தமிழீழ மாவீரர் பணிமனை வெளியிட்டுள்ள மாவீரர் மாவீரர்களின் தொகுப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளிகளின் எண் ணிக்கை 17 ஆயிரத்து 903 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 263 பேர் கரும்புலி மாவீரர்கள், 279 பேர் எல்லைப்படை மாவீரர்கள் ஆவார். கரும்புலி மாவீரர்களில் தரைக்கரும்புலிகள் 79 பேர். கடற்கரும்புலிகள் 184 பேர். அவர்களில் 69 பேர் பெண் கரும்புலி மாவீர்களாவர். எல்லைப்படை மாவீரர்களில் ஐவர் பெண்களாவர்.

மாவட்ட ரீதியிலான புள்ளிவிபரங்களின்படி யாழ்ப்பாண மாவட் டத்தினைச் சேர்ந்த 6557 மாவீரர்களும், மட்டு -அம்பாறை மாவட்டத்தி னைச் சேர்ந்த 4634 மாவீரர்களும், வன்னி மாவட்டத்தினைச் சேர்ந்த 2538 மாவீரர்களும், திருமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 1527 மாவீரர் களும், முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த 1305 மாவீரர்களும், மேலும் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த மாவீரர்களும், வேறு மாவட்டத்தினைச் சேர்ந்த மாவீரர்களும் அடங்குகின்றனர்.

## ஆனையிறவில் பிரமாண்டமான மாவீரர் நினைவாலயம் திறந்துவைப்பு

25 நவம்பர் 2005

தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு 25.11.2005 அன்று ஆனை யிறவில் 3000 ஆயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களின் திருவுரு வப்படங்களுடன் பிரமாண்டமான மாவீரர் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## தலைவரின் பிறந்தநாளில் இனிப்புக்களை பரிமாறி மக்கள் மகிழ்வு

26 நவம்பர் 2005

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் 26.11.2005 அன்று தமது 51 ஆவது அகவையினை நிறைவுசெய்வதை முன்னிட்டு தாயகத்தில் மக்கள் இனிப்பு வகைகளை பரிமாறி மகிழ்வெய்தி னர். பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், பணிபுரியும் அலுவலகங் களிலும் வணிக நிலையங்களிலும் அன்று காலை தொடக்கம் இனிப்பு வகைகளை வழங்கி பரிமாறிக்கொண்டனர். பாடசாலைகளிலும் ஆசிரி யர்கள், மாணவர்கள் இனிப்புக்களை வழங்கி தலைவரது பிறந்த நாளை கொண்டாடினர்.

## தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் திறந்து வைப்பு

26 நவம்பர் 2005

தமிழீழத் தனியரசுக் கட்டுமானத்தின் மற்றுமோர் மைல் கல்லாக 26.11.2005 அன்று கிளிநொச்சியின் அறிவியல் நகரில் தமிழீழ கால நிலை அவதானிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழீழ நிர்வாக சேவையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.



மாவீரர் நாள் நிகழ்வில் தேசியத் தலைவர் மாவீரர்களிற்கு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தினார்

27 நவம்பர் 2005

வன்னியில் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட இடமொன்றில், நடைபெற்ற தமிழீழ தேசிய மாவீரர் நாளின் இறுதி நிகழ்வுகளில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் முதன்மைப் பொதுச் சுடரினை ஏற்றி, முதல் மாவீரன் சங்கரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, அகவணக்கம் செலுத்தினார்.

## கடலிலே காவியமான மாவீரர்களுக்கான சுடர் தமிழீழ கடற்பரப்பில் ஏற்றப்பட்டது

27 நவம்பர் 2005

கடலின் மடியிலே சாவினை தழுவிய மாவீரர்களிற்கான சுடர் 27.11.2005 அன்று முல்லைக் கடற்பரப்பில் ஏற்றி வைக்கப்பட்டது. இதன்போது கடற்புலிகளுக்கு சொந்தமான அலங்கரிக்கப்பட்ட படகில் ஆரம்பித்த இந்நிகழ்வில் கடற்புலி மாவீரர்களுக்கான பொதுச்சுடரினை கடற்புலி களின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைத்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடற்புலி களின் தளபதிகள் போராளிகள் பொதுமக்கள் எனப் பெருந்திரளா னோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வினை ஆயிரக்கணக்கான மக் கள் கரையோரப்பகுதியில் இருந்து கண்டுகளித்தனர்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும்
பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்றனர்

27 நவம்பர் 2005

தமிழீழ தேசிய மாவீரர் நாள் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்திருக்க பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் முதன்மைச் சுடரினை விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

யாழ்.குடாவில் கதவடைப்பு: இயல்புநிலை முற்றாகப் பாதிப்பு

02 டிசம்பர் 2005

யாழ். நீர்வேலிப் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவ ஒட்டுக்குழுவினரால் இரு விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து 02.12.2005 அன்று யாழ். குடாவில் மக்கள் அமைப்புக்களினால் நடாத்தப்பட்ட, கதவடைப்பு மற்றும் பணிப்புறக்கணிப்பின் காரணமாக யாழ். குடா நாட்டின் இயல்புநிலை முற்றாகப் பாதிப்படைந்தது.

யாழில் தொடரும் குண்டுத்தாக்குதல்களில் 5 படையினர் படுகாயம்

02 டிசம்பர் 2005

சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு பகுதியான யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் 02.12.2005 அன்று இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களினால் ஐந்து சிறீலங்காப் படையினர் படுகாயம் அடைந்துள்ளனர். சாவகச்சேரி, மீசாலை, அல்லாரை, வலிகாமம் குப்பிளான் ஆகிய இடங்களில் ஏழு குண்டுத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நடேசனை சந்தித்தார்

03 டிசம்பர் 2005

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் 03.12.2005 அன்று கிளிநொச்சிக்கு வருகை தந்த தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் திரு பா.நடேசன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். தமிழீழக் காவற்துறையின் நடுவகப்பணியகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் திருமதி ஐரின்கான் அவர்களும் அவரது குழுவினரும் கலந்து கொண்டனர்.

யாழில் படையினருக்கெதிராக தொடரும் தாக்குதல்கள்
ஒருவர் பலி, ஐவர் படுகாயம்

04 டிசம்பர் 2005

யாழ். நீர்வேலியில் அப்பாவி விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து யாழ். குடாவில் படையினருக்கு எதிராக நடைபெற்றுவரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் ஒரு படையினன் கொல்லப்பட்டதுடன், மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

திருநெல்வேலியில் கிளைமோர் தாக்குதலில்
ஆறு இராணுவத்தினர் பலி மேலும் நால்வர் காயம்

04 டிசம்பர் 2005

திருநெல்வேலியில் இராணுவ உழவுயந்திரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் காரணமாக ஸ்தலத்திலேயே ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நான்கு இராணுவத்தினர் ஆபத்தான நிலையில் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் சொல்லப்பட்டனர்.

நீர்வேலி மினிமுகாம் பகுதியில் நேரடி மோதல் - படையினன் பலி

04 டிசம்பர் 2005

யாழ். நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை மினி முகாம் மீது 04.12.2005 அன்று மாலை 6.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களினால் தாக்குதல் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பிற்குமிடையே நேரடி மோதல் இடம்பெற்றது. இதன்போது தமது தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்தது. ஆனால் கொல்லப்பட்ட நான்கு படையினரின் சடலங்களைத் தாம் பார்த்ததாக பொது மக்கள் தெரிவித்திருந்தனர்.

யுத்த நிறுத்தத்திற்கு இராணுவப்புலனாய்வுத்துறை
பங்கம் விளைவிக்கின்றது - ஐ. நா பிரதிநிதியிடம் நடேசன்

05 டிசம்பர் 2005

தமிழீழ காவற்துறையின் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகளுக்கான சிறப்பு ஆலோசகர் திரு. பிலிப் அல்ஸ்ரன் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். 05.12.2005 அன்று இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழீழ காவற்துறையின் செயற்பாடுகள், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை கலந்துரையாடினார்கள்.

வத்திகானின் பிரதிநிதி தமிழீழம் வருகை

05 டிசம்பர் 2005

வத்திகான் நாட்டின் பிரதிநிதி ஒருவர் 05.12.2005 அன்று வன்னிக்கு வருகை தந்திருந்தார். அன்று காலை 7.30 மணியளவில் முகமாலை சோதனை சாவடியூடாக வருகை தந்த இவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பார்வையிட்டுள்ளார்.

இருபாலையில் கிளைமோர் தாக்குதலில் ஏழு படையினர் பலி

06 டிசம்பர் 2005

யாழ் இருபாலை கட்டைப்பிராயில் கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகில் 06.12.2005 அன்று காலை 10 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தின் உழவூர்தி மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஏழு சிறீலங்கா படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் சிக்கிய உழவூர்தி தூக்கி வீசப்பட்டு முற்றாக எரிந்துள்ளது.

கருணா குழுவைச் சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளிடம் சரண்

06 டிசம்பர் 2005

அம்பாறை மாவட்டம், கஞ்சிக்குடியாற்றில் 06.12.2005 அன்று அதிகாலை 2.20 மணியளவில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரண்களிற்கு முன்னால் வைத்து கருணா கும்பலின் முக்கியதஸ்தர்களான இனியபாரதி மற்றும் சுமன் உள்ளிட்ட நால்வரை, அவர்களுடன் சேர்ந்து வந்த இருவர் சுட்டுக்கொன்று விட்டு விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர். கருணா கும்பலில் அங்கம் வகிந்திருந்த ஞானதீபன் மற்றும் புகழ்வேந்தன் ஆகியோரே இவ்வாறு சரணடைந்தவர்களாவர்.

குண்டு வெடிப்பு ஒருவர் பலி, ஐவர் காயம் - வவுனியாவில் சம்பவம்

07 டிசம்பர் 2005

வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகில் 07.12.2005 அன்று மாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டுள்ளார். ஒரு சிப்பாய் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறையில் கைக்குண்டுத் தாக்குதல்:
3 அதிரடிப் படையினர் உட்பட 7பேர் காயம்

08 டிசம்பர் 2005

அம்பாறை மாவட்டம், விநாயகபுரம் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறீலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று சிறப்பு அதிரடிப் படையினர் உட்பட ஏழுபேர் காயமடைந்துள்ளனர்.



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

## இரு சகோதரிகள் கோரமாக கொலை

08 டிசம்பர் 2005

அம்பாறை மாவட்ட கஞ்சிகுடியாறு பகுதியில் வைத்து இனியபாரதி உள்ளிட்ட நான்கு தேசவிரோதிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டு விடு தலைப் புலிகளிடம் தஞ்சமடைந்த இருவரில் ஒருவரான புகழ் வேந்தனின் இரு சகோதரிகள் 08.12.2005 அன்று அதிகாலை மட்டக் களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் உள்ள அவர்களின் வீட்டில் வைத்து தேசவிரோதிகளால் கோராமாக கொலை செய்யப்பட்டனர்.



முல்லைத்தீவில் ஹான்ட்ஸ் பிறட்ஸ்கர்

08 டிசம்பர் 2005

08.12.2005 அன்று முல்லைத்தீவு பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும். மீள்கட்டுமான வேலைத்திட்டங்களை யும் சிறிலங்காவிற்கான நோர்வே தூதுவர் ஹான்ட்ஸ் பிறட்ஸ்கர் பார்வையிட்டார்.

## வன்னியில் மழை, வெள்ளத்தில் பாதிப்புற்றோருக்கு மூன்று மில்லியன் வழங்குகிறது நோர்வே

09 டிசம்பர் 2005

அண்மைய மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களின் நல்வாழ்விற்காக மூன்று மில்லியன் ரூபாய்களை வழங்க நோர்வே அரசு முடிவு செய்துள்ளதாக நோர்வே தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்ச்செல்வன் - ஹான்ஸ் பிரஸ்கர் சந்திப்பு

09 டிசம்பர் 2005

வன்னியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்காவிற்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், கிளிநொச்சியில் உள்ள விடு தலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். 09.12.2005 அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பில் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்செயல்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப் பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டுப்பற்றாளர்கள் இருவரின் புகழுடல்கள் விதைக்கப்பட்டன

10 டிசம்பர் 2005

வந்தாறுமூலை பலாச்சோலையில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் களான யோகராசா யோகேஸ்வரி, யோகராசா வதனி ஆகிய இருவரது புகழுடல்கள் 10.12.2005 அன்று மாலை இலுப்படிச்சேனையில் நாட்டுப் பற்றாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள நாட்டுப்பற்றார் துயிலுமில் லத்தின் புனித விதைகுழியில் விடுதலைப் புலிகளின் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. முன்னதாக இருவரது உடல்களும் இலுப்படிச்சேனைப் பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. அங்கு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள் போராளிகள் அஞ்சலி செலுத்தி னர்.

## மட்டக்களப்பில் கிளைமோர் தாக்குதல் - இரு படையினர் பலி

12 டிசம்பர் 2005

மட்டக்களப்பு மாவட்டம், வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்கு அரு கில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையி னர் மீது 12.12.2005 அன்று காலை 7.40 மணியளவில் மேற்கொள்ளப் பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் இரு படையினர் இதன்போது கொல்லப்பட்டதாக சில உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக் கின்றன.

## மன்னாரில் காவல்துறையினர் மீது தாக்குதல்: 20 பேர் படுகாயம்

12 டிசம்பர் 2005

மன்னார் மாவட்டம், பேசாலைப் பகுதியில் 12.12.2005 அன்றிரவு 9.30 மணியளவில் சிறீலங்கா காவல்துறையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மன்னார் மாவட்ட உதவி காவல்துறை பொறுப்பதிகாரி உட்பட இருபது வரையான காவல்துறையினர் படு காயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவில் கருணா! தமிழ்த்தேசிய விரோத நடவடிக்கைகளிற்கு டக்ளஸ் வழிகாட்டல் - புலிகளிடம் சரணடைந்தவர்கள் தகவல்

12 டிசம்பர் 2005

தேசத்துரோகி கருணா தற்போது இந்தியாவில் தங்கியிருப்பதாகவும், கருணா கும்பலின் தேசவிரோத நடவடிக்கைகளிற்கு ஈபிடிபி கும்பலின் தலைவர் டக்ளஸ் தேவானந்த அடிக்கடி தொடர்பு கொண்டு ஆலோசனைகளை வழங்கி வந்ததாகவும் இனியபாரதி உள்ளிட்ட நால்வரைச் சுட்டுக்கொன்று விட்டு விடுதலைப் புலிகளிடம் சரண டைந்த புகழ்வேந்தன் மற்றும் ஞானதீபன் ஆகியோர் ஊடகவியலாளர் களிடம் தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பில் இருவர் ஒட்டுக்கும்பலால் சுட்டுக்கொலை

12 டிசம்பர் 2005

சிறீலங்கா படைகளுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுவினால், மட்டக் களப்பு மாவட்டம், கிரான் பகுதியில் வைத்து 12.12.2005 அன்றிரவு இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். தம்பிமுத்து தம்பிராசா(29) மற்றும் கந்தசாமி சந்திரன்(22) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் இளைஞர் துன்புறுத்தல்! சிறீலங்கன் எயார்லைன்ஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு!

13 டிசம்பர் 2005

கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தமக்கு சுகவீனம் ஏற்பட்டு, வானூர்தியிலிருந்து இறங்கி சிகிச்சை தருமாறு கோரிய போது காவற்துறையினர் தம்மை தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோ கம் செய்ததாகவும், சித்திரவதை செய்ததாகவும், சிறையில் தடுத்து வைத்ததாகவும், பிரான்சின் நோர்மண்டி பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் பிரான்சுக்கு திரும்பியதும் முறைப்பாடு செய்துள்ளார்.

நன்றி: சங்கதி


https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு

Tel: 01 - 43 58 11 42 Fax: (33) 1 43 58 11 91 e.mail: info@erimalai.info

ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

www.erimalai.info

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/




ஒளிப்படம்: ஜீவகுமார்

https://tamileelamarchive.com/